www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1-15 ஏப்ரல் '90
5 - 10
விலை ரூ.2

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

## கொலைகாரப் படைக்கு அனுதாபம் ஏன்?




படிப்பகம்

www.padippakam.com

## அதிகாரத் திமிரைக் காட்டவந்து அவமானப்பட்ட போலீஸ் அதிகாரி



**க**டந்த 6.3.90 அன்று திருச்சி பொன்மலை ரயில்வே பணிமனையில் இயங்கி வரும் தொழிலாளர் பிரச்சாரக் குழுவின் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

எந்த வேலையும் செய்யாமல் ஊக்க ஊதியம் பெற்றுக் கொண்டு கொல்லுப்பட்டறை தொழிலாளர்களை மிரட்டி சந்தா வசூலித்து பிழைப்பு நடத்திவரும் தொழிற்சங்க துரோகிகளையும், வட்டிச் சுரண்டல்காரர்களையும் அம்பலப்படுத்தி தண்டிக்க கோரியும்; நெருப்பிலும் கரிப்புகையிலும் வேலை செய்யும் கொல்லுப்பட்டறைத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு சாதனங்கள் வழங்க கோரியும் விரிவாகப் பேசி முடித்தார் தலைமையேற்ற தோழர் முருகானந்தம்.

அடுத்து, திருச்சி நேரு சிலை - தஞ்சை தியாகிகள் தூண் தகர்ப்பு சம்பவத்தை ஒட்டி பேசினார், சிறப்புரையாற்ற வந்திருந்த ம.க.இ.க. தோழர் தமிழ்மணி.

இவர் பேசத் தொடங்கியவுடன் பொன்மலை காவல்நிலைய ஆய்வாளர் தாமோதரன் வேகமாக வந்து மேடைக்கருகே 'பைக்'கை சட்டென நிறுத்தி, தப்பியோட முயலும் குற்றவாளியை பிடிப்பது போல பாய்ந்து தோழரின் கையைப் பற்றி ''உன்னை கைது செய்கிறேன்'' என்றார். தோழர் தமிழ்மணி ''என்னை கைது செய்ய காரணம் என்ன?'' என்று கேட்டதற்கு போலீசை, 'நாய்' என்று திட்டியதற்காக கைது செய்வதாக கூறினார் இன்ஸ்பெக்டர் தாமோதரன். ''போலீஸ், நாயைக் கூட்டிக் கொண்டு வந்தனர் என்றுதான் கூறினேன்; இனிமேல் 'நாலுகால் நாய்' என்று வேண்டுமானால் தெளிவாக கூறுகிறேன்'' என்றார் தமிழ்மணி.

பின்னர் தொ.பி.கு. அமைப்பாளர் முருகானந்தம் 'கூட்டம் நடத்த அனுமதி பெற்றிருப்பது நான். எதுவானாலும் என்னிடம்தான் பேச வேண்டும். முதலில் அவர் மீதிருந்து கையை எடுங்கள்'' என்று கூறியவுடன் திரண்டிருந்த தொழிலாளர்களும் ''அவர்களை பேசவிடு'' என கோஷமிட்டனர். மிரண்டுபோன தாமோதரன் தோழர் தமிழ்மணி மீதிருந்து கையை எடுத்துவிட்டு 'பேசுங்கள் பார்க்கலாம்' என்று மிரட்டுகிற பாணியில் மேடையிலே நின்றார். உடன் தோழர் முருகானந்தம், ''மேடையை விட்டு வெளியேறுங்கள், இங்கு நிற்கக் கூடாது'' என கடுமையாக கூறியவுடன் தொழிலாளர்களும் குரல் எழுப்பவே, கடுப்புடன் தனது 'பைக்'கை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார்.

மீண்டும் தமிழ்மணி தனது பேச்சை தொடர்ந்தார். நன்றியுரை கூறிய தோழர் முருகானந்தம் 'போலீசை நாய் என்று கூறியதாக ஆத்திரப்படும் இன்ஸ்பெக்டர் தாமோதாரன் போன்றவர்கள், காவல் நிலையத்தில் சாதாரண உழைக்கும் மக்களை ''ஏண்டா நாயே'' என அழைப்பதும் அதைவிட கேவலமாகவும் - தகாத வார்த்தைகளிலும் திட்டுவதும் பற்றி விரிவாகப் பேசினார். சுமார் 400க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் திரண்டிருந்து கூட்ட இறுதிவரை இருந்து கேட்டு ஆதரவளித்தனர். உழைக்கும் மக்களின் - தொழிலாளிகளின் ஒன்றுபட்ட சக்திக்கு முன்னால் அதிகாரவர்க்கத்தின் அடக்குமுறை செல்லாது - தவிடுபொடியாகும் என்பதை மீண்டும் பொன்மலைத் தொழிலாளர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

**இவண்**
**தொழிலாளர் பிரச்சாரக் குழு,**
**பொன்மலை**

## கிழக்கு ஐரோப்பிய மாற்றங்கள் முதலாளித்துவச் சீரழிவே!

*சமீபகாலமாக 'சோசலிச' நாடுகளில் ஏற்படும் - ஏற்பட்டுவரும் மாற்றங்களைப் பார்த்து ''கம்யூனிசம் தோற்றுவிட்டது'' என அலறும் முதலாளித்துவ நிறுவனங்களின் கருத்தை முறியடிக்கும் வகையில் அறைக் கூட்டம் ஒன்று மக்கள் கலை இலக்கியக் கழகம் சென்னைப் பகுதியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சென்னை - வடபழனியில் உள்ள திரைப்பட இசைக்கலைஞர்கள் சங்க அரங்கத்தில் 8.3.90 திங்கள்கிழமை மாலை 6.30 மணிக்கு நடந்த கூட்டத்திற்கு தோழர் மருதையன் (மாநிலச் செயலர் ம.க.இ.க.) தலைமைதாங்கினார். தோழர் டாக்டர் பாலகோபால், கன்வீனர். செயல் ஆந்திர சிவில் உரிமைக்கழகம் (APCLC) அவர்கள் சிறப்புரையாற்றினார். ஆங்கிலத்தில் பேசிய தோழர் பாலகோபால் அவர்களுடைய பேச்சை தோழர் மருதையன் தமிழில் மொழிபெயர்த்தார்.*

*ரசியாவில் தோழர் ஸ்டாலினுக்குப் பிறகு குருஷேவ் கும்பலும், சீனாவில் தோழர் மாவோ மறைவுக்குப் பிறகு டெங் கும்பலும் எவ்வாறு கட்சியையும் ஆட்சியையும் முதலாளித்துவத்திற்கு மீட்டெடுத்தது என்பதை விரிவாக விளக்கினார். மேலும், கிழக்கு ஐரோப்பிய 'சோசலிச' நாடுகளில் நடந்த மாற்றங்கள் முதலாளித்துவத்திற்கான பாதை என்பதை ஆதாரங்களுடன் விளக்கிப் பேசினார் தோழர் டாக்டர் பாலகோபால்.*

*200க்கும் மேற்பட்டவர்கள் வந்து கலந்துகொண்டு ஆதரவளித்தனர். புரட்சிகர அமைப்புகளின் அணிகள் தெளிவு பெறுவதற்காக தக்க தருணத்தில் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது என பிற புரட்சிகர அமைப்பின் அணிகள் பாராட்டினர்.*

**இவண்,**
**ம.க.இ.க. சென்னை.**

கம்பம் நகர போலீசு:

## ஒடுக்க வந்து ஒடுங்கிப் போனது

**க**ம்பம் நகரில் 18.3.90 அன்று மாலை விவசாயிகள் விடுதலை முன்னணியின் கொள்கைகளை விளக்கி தெருமுனைக் கூட்டம் நாட்டுக்கல் என்னுமிடத்தில் நடத்தப்பட்டது. நிகழ்ச்சி தொடங்கி தோழர்கள் பாடத் தொடங்கியதுமே கம்பம் நகர போலீஸார் ஒருவர் ''எங்களிடம் அனுமதி வாங்காமல் எப்படி கூட்டம் நடத்தலாம்? கூட்டம் நடத்தக்கூடாது'' என தடுத்தார். உடன் தோழர்கள், ''தெருமுனைக் கூட்டங்களுக்கு அனுமதி பெற அவசியமில்லை. 'மைக் செட்' பயன்படுத்தி நடத்தப்படும் கூட்டத்திற்கே அனுமதி பெற வேண்டும் என்பது தான் சட்டம். இதுபோல் பல கூட்டங்கள் அனுமதி பெறாமல் நடைபெறுகின்றன. ஆகவே, நாங்கள் கூட்டத்தை நடத்தத்தான் போகிறோம்'' எனக் கூறி கூட்டத்தைத் தொடர்ந்தனர்.

சிறிது நேரத்தில் கம்பம் நகர எஸ்.ஐ. தமது பரிவாரங்களுடன் ஆரவாரமாக வந்திறங்கி 'கூட்டத்தை நடத்தக்கூடாது' எனவும், 'ஸ்டேஷனுக்கு நட' எனவும் பலவந்தப் படுத்தினார். உடன் தோழர்கள், மக்கள் மத்தியில், 'சுதந்திரம் - ஜனநாயகம் என்று இங்கு பேசுவது எல்லாம் நாடகம் என்றும் போலீஸ் யாருக்காக் இருக்கிறது என்றும் அம்பலப்படுத்தி சுருக்கமாகப் பேசி முடித்துக் கொண்டனர். கூடியிருந்த மக்களை பலவந்தமாக விரட்டியும், மிரட்டியும் கூட்டத்தை கலைத்துவிட்டு தோழர்கள் அனைவரையும் காவல் நிலையத்திற்கு பிரதான சாலை வழியே அழைத்துச் சென்றார்கள் காவல்துறையினர். குறைந்த சக்தியாக இருந்தாலும் தோழர்கள் ஊர்வலம் போல் வரிசையாக அணிவகுத்து போலீசின் அடக்குமுறையை கண்டித்தும், போலியான சுதந்திரத்தை அம்பலப்படுத்தியும், வி.வி.மு.வின் கொள்கையை விளக்கியும் முழக்கமிட்டுச் சென்றனர். இது அறிவிக்கப்படாத ஊர்வலமாக மாறியது. கம்ப நகர வீதிகளில் எங்கும் பெருவாரியான மக்கள் கூடியிருந்து இந்த ஊர்வலத்தை பார்வையிட்டனர்.

புரட்சியாளர்கள் அடக்குமுறைக்கு அஞ்சுபவர்கள் அல்ல என்பதை மேற்கண்ட சம்பவத்தின் மூலம் உணர்ந்து மிரண்டு போனது கம்பம் நகர போலீசு. காவல் நிலையத்திற்கு முன்பாக அனைவரையும் நிறுத்திவிட்டு இருவரை மட்டும் உள்ளே அழைத்துப் போனார்கள். ஒரு மணிநேரம் விசாரணையை அறிவுரை பாணியில் கூறிவிட்டு, ''நகரில் 32வது சட்டம் போடப்பட்டிருக்கிறது. போலீஸ் அனுமதியில்லாமல் எந்த கூட்டமும் நடத்தக்கூடாது என்பதை சொல்வதற்காகத்தான் ஸ்டேசனுக்கு கூட்டி வந்தோம்'' என்று நகர 'இன்ஸ்பெக்டர்' கூறியுள்ளார். புரட்சிகர அமைப்புகளை மக்கள் மத்தியில் செல்வாக்கு அடையாமல் தடுப்பதற்காக திட்டமிட்டு வந்து தனது அடக்குமுறையை ஏவிய போலீசிற்கு இச்சம்பவம் எதிராகவே முடிந்தது.

**இவண்**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**கம்பம்.**

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

10

1-15 ஏப்ரல் '90

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# நோய்க்குறிகளுக்கான மருந்து நோய் தீர்க்காது!

அடுத்த தவணை இலவச கவர்ச்சித் திட்டங்கள், சலுகைகள், வரிக் குறைப்புகள், ஊதிய உயர்வுகளை மீண்டும் அறிவித்திருக்கிறது, தமிழக அரசு. எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்கள், சுதந்திரப் போராட்டத் தியாகிகள், தமிழ்மொழிக் காவலர்கள் ஆகியோருக்கு இலவச பஸ் பயண அனுமதி; மாணவர்களுக்கு மருத்துவச் சோதனைகள் ஆயிரம் ஊராட்சிகளுக்கு வண்ண வானொளிப் பெட்டிகள்; ஆசிரியர்கள், அரசு ஊழியருக்கு அகவிலைப்படி உயர்வு; மின்னணுப் பொருட்களுக்கு வரிச்சலுகை; கைதிகளுக்கு சிறப்பு மருத்துவ வசதிகள்; விவசாயிகளுக்கு சில மானியங்கள்; நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தள்ளுபடி தொகை - இப்படிப் பலவற்றைப் புதிதாக அறிவித்துள்ளார், நிதிமந்திரியாகவும் உள்ள கருணாநிதி

கருணாநிதியின் தயாள குணம், தரும சிந்தனை எனப் பீற்றிக் கொள்ளும் இவற்றுக்குப் பின்னணியில் கூட அவரது தந்திங்கள் - பொருளாதார மோசடிகள் உள்ளன. ரேஷன்' அரிசி விலையேற்றத்தால் ஒரு 190 கோடி ரூபாய்; சாராயக் கடைகளைத் திறப்பதால் இன்னுமொரு 180 கோடி ரூபாய், புதிய வரி விதிப்பால் மேலும் ஒரு 162 கோடி ரூபாய் - ஆக 532 கோடி ரூபாய் அளவுக்கு மக்களிடம் இருந்து பிடுங்க உள்ளார், கருணாநிதி. இதைக் கொண்டு, எம்.ஜி.ஆர். துவங்கிய இலவச பல்பொடி, காலணி, சத்துணவு, கருணாநிதி வழங்கும் இலவச அரிசி, வேட்டி - சேலை ஆகியவற்றோடு புதிய பல இலவசத் திட்டங்கள், சலுகைகள், மானியங்களை ஈடுகட்டி விடமுடியும். மிச்சப்படுத்தியும் விடலாம். அதோடு இந்தத் திட்டங்களுக்கென்று உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம், 'கேர்' போன்ற அமைப்புகள் பல கோடி ரூபாய் மானியங்களும் உதவிகளும் அளிக்கின்றன. இப்படி மக்களது கையை வெட்டி கறி சமைத்து மக்களுக்கே விருந்து வைக்கும் எம்.ஜி.ஆர். பாணித் திட்டங்கள் எல்லாம் ஏதோ தானே இரத்தமும் வேர்வையும் சிந்தி உழைத்து மக்களுக்கு இலவசமாகத் தருவதாக நடிக்கிறார், கருணாநிதி.

என்னதான் தலைகீழாக நின்றாலும் கருணாநிதி அவரது நோக்கங்களை அடைய முடியாது. ''இந்தத் திட்டங்களின் உடனடி நோக்கம், சாராயக் கடை திறப்பால் ஏற்படும் வெறுப்பை ஈடுகட்டுவதாகும்'' என்றும் ''எம்.ஜி.ஆரைப் போல செல்வாக்குப் பெற்று தன்னுடைய பரம்பரை ஆட்சியை நிரந்தரமாக்குவதற்கு முயற்சிக்கிறார்'' என்றும் கருணாநிதியின் கரிசனைகள் பற்றி மக்கள் அறிந்தே இருக்கிறார்கள். ஆனால் கருணாநிதி மட்டுமல்ல. எம்.ஜி.ஆரைத் தொடர்ந்து கர்நாடகாவில் ஹெக்டேயும், ஆந்திராவில் என்.டி.ஆரும், பிறகு அனைத்து, மாநில, மத்திய ஆளும் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் கூட இலவச - கவர்ச்சித் திட்டங்கள், சலுகைகளை அள்ளி வீசின. இதற்கு ஓட்டுப் பொறுக்குவதோடு இன்னொரு அவசியமும் உள்ளது.

இந்த விவகாரம் முழுவதையும் வேறொரு கோணத்தில் இருந்து பார்ப்போம். இந்த இலவச - கவர்ச்சித் திட்டங்கள், சலுகைகளை வறுமைத் தணிப்பு, வறுமை நிவாரணம் என்று அதிகாரபூர்வமாகச் சொல்லுகிறார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி போன்ற 'செல்வச் செழிப்பு' மிக்க நாடுகளிலும் இவை உண்டு. சுரண்டல் அமைப்பு நிலவும் நாடுகளில் எல்லாம் வறுமை நிரந்தர நோயாகி விட்டது என்பதால் இலவச - கவர்ச்சித் திட்டங்களும் சலுகைகளும் நிரந்தரமாகவும் பரவலாகவும் வேறூன்றி விட்டன. வேலை இல்லை. வீடு இல்லை. உணவு - உடை - கல்வி - மருத்துவ வசதி இல்லை. கோடி கோடியாக வறுமையின் பிடியில் மக்கள். இங்கே டாட்டா, பிர்லா, அம்பாணி ஆகிய ஏகபோக தரகு அதிகார முதலாளிகள், அரசு ஏகபோக அதிகார முதலாளிகள், நவீன முறை விவசாய நிலப்பிரபுக்கள். இவர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு செல்வத்தைக் குவிக்கிறார்களோ அதே அளவு வறுமை பெருகுகிறது. அங்கே ஹண்ட் சகோதரர்கள், ராக்ஃபெல்லர் குடும்பம், மார்கோன் கம்பெனி, மெல்லோன், துபாண்டு, ஹெர்ஸ்ட், ரோசன்வால்டு ஆகிய தொழில் குடும்பங்கள் எந்த விகிதத்தில் பூதாகரமாக வளர்கின்றனவோ அதே விகிதத்தில் உலக நாடுகளில் வறுமையின் பிடி இறுகுகிறது. அதன் உச்சகட்டமாக, எத்தியோப்பியா, சூடான், சோமாலியாவில் கோடி கோடியாக மக்கள் பட்டினியால் சாகின்றனர்.

கலப்புப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட காங்கிரசு - நேருவின் ஜனநாயக சோசலிசமோ, குருச்சேவ் - கோர்பியின் போலி சோசலிசமோ, சுதந்திரமான சந்தைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ ஏக போகமோ - எதுவும் வறுமையை ஒழித்துவிடவோ, வறுமை வராமல் தடுத்திடவோ முடியவில்லை. தொழில்கள் பெருகினாலே வறுமையும் வேலை இல்லாத் திண்டாட்டமும் இன்னும் பிற பிரச்சினைகளும் தாமே தீர்ந்துவிடும் அல்லது திட்டமிட்டு தீர்த்துவிட முடியும் என்பது பொய்த்துவிட்டது. ஏகபோகங்களுக்கும் உழைக்கும் மக்களுக்கும் இடையே, ஏழை நாடுகளுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் இடையே ஏற்றதாழ்வு பெருகிக்கொண்டே போகிறது. ஏகபோகங்களுக்கு எதிராக உழைக்கும் மக்களும், ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக ஏழை நாடுகளும் புரட்சிப்போர் தொடுத்துவிடுவார்கள் என அவர்கள் அஞ்சுகிறார்கள். அதோடு மேலும் தங்கள் சுரண்டல் - கொள்ளை தொடர வேண்டுமானால் உழைக்கும் மக்களும், ஏழை நாடுகளும் அடியோடு அழிந்துவிடவும் கூடாது. எனவே வறுமைத் தணிப்பு, வறுமை நிவாரணப் பணிகள் மேற்கொள்ளுகின்றனர்

உழைக்கும் மக்களை ஒட்டச் சுரண்டிவிட்டு, ஏழை நாடுகளை ஈவிரக்கமின்றி கொள்ளையிட்டு விட்டு அதன் ஒரு சிறுபகுதியை தான - தருமம் செய்கின்றன, ஏகாதிபத்தியங்களும், ஏக போகங்களும். அதோடு பல பொருளாதார - நிதி மோசடி நாடகமாடி இலவச - கவர்ச்சித் திட்டங்கள், சலுகைகள் காட்டி ஏய்க்கின்றன, ஓட்டுக் கட்சிகள். அவர்களது தயவை எந்நாளும் எதிர்பார்த்து கையேந்தும் 'பிச்சைக்காரர்'களாக சமூகத்தின் ஒரு பெரும் பகுதி மக்களை மாற்றுகின்றனர். நாட்பட்ட சமூக நோய்க்கு வலிநிவாரணிகள் போன்ற மருத்துவம் பயன்படாது என்று உழைக்கும் திறனும் நம்பிக்கையும் உடைய மக்கள் கண்டு கொள்வார்கள். அப்போது வறுமை என்ற சமூக நோய் நீடித்திருப்பதற்கும் பரவுவதற்கும் அடிப்படை ஏகாதிபத்திய - நிலப்பிரபுத்துவச் சுரண்டல் என்பதை அறிந்து அவற்றையும், அவற்றோடு இந்த ஓட்டுக் கட்சிகள் உட்பட அரசு அமைப்பு முழுவதையும் தூக்கி எறிவார்கள். ○

படிப்பகம்

www.padippakam.com

# ஜனதாதள சண்டை: கொடுங்கோலனும் நரிகளும்!

ராஜா வி.பி.சிங் ஆட்சி ஒருவாறு 100வது நாளை தாண்டிவிட்டது. வாழ்நாள் முழுக்க பிரதமர் பதவிக்கு காத்திருக்கும் சகுனி சந்திரசேகரை கடைசிநேரத்தில் ஏமாற்றிவிட்டு தனக்கு முடிசூட்டிக் கொண்டு பிரதமரானார், வி.பி.சிங். சந்திர சேகர், தேவிலால் கும்பல்களிடமிருந்து தந்திரமாக பறித்த பிரதமர் பதவியை நிரந்தரமாக்கி கொள்வதில் வி.பி.சிங் பரிவாரங்களால் 100 நாட்களுக்கு பிறகும் இறுதிவெற்றியை எட்ட முடியவில்லை. தேவிலாலின் ராஜினாமா மிரட்டலிலிருந்து அடுத்தடுத்து கிளம்பும் அதிகார மோதலின் உச்சக்கட்ட காட்சிகள் இதையே நிரூபிக்கின்றன.

### நடுத்தெருவுக்கு வந்த குடுமிபிடி சண்டை

தலைமைப் போட்டிக்காக, டில்லி தர்பாரின் மணிமண்டபத்தில் நடக்கும் குடுமிபிடி சண்டைகள், குதிரை வியாபாரங்கள், சதி ஆலோசனைகள், பகிரங்க மிரட்டல்கள், கோஷ்டி தாவல்கள், பதவி பிடுங்கல்கள், தத்தமது விசுவாசிகளுக்கு சலுகைகள் சன்மானங்கள் என்பது கீழ்மட்டம் வரை வெறியோடு பாய்கிறது.

9 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசத்தில் நடந்துமுடிந்த பொது தேர்தலில் ஜனதா தளம் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள். தேர்வு செய்யப்பட்ட முறை, அதில் ஆட்சிக்கு கட்சி தலைமையால் தேர்வு செய்யப்பட்டிருக்கும் நபர்களின் பின்னணி, இவையாவும் ஜனதாதள கட்சி இன்னொரு காங்கிரசுதான் என்பதை படம்பிடித்து காட்டுகின்றன.

மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக ஆட்சி அமைத்திருக்கும் தேசிய முன்னணி அரசு தனது ''கொள்கைபூர்வமான அரசியலை'' (ஊழலற்ற, நேர்மையான நாடும், மக்களும் பெருமைப்படக்கூடிய ஆட்சி) எந்த நேரத்திலும் எந்த சக்திக்கும் அடகு வைக்காது என்றார், வி.பி.சிங். ஆனால், பார்ப்பது என்ன? மேடையில் ராஜா வி.பி.சிங்கின் அரசியல் உபதேசங்களும், மேடைக்கு கீழே அக்கட்சியின் அரசியல் விபச்சாரமும் சூடு பறக்கிறது.

### கிரிமினல்கள் ஆட்சியில்! கட்சிக்கு உழைத்தவர்கள் வீதியில்!

நடந்துமுடிந்த தேர்தலில், பீகார் மாநிலத்தில் மட்டும் 40க்கும் மேற்பட்ட தொழில்முறை கிரிமினல்கள் ஜனதாதள கட்சியின் சார்பில் சட்டசபை வேட்பாளர்களாக தேர்வு செய்யப்பட்டனர். வெற்றியும் பெற்றனர். 'தோழமை'க் கட்சிகளால் எளிமையானவர் நேர்மையானவர் என்று புகழப்பட்ட ராம்சுந்தர்தாஸ் தமது கட்சியாலேயே முதன்மந்திரி பதவி போட்டியிலிருந்து விரட்டப்பட்டார். ஊழல் பெருச்சாளியும் கிரிமினலுமான லல்லுபிரசாத் யாதவ் ஜனதாதள கட்சியின் பீகார் முதன்மந்திரியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். சகல ஓட்டுக் கட்சிகளாலும் ''திருடன்'' என்று வர்ணிக்கப்பட்ட சிமன்பாய் பட்டேல், குஜராத் மாநிலத்தின், ஜனதாதள - பா.ஜ.க. கூட்டு மந்திரிசபையின் முதன்மந்திரியாக தேர்வு செய்ப்பட்டார்.

'74 ஆம் ஆண்டில் இவர் காங்கிரசுக் கட்சியின் முதன்மந்திரியாக வீற்றிருந்த போது, இவருடைய ஊழலை எதிர்த்து மாணவர்கள் மிகப்பெரிய போராட்டங்களை நடத்தினர். 'நவ நிர்மான்' இயக்கம் என்று அழைக்கப்பட்ட அப்போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களில் 60க்கும் மேற்பட்டவர்களை படுகொலை செய்து அடக்கியவர். இவர் பெயர் தாங்கிய அட்டைகளையும், கேலி சித்திரங்களையும் வரைந்து கழுதைகளின் கழுத்தில் தொங்கவிட்டு மாநிலம் முழுக்க இவரை நாறடித்தனர்.

ஒவ்வொர மாநிலத்திலும் சில கும்பல்கள் 'சீட்' கிடைக்காததால் கட்சியை விட்டு ஓடிப் போய் அதிகாரபூர்வமான வேட்பாளர்களை எதிர்த்து கலகக்கொடி தூக்கினார்கள். கூட்டணி கட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை விட்டுக் கொடுக்காமல் முரண்டு பிடித்தனர். காங்கிரசுக் கட்சி வலுவாக உள்ள இடங்களில் தங்களை ஒதுக்கிவிட்டதாக குடுமியைப் பிடித்துக் கொண்டனர்.

மகராஷ்ட்ராவில், இந்து மதவெறி சிவசேனா, பா.ஜ. கட்சி கூட்டணிக்கு எதிராக 'முற்போக்கு ஜனநாயக முன்னணி' என்று தங்கள் வேட்பாளர்களை நிறுத்தியது ஜனதாதள கட்சி. ஆனால், பெரும்பான்மையாக உள்ள இடங்களில் விட்டுக்கொடுத்து ஒதுங்கிக் கொள்வது என்று எழுதாத ஒப்பந்தத்தை கடைபிடித்து அம்பலப்பட்டுப் போனது.

எல்லா மாநிலங்களிலும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த வேட்பாளர்கள் கவனமாக தவிர்க்கப்பட்டனர். அப்படியே ஒரு சிலர் வெற்றி பெற்றிருந்தாலும் பதவி பொறுப்புகளிலிருந்து புறக்கணிக்கப்பட்டனர். வாரிசு அரசியலில் வந்த ஒருசிலரை தவிர எங்கும் பெண் வேட்பாளர்கள் மருந்துக்கும் இல்லை. முறைப்படியான கட்சி தேர்வு என்பதாக வேட்பாளர்கள் எங்குமே தேர்ந்தெடுக்கப்படவில்லை.

காங்கிரசு மாதிரி அச்சாக, சாதி, பணபலம், அடியாட்கள் அடிப்படையில், பல்வேறு கோஷ்டிகள், கோஷ்டிக்குள் கோஷ்டிகள் எம்.எல்.ஏ.க்களை பங்குப் போட்டுக் கொண்டது. இக்கோஷ்டிகளுக்குள் வந்த தகராறுகளால், வேட்பாளர்கள் பட்டியல் பல முறை மாற்றியமைக்கப்பட்டது. கட்சியை விட்டு ஓடவும் எதிர்க்கவும் கவிழ்க்கவும் முயற்சித்த கும்பல்களுக்கு கூடுதலாக 'சீட்' கொடுத்து சமாளித்தது.

### சண்டையில் முதல் கட்ட சுற்றில் மூக்குடைப்பட்ட வி.பி.சிங் கும்பல்!

மத்திய மந்திரி சபையில் இருக்கும் ஜனதாதள கட்சியின் ஒவ்வொரு கும்பலும் மாநில வேட்பாளர்கள் பட்டியல் தேர்வில் மூக்கை நுழைக்க மூர்க்கமாக முயற்சித்தது. பெரும்பாலான எம்.எல்.ஏ.க்களையும், மாநில அதிகாரத்தையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர ரகசிய பயணங்களும் சதி ஆலோசனைகளும் நடத்தினர். தாங்கள் அங்கம்வகிக்கும் துறைகளிலிருந்து சலுகைகளும் சன்மானங்களும் அனுப்பினர்.

வி.பி.சிங், அருண்நேரு, அஜித்சிங் கும்பல் தனியாகவும், அதற்குத் துணையாக எல்.கே.குஜ்ரால், ஜார்ஜ் பெர்னாண்டஸ்,. மதுதண்டவதே, உபேந்திராவும் மறுபக்கம் தேவிலால், சந்திரசேகர் கும்பல் அதற்கு துணையாக மத்திய மந்திரி சரத்யாதவ், பிரதமருக்கு அடுத்த அதிகாரம் படைத்த நாட்டின் இரண்டாவது நபர் என்று வர்ணிக்கப்படும் உ.பி. மாநில முதல்வர் முலையாம் சிங் யாதவும் சதியில் இறங்கினார்.

படிப்பு, திறமை, - அரசியல் தந்திரம் நாட்டை முன்னேற்றுவதற்காக அல்ல. கோஷ்டி சண்டைக்குப் பயன்படுத்தும் அஜித்சிங் வி.பி.சிங் அருண்நேரு கும்பல்.





படிப்பகம்

www.padippakam.com

இதன்னியில் பா.ஜ.கட்சி தங்கள் கோஷ்டியைத்தான் ஆதரிக்கவேண்டும் என்று ஒவ்வொரு கும்பலும் அத்தலைமையிடம் ரகசியமாக தனித்தனியாக தூதும் போனார்கள். மாநிலங்கள் தேர்தல் என்ற திரைமறைவில் நடந்த இந்த கழுத்தறுப்பில், அடிவெட்டில் தேவிலால், சந்திரசேகர், முலயாம் சிங் கும்பல் பெருத்த பங்கை கைப்பற்றியது. ஒப்பீட்டு ரீதியில் கிரிமினல் அரசியலை எதிர் கோஷ்டியைவிட ஆழமாக நிறுவன ரீதியில் இக்கும்பல் நடத்தியதுதான் காரணம்.

இதன்மூலம் மத்திய அரசுக்கு வெளியே, ஏற்கனவே உ.பி., அரியானா, தற்போது பீகார், குஜராத் மாநிலங்களின் அதிகாரம் தேவிலால், சந்திரசேகர் கும்பல் வசம் வந்தது. லல்லுபிரசாத் யாதவ், சிமன் பாய்பட்டேல் போன்ற தேவிலாலின் அரசியல் அடியாட்கள் அம்மாநிலங்களின் முதன் மந்திரிகளாக்கப்பட்டனர்.

### வி.பி.சிங் கும்பல் வீசிய சதிவலை

தேவிலால் கும்பல் கட்டவிழ்த்துவிட்ட கிரிமினல் அரசியலை, தேர்தல் தில்லுமுல்லுகளை எதிர்க்கும் நோக்கில் அல்ல; அதிகார போட்டியில் பலத்த அடிவாங்கிய நிலையில், அதிகாரம் கைநழுவி போகும் பீதியில் தேவிலால் கும்பல் மீது வி.பி.சிங், அஜித் சிங், அருண்நேரு கும்பல் பாய்ந்தது.

ஏற்கனவே வி.பி.சிங், கட்சித் தலைவர் அதிகாரத்தை பயன்படுத்தி தேவிலால் கும்பல் ஆட்சி ஆளும் உ.பி. மாநிலத்தின் கட்சி தலைவர் பதவிக்கு புஜான் பட்டேல் என்ற தனது விசுவாசியை தன்னிச்சையாக நியமித்திருந்தார்.

புஜான் பட்டேல் தேவிலாலின் பரம வைரி. மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்காக அரசு நியமித்த கமிட்டியின் தலைவராக தேவிலாலை நியமித்ததை ·பகிரங்கமாக எதிர்த்தவர். இதற்காக ஜனதாதள மத்திய பொது செயலாளர் பதவியைத் துறந்தவர்.

அதேபோல், தேவிலால் துணைப்பிரதமர் ஆனவுடன், தன்னுடைய அரியானா முதல்வர் பதவியை தம் மகனுக்கு ஒப்படைத்தார். தேவிலால்பதவியைஎதிர்த்து அவர் எதிரிகள் தொடுத்த வழக்கில் ஆஜரானவர், கபில்சைபால். தேவிலாலை அவமானப்படுத்த கபில்சைபாலை அரசின் உயர் பதவியான, கூடுதல் 'சொலிசிடர் ஜெனரல்' நியமித்தார் வி.பி.சிங்.

கடைசியாக, மேஹம் தொகுதியில் தேர்தல் தில்லுமுல்லுகளை ஆராய தேவிலாலின் அரசியல் எதிரியான அஜித்சிங் தலைமையில் ஒரு குழுவை அனுப்பினார், வி.பி. சிங். மேஹம் தொகுதியில் நடந்த தில்லுமுல்லுகள், வன்முறைக்கு பொறுப்பேற்று தேவிலாலின் மகன் சௌதாலா, அரியானா முதன் மந்திரி பதவியிலிருந்து விலக வேண்டும் என்ற பகிரங்க அறிக்கை சமர்பித்து, பிரச்சாரம் செய்தார், அஜித்சிங்.

ஆனால், தேவிலால் இதற்கு முன்னரே கட்சியில் தனது அதிகார செல்வாக்கை பயன்படுத்தி, கட்சி, ஆட்சியின் அதிஉயர் அதிகார அமைப்பான 'பார்லிமெண்ட் அரசியல் விவகார கமிட்டி'யிலேயே, வி.பி. சிங் கும்பலை சிறுபான்மையாக்கி அடக்கினார். அக்கமிட்டியில், கட்சி மறுதேர்தல் நடத்த தேர்தல் கமிஷனை கேட்டுக் கொள்வது என்று தீர்மானம் இயற்ற நிர்பந்தித்து வெற்றி பெற்றார்.



1972 குஜராத் மாணவர்களின் ஊழல் ஒழிப்பு - நவநிர்மான் போராட்டம் "சிமன் பாய் திருடன், பதவி விலகு" என எழுதி, கதர் குல்லாய் போட்டுள்ள கழுதை. மேலிருந்து கீழ் சிமன்பாய் பட்டேல், லல்லு பிரசாத் யாதவ், முலாயம் சிங் யாதவ். - தேவிலாலின் அரசியல் அடியாட்கள்.

### வி.பி.சிங் கும்பலை அடிமேல் அடி அடித்த தேவிலால் கும்பல்

தனக்கு எதிரான வி.பி.சிங் கும்பலின் உண்மையான அதிகார பலத்தை நாடிபிடித்து பார்க்க 'ராஜினாமா' குண்டை போட்டார், தேவிலால். கட்சியிலும் ஆட்சியிலும் தன் பதவியை அவமதிக்கும் வகையில் அடுத்தடுத்து காரியங்களை நடைபெறுவதாகவும் பொறுப்புகளிலிருந்து விலகிக் கொள்வதாகவும் காரணங்களை பட்டியலிட்டார்.

பல மாநிலங்களில் நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக மார்ச் 16ந்தேதி கூடிய 'பார்லிமெண்ட் அரசியல் விவகார கமிட்டி' தேவிலாவின் ராஜினாமா செய்தி அறிந்து பாதியில் கலைந்தது. அன்றிரவே தேவிலால் தனது நெருங்கிய சகாக்களுக்கு விருந்து கொடுத்து அடுத்த சதிக்குத் தயாரானார்.

100 நோட்டு பீதாம்பரத்துடன் தேவிலால்



அதே நேரத்தில் நள்ளிரவில், வி.பி. சிங் மந்திரிசபையின் அவசர கூட்டம் நடத்தினார். காஷ்மீரில் இருந்த ஜார்ஜ் பெர்ணாண்டஸ் அவசரமாக தனி விமானத்தில் டில்லி வந்தார். வி.பி.சிங் கும்பலில் அஜித்சிங், அருண்நேரு போன்றோர் தேவிலாலின் ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்தித்தனர். வி.பி.சிங் விசுவாசி ஒரிசா முதல்வர் பிஜுபட்நாயக், மதுதண்டவதே, ஜார்ஜ் பெர்ணாண்டஸ், உபேந்திரா போன்றோர் விட்டுக் கொடுத்து சமரசமாக போகும் தந்திரத்தை கடைபிடிக்க நிர்பந்தித்தனர்.

தன்பலமே பாதியாக குறைந்த நிலையில் தேவிலாலுக்கு விரோதமான கட்சி. ஆட்சி நியமனங்களை மறுபரிசீலனை செய்ய வி.பி.சிங் இணங்கினார். கட்சியிலும் ஆட்சியிலும்; தேவிலாலின் பங்கை மதிப்பதாகவும் உணர்வதாகவும் தேவிலாலுக்கு பகிரங்க கடிதம் எழுதினார். ஆனால், தேவிலாலின் கோரிக்கைகளில் ஒன்றான அஜித் சிங்கின் மீது கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ செய்யாமல் நழுவினார்.

தேவிலால் தன்னுடைய சதிதிட்டத்தில் முழுவெற்றி அடைந்த மிதப்பில் ராஜினாமாவை விலக்கிக் கொண்டார். கட்சியிலும் ஆட்சியிலும் தன் செல்வாக்கை பகிரங்கப்படுத்தி மிரட்டும் அடுத்தகட்ட நரித்தனத்தில் இறங்கினார்.

ஆட்சி கட்டிலில் ஏறியபிறகு, முதல் வெளிநாட்டு பயணமாக வி.பி.சிங் நபீபியா நாட்டிற்கு சென்றிருந்தபோது கட்சியில் இன்னொரு குண்டை தூக்கி போட்டார் தேவிலால். தனது அதிகாரத்தை மீறி அஜித் சிங்கை 'பார்லிமெண்ட் அரசியல்விவகார கமிட்டி'யின் செயலர் பதவியிலிருந்து நீக்கினார். அக்கமிட்டியில் உறுப்பினராகக் கூட

www.padippakam.com

இல்லாத யஷ்வந்த் சின்கா என்பவரை முறைகேடாக அப்பதவிக்கு நியமித்தார்.

வீடுதிரும்பிய வி.பி.சிங் உட்பட எவர் ஒருவரும், தேவிலாலின் இந்த திமிர்த்தனத்தை எதிர்க்க துணியவில்லை. ஏப்ரல்மாதம் 4ந் தேதி கூடவிருக்கும் 'பார்லிமெண்டரி அரசியல் விவகார கமிட்டி'யில் இதைப் பற்றி விவாதிப்பது என்று ஒத்திப்போட்டு விட்டனர். அதற்குள் மீண்டும் தேவிலாலுடன் சமரசம் ஏற்படாதா என்று ஒருவருக்கொருவர் குறுக்குவழி தேடுகின்றனர்.


உழுபவர்களுக்கே நிலம்!
உழைப்பவர்களுக்கே அதிகாரம்!

**விவசாயிகள் விடுதலை முன்னணியின்**
**உசிலை வட்டார முதல் மாநாடு**



*28.3.90 அன்று தூக்குமேடை தியாகி தோழர் பாலு அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.*

**வரும் 7.4.90 காலை 9 மணிக்கு வெண்மணித் தியாகிகள் அரங்கம், ஊரணி புரத்தில்**

**விவசாயிகள் விடுதலை முன்னணியின்**
**திருவோணம் ஒன்றிய முதல் மாநாடு**

*அனைவரும் வருக!*

*ஆதரவு தருக!*

இவண்
மாநாட்டு வரவேற்புக் குழு


### அடுத்தக்கட்ட மோதலுக்கு அடித்தளம் - ஆரம்பம்

அடுத்து, மார்ச் 29ந் தேதி நடக்கவிருக்கும், 60க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதில் இப்போதே இவர்களுக்குள் தனியாக குடுமிபிடி சண்டை துவங்கிவிட்டது. உடனடியாக எதிர் கும்பலின் விசுவாசியான உ.பி. முதல்வர் முலயாம் சிங் யாதவைக் கவிழ்த்தால்தான் தேவிலால் கும்பலை கட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று வி.பி.சிங் கும்பல் சதுரங்க காயை நகர்த்துகிறது.

நாடாளுமன்ற தேர்தலின்போது, காங்கிரசு கட்டவிழ்த்துவிட்ட தேர்தல் வன்முறையில் குண்டடிபட்ட சஞ்சய் சிங் லண்டனில் இருந்து நாடு திரும்பிவிட்டார். வி.பி.சிங் ஆதரவாளரான இவர், உ.பி. முதல்மந்திரி பதவியில் ஆரம்பத்திலிருந்தே கண் வைத்திருப்பவர். ஏற்கனவே, உ.பி. முதல்மந்திரி பதவிக்குப் போட்டியிட்டு தோற்று மத்திய மந்திரியான அஜித்சிங், இந்த ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கைக்கு வெறியோடு தலைமை தாங்குகிறார்.

### மடியை விரித்துக் கொண்டு காத்திருக்கும் காங்கிரசு

மறுபுறம், தேவிலால், சந்திரசேகர் கும்பல், வி.பி.சிங் கும்பலை எதிர்க்க தன் சொந்த பலத்தை மட்டும் நம்பியிருக்கவில்லை. இந்த குடுமிபிடி சண்டைக்கு மத்தியில். சகுனி சந்திரசேகர் 'நரேந்திரதேவ்' என்ற காங்கிரசு 'சோசலிச'வாதியின் நூற்றாண்டு விழாவை பிரமாண்டமாக தன் தலைமையில் தானே கொண்டாடினார்.

இதில் சர்வக்கட்சி உயர்தலைவர்களை அழைத்து அனைவருக்கும் பொதுவானவராக - எதிர்ப்பு பாராட்டாதவராக தனக்கு தானே ஒளிவட்டம் அமைத்துக் கொண்டார். தனது ராஜினாமா மிரட்டலுக்கு பிறகு வி.பி.சிங்கை அங்கு பார்த்த தேவிலால் முகத்தை முறுக்கி கொண்டு திருப்பிக் கொண்டார். ஆனால், சந்திரசேகரின் தூண்டுதலின் பேரில் ராஜீவை அங்கு தனியாக சந்தித்து பேசினார்.

அதன் தொடர்ச்சியாக ராஜீவின் அரசியல் ஆலோசகரும், நேரு - இந்திரா குடும்ப விசுவாசியுமான தவான், பலமுறை ரகசியமாக தேவிலாலையும் சந்திரசேகரையும் சந்தித்தார். முன்னாள் ஜனாதிபதி ஜெயில்சிங்கும், ராஜீவுக்கும் தேவிலாலுக்கும் தரகு வேலை செய்தார். இதன் விளைவு முதல்கட்டமாக, மேஹம் தொகுதி வன்முறையைப் பற்றி காங்கிரசு எழுப்பாது என்று முடிவானது.

காஷ்மீர் நிலவரத்தை ஆராய சர்வ கட்சி கூட்டத்தில் சென்ற ராஜீவ், துணைப்பிரதமர் தேவிலாலுக்கு சரியான வரவேற்பு இல்லையென்று உருகிபோனார். வி.பி.சிங் கும்பல் இப்போது நடுக்கத்துடன் நிலைமையை ஆராய்கிறது. மகன் இறந்தாலும் பராவாயில்லை மருமகள் தாலி அறுக்க வேண்டும் என்று தேவிலால், காங்கிரசு கட்சி பின்னால் போவதற்கும் வாய்ப்பிருக்கிறது என்று அஞ்சுகிறது.

பாரதீய ஜனதாக் கட்சி 'தோழமை' கட்சியின் ஆட்டத்தையும் விரிசலையும் மௌனமாக ரசிக்கிறது. இதைத்தான் அது எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. தேசிய முன்னணி ஆட்சி தன் தலையில் தன் கையாலேயே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டபிறகு, பிரச்சாரம் செய்து வசதியாக அடுத்த ஆட்சியை பிடித்துவிடலாம் என்று எச்சிலுடன் காத்திருக்கிறது.

ஆக தேசிய முன்னணி ஆட்சிக்கு குழி பறிக்கும் வேலையை வெறியோடு அதன் சொந்தக்காரர்களே ஆளுக்கு ஒரு மூலையில் செய்துகொண்டிருக்கிறார்கள். பத்திரிக்கைகளும் அவர்களது எடுபிடிகளும் கதை கட்டுவதுபோல் இது கொள்கை மோதல் இல்லை. பழமையாளர்களுக்கும் பதவிவெறியர்களுக்கும் முற்போக்காளர்களுக்கும் இடையில் நடக்கும் மோதலும் அல்ல. கழுதையில் முன்வட்டை பின்வட்டை என்று பார்த்து கொஞ்சமுடியுமா? பதவிவெறியர்களின் கூடாரத்தில் முற்போக்கு பிற்போக்கு எது என்று தேடுவதும் இப்படித்தான்!

பொய்யையும் புனை கதைகளையும் பரப்பி வி.பி.சிங், எளிமையான திறமையான, அனைவரையும் அரவணைத்துப் போகும் ஆட்சியை நடத்துவதாக எடுபிடிகள் புளுகினார்கள். பத்திரிக்கைகளும் வி.பி.சிங் வீட்டின் கழிப்பறையும் மணப்பதாக கூறி திரிந்தன. தேவிலாலை விட்டுக் கொடுக்காத ராஜீவின் அரசியல் எதிரி நம்ப தகுந்தவர் என்று உச்சி முகர்ந்தன. அனைத்திற்கும் ஆப்பறையும் விதமாக பதவி வெறியர்களின் கோஷ்டி சண்டை அவர்களுக்குள் இருக்கும் அலங்கோலங்கள் அனைத்தையும் உருவிகாட்டுகிறது ● பச்சையப்பன்




**கம்யூனிசம் தோற்பதில்லை!**

**ரசிய, கிழக்கு ஐரோப்பிய, சீன மாற்றங்கள் முதலாளித்துவச் சீரழிவே!**

புதிய ஜனநாயகம் வெளியீடு - படியுங்கள் - விலை ரூ.1.50 - சி.பி.ஐ., சி.பி.எம்., எம்.சி.பி. அணிகளின் சிந்தனைக்கு.

*உங்கள் தலைவர்கள் கி.ஐரோப்பிய நாடுகளிலும், ரஷியாவிலும் நிகழ்ந்து வரும் கொந்தளிப்பான மாற்றங்கள் பற்றி என்ன கூறுகிறார்கள்? கொஞ்சம் சிந்தித்துப் பரிசீலித்துச் சீர்தூக்கிப் பாருங்கள்! ...முடித்தவரை மவுனம் சாதித்தார்கள். உங்களுக்கு ஏதாவது பதில் சொல்ல வேண்டியிருப்பதாலும், முதலாளித்துவப் பத்திரிகைகள் கேலி செய்வதாலும் வேறு வழியின்றி வாய் திறந்துள்ளார்கள்.... எந்த அறிக்கையை எடுத்தாலும் ஒரே மழுப்பல், நழுவல், வழுக்கல்தான்! - இவற்றை அம்பலப்படுத்தும் நூல் -*

*பிரதி வேண்டுவோர் புதிய ஜனநாயகம் முகவரிக்கு 2/- ரூ.தபால்தலை அனுப்பவும்.*




படிப்பகம்

www.padippakam.com

பீக்காக்:

## ஓட்டல் தொழிலாளர்களின் உரிமைக்கானப் போராட்டம்

பூந்தமல்லி நெடுஞ்சாலையில் தினத்தந்திக்கு அருகே 'பீக்காக்' என்ற நட்சத்திர ஓட்டலில் ஊழியர்கள் போராட்டம், 6.3.90 அன்று நடந்தது. 120 பேர் வேலை செய்கின்றனர். அனைவருமே இன்று போராடுகின்றவர். 6 ஆண்டுகளுக்குமுன் தொடங்கப்பட்ட இதில் அதிகபட்ச சம்பளம் ரூ.300 தான்.

● அரசே நிர்ண்யித்த குறைந்தபட்ச பஞ்சப்படி உணவுப்படி வழங்க வேண்டும். ● வேலைநிரந்தரம். ● 8 மணிநேர வேலை, சர்வீஸ்கார்டு, லீவு உரிமைகள் தரப்பட வேண்டும். ● இ.எஸ்.ஐ., பி.எ.்ப். முதலியன அமுல்படுத்த வேண்டும். ● வேலை நீக்கம் செய்த முகமது உசைனை திரும்ப சேர்க்க வேண்டும். இன்னும் பல பொருளாதாரக் கோரிக்கைகள்.

சங்கத்துடன் பேச மறுத்தது மட்டுமின்றி அதை அங்கீகரிக்கவுமில்லை. 6 ஆண்டுகளுக்கு மேல் உதவித் தலைவர் பி.கே.ராஜனும், 16.3.90 அன்று வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். சங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைத்தும் மறுத்ததால், வேறுவழியின்றி அனைத்து தொழிலாளரும் 17.3.90ல் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்தனர்.

ஒரு உதவிக் கமிஷனர், இரு உதவி ஆய்வாளர்கள், 60 போலீசு என பெரும்

பீகாக் ஓட்டல்




பட்டாளம் வந்தது. வேலைநிறுத்தம் செய்த தொழிலாளரை வெளியேற்றியது. ஓட்டல் எதிரே நிற்கவும் விடாது எழும்பூர் ரயில் நிலைய சந்துக்குள் விரட்டியது. தொழிலாளர்கள் அமைதியைக் கடைப்பிடித்த போதும் ஓட்டல் எதிர் பிளாட்பாரத்தில்கூட நிற்கவிடவில்லை. ஓட்டல் மூடப்பட்டது.

தொழிலாளிகள், ஓட்டல் எதிரே தர்ணா செய்ய போலீசிடம் அனுமதி கேட்ட போது மறுத்து அந்த நெடுஞ்சாலையிலே கூட இடம்தர மறுத்தது. நீண்ட விவாதத்திற்குப் பின் எழும்பூர் சர்ச் நுழைவாயிலருகே அனுமதித்தது. தொழிலாளிகள் கோரிக்கை தட்டிகளை ஓட்டலின் எதிர் பிளாட்பாரத்தில் கட்டி வைத்ததை விசுவாசமாக போலீசு கும்பல் அகற்றியது.

தொழிலாளர்கள் கேட்பது அரசு அறிவித்த குறைந்தபட்ட சம்பளம், சலுகைகள். ஓட்டல் அதிபர் மறுப்பது மட்டுமல்ல சங்கத்தையே அனுமதிக்கவில்லை.

ஓட்டல் முதலாளியான பி.வி.ஆர். குட்டிமேனன் மந்திரி நாஞ்சில், மனோகரன், முன்னாள் மந்திரிகள் ராஜாராம், குழந்தைவேலு உட்பட பலரும் இவரது வாடிக்கையாளர்கள். குட்டிமேனின் மகன் அனுப்குமார் விபச்சாரம், நீலப்படமெடுப்பது முதல் பல சமூக விரோதக் காரியங்களில் ஈடுபட்டுள்ளவன்.

தொழிலாளருக்கான அரசு அதிகாரிகளோ திரும்பியும் பார்க்கவில்லை. இந்த குட்டிமேனன் இந்திய வங்கியில் வாங்கிய கடனுக்கு கட்ட வேண்டிய வட்டி மட்டும் ரூ.55 லட்சம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ஓட்டல் தொழிலாளரின் நியாயமான கோரிக்கைகள் போலீசால் சட்டபூர்வமாகவும், ரௌடிகளால் சட்டவிரோதமாகவும், அடித்து நொறுக்கப்பட்ட வரலாறுகளில்... இம்பாலா, பிரகாஷ், தந்தூர் ரெஸ்டாரண்ட், சுதா... என நீண்டு செல்கிறது.

அடக்குமுறைகள் போராட்டத்தை நிறுத்தவில்லை. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஒன்றுபடுவதும், போராடி வெல்வதும் தொடர்கிறது.

## ஜோதிப்பிரகாசம்; ஒப்புதல் வாக்குமூலம்

"தமிழ்த் தேசிய அமைப்புகளுக்குள் புகுந்து, பிளவுபடுத்தி, மோதவிட்டு, ரத்தம் குடிக்கும் நோக்கத்தில் டிராட்ஸ்கியவாதிகளாலும், 'ரா'வாலும் ஜோதிப்பிரகாசம் தலைமையில் தமிழர் கழகம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ள"தை பிப்ரவரி புதிய ஜனநாயகம் ஏட்டில் அம்பலப்படுத்தியிருந்தோம். அதனால் தான் இழந்துவிட்ட மானத்திற்கு நட்ட ஈடாக ஒரு லட்சம் ரூபாய் கேட்டு வக்கீல் நோட்டீசு விட்டிருந்தார், ஜோதிப்பிரகாசம். அதற்காக மன்னிப்புக்கோரி செய்திவெளியிடாவிட்டால் குற்றவியல், உரிமையியல் வழக்குகள் தொடுப்பதாகவும் எச்சரித்திருந்தார்.

'புதிய ஜனநாயகம்' வருத்தமோ, மன்னிப்போ, மறுப்போ தெரிவிக்கப் போவதில்லை; நட்ட ஈடும் தரப்போவதில்லை என்றும், ஜோதிப்பிரகாசத்தின் வக்கீல் நோட்டீசுக்கு பதிலும் 1-15 மார்ச் இதழில் எழுதியிருந்தோம். இப்போது ஜோதிப்பிரகாசம் ஒரு நேரடிக் கடிதம் எழுதியுள்ளார்.

"மக்கள மத்தியில் குற்றச்சாட்டுக்கலள மறுப்பதற்குப் பதிலாக வழக்குத் தொடுப்பேன், நட்டஈடு கொடு என்று கேட்டதன் மூலம் ஜோதிப்பிரகாசம் லெனின் கருத்துக்களில் எப்படிப்பட்ட ஈடுபாடு கொண்ட மார்க்சியர் என்று தன்னை அம்பலப்படுத்திக் கொள்கிறார்" என்று நாம் எழுதினோம். "அதில் ஓரளவேனும் - ஓரளவுதான் - நியாயம் இருக்கிறது" என்று கருதுவதால் நேரடியாக நியாயம் கேட்டுக் கடிதம் எழுதினாராம்! "மீண்டும் ஒருமுறை உங்களிடம் நியாயம் கேட்கிறேன். உங்களிடமே நியாயம் கிடைக்குமானால் நான் ஏன் நீதிமன்றம் செல்ல வேண்டும் - மூன்றாம் அமைப்பிடம்!" என்று 'வெகுளித்தனம்' ததும்பக் கேட்கிறார்!

குற்றச்சாட்டுகளில் ஒன்றைத்தவிர மற்றவற்றை மொட்டையாக மறுக்கிறார். அதன் மூலம் நமது கணிப்புகள், புகார்கள் சரியானவை என்பதை மறைமுகமாக ஒப்புக் கொண்டு வாக்குமூலம் தருகிறார். இவர் மீது நமக்கு ஏதோ தனிப்பட்ட காழ்ப்பும் பொறாமையும் இருப்பதாகவும், நெஞ்சுறுதி அயராத உழைப்பு, கொள்கைப்பிடிப்பு, நண்பர்கள், தொழிலாளர்கள், தோழர்களது உதவி ஆகியவற்றினால் உயிர் பிழைத்திருந்ததாகவும் சுய அனுதாப, சோகக் கதை படிக்கிறார்.

அதேசமயம், "வாழ்க்கையின் கேள்விகள் என்ற எனது நூலை வெளியிட அனுமதித்தும், சொற்பொழிவுகள் ஆற்றியும் நான் தன்னார்வக் குழுக்களிடம் இருந்து வருமானம் பெற்று உயிர்பிழைத்திருந்தேன் என்பது உண்மை" என்று ஒப்புக்கொள்கிறார். அதற்காக "அந்தக் குழுவிடம் இன்னமும் நான் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன் - அந்தக் குழு எப்போதோ கலைந்துவிட்டது" என்று வருத்தப்படுகிறார். "தன்னார்வக் குழுக்களில் இருப்பவர்கள் எல்லாம் கயவர்கள் என்றோ மற்றவர்கள் எல்லாம் உத்தமர்கள் என்றோ நான் கருதவில்லை" என்று நியாயப்படுத்துகிறார்.

"மிரட்டுவதற்காக வக்கீல் நோட்டீசு விடவில்லை தனது பதிலை வெளியிடும்படி நிர்பந்திப்பதற்காக செய்தது தான்" என்கிறார். மொட்டையாக மறுப்பதும், அப்பாவி வேடம் போடுவதும், வாதம் வைப்பதும் இவர்மீதான குற்றச்சாட்டுகளை பொய்ப்பிப்பதாகி விடாது. மாறாக அவற்றை உறுதிப்படுத்தவே செய்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# கொலைகாரப் படைக்கு அனுதாபம் ஏன்?

முப்பத்திரண்டு மாதங்களுக்கு முன்பு இலங்கை - ஈழத்தின் மீது படையெடுத்துப் போய் ஆக்கிரமிப்பு போர் நடத்திய இந்திய இராணுவம் படுதோல்வி கண்டு முக்காடு போட்டுக் கொண்டு திரும்பியிருக்கிறது.

இது குறித்து இந்த நாட்டின் உண்மையான தேச பக்தர்கள் யாரும் வெட்கமோ, துக்கமோ கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் உயரிய நோக்கத்தோடு நீதியான யுத்தம் நடத்துவதற்காக இந்திய இராணுவம் இலங்கைக்குப் போகவில்லை. நெஞ்சை நிமிர்த்திப் பெருமை பாராட்டத்தக்க காரியம் எதையும் அது அங்கே செய்யவில்லை.

அந்நிய நாட்டை ஆக்கிரமித்து, ஆதிக்கம் செலுத்துவதற்காகப் போனது. இரத்த வெறி பிடித்த படுகொலைகள், மிருகத்தனமான கற்பழிப்புகள், ஈத்தனமான கடத்தல்கள் ஆகிய இழி செயல்களில் ஈடுபட்டது. இதற்காக இந்திய இராணுவத்தின் மீது ஆத்திரமும், வெறுப்பும் கொள்வதுதான் மனிதப் பண்புள்ள, நேர்மையான செயலாகும்.

ஆனால், இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்ட நோக்கங்கள், காரணங்கள்; ஈழ ஆக்கிரமிப்புப் போரின் போக்குகள், முடிவுகள், விளைவுகள் இந்திய இராணுவம் வெளியேற வேண்டி வந்த சூழ்நிலைகள், நிர்பந்தங்கள், ஈழத்தின் எதிர்காலம், இந்தியாவின் பங்கு - இவை அனைத்தும் குறித்து இந்திய ஆட்சியாளர்கள், தளபதிகள், அதிகாரிகள் இப்போது அடுக்கடுக்காகப் புளுகுகிறார்கள். இந்திய இராணுவத்தின் தார்மீக, போர் உணர்வு குன்றிவிடக் கூடாது என்கிற காரணத்தை முன்னிட்டு அதன் போர்க்களத் தோல்விகளை மூடி மறைக்கிறார்கள்; அதன் அக்கிரமங்கள் - அட்டூழியங்கள், மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்துகிறார்கள்.

இந்தப் பொய்ப் பிரச்சாரத்தை நேர்மையுள்ள தேச பக்தர்கள் அனைவரும் எதிர்த்து அம்பலப்படுத்த வேண்டும். தேச துரோக முத்திரை குத்தித் தனிமைப்படுத்துவார்கள் - தாக்குவார்கள் என்று பயந்துவிடக் கூடாது. இல்லையானால் அவர்கள் இன்னுமொரு ஆக்கிரமிப்பு, அநீதிப் போரைத் தொடுக்கத் துணிவார்கள். ஏன், இந்த நாட்டு மக்கள் மீதே இந்திய இராணுவத்தை ஏவுவார்கள். ஏற்கனவே பஞ்சாபிலும், காஷ்மீரிலும் வடகிழக்கு இந்தியாவிலும் இப்படித்தான் செய்கிறார்கள்.

### படைபலம், சாவு, செலவு எவ்வளவு?

இரவோடு இரவாகவும், தவணை தவணையாகவும் ஈழத்தில் கொண்டுபோய்க் குவிக்கப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை, ஆயுதபலம், இழப்பு, செலவு ஆகிய விவரங்கள் அனைத்தையும் எப்போதும் இரகசியமாகவே வைத்திருந்தனர். இப்போது பல இரகசியங்கள் வெளிவரத துவங்கியுள்ளன அவர்களுடைய வாக்குமூலங்களாகவே.

ஒரு சமயத்தில் 60,000 துருப்புக்கள் வரைதான் இருந்தன என்று அதிகார பூர்வமாகச் சொன்னார்கள். ஒரு லட்சத்துக்கும் மேலிருக்கும் என்று ராணுவ வல்லுநர்கள் கூறியதை மறுத்தார்கள். விமானப்படையும் கப்பல் படையும் தமது சாதனைகளைப் பீற்றிக் கொள்வதற்காக இப்போது வெளியிடும் தகவல்கள் பிரமிக்க வைக்கின்றன.

"கப்பல்கள் மூலம் மட்டும் 3 லட்சம் துருப்புக்களை இலங்கைக்கு ஏற்றிச் சென்றோம். 100 ராணுவக் கவச - பீரங்கி வண்டிகளும், 7000 வாகனங்களும், ஒரு லட்சம் டன் வெடி பொருட்களும், 19,000 டன்கள் எரிபொருள் எண்ணெயும் அனுப்பினோம். அதே அளவு ஆட்களையும் பொருட்களையும் கொண்டு வந்தோம் என்கிறார் கடற்படைத் தளபதி ராமதாஸ்" (இந்தியன் எக்ஸ்பிரஸ் 26.3.90).

"6716 கப்பற் பயண நாட்கள், 8696 மணிநேர கடற்படை விமானப் பயணங்கள் மேற்கொண்டோம். சிறு கடல்வழி தற்காப்புப் படகுகள் முதல் தாக்கி அழிக்கும் போர்க் கப்பல்கள் வரை ஈடுபடுத்தினோம். கொரிய யுத்தத்துக்குப் பிறகு இவ்வளவு பெரும் அளவில் கடற்படை போக்குவரத்து இருந்ததில்லை" (ஷெ).

"இரவு, பகலாக 17 வகை விமானங்களை விமானப் படை ஈடுபடுத்தியது. மொத்தம் நாலேகால் லட்சம் துருப்புக்கள், 30000 டன் தளவாடங்களை ஏற்றிச் சென்றோம். 62,000 மணிநேரம் பறந்தோம். தேடி அழிப்பது, பலியானவர்களை ஏற்றிவிடுவது ஆகிய போர்ப்பணிகளிலும் ஈடுபட்டோம்; 24 மணி நேரத்தில் 173 பயணங்கள் செய்து சாதனை படைத்தோம்" என்கிறார் தென் பிராந்திய விமானப்படைத் தளபதி எஸ்.சந்த். (ஷெ).

ஆக, கப்பற்படையும் விமானப்படையுமாக ஏழே கால் லட்சம் துருப்புக்கள் கொண்டு சென்றிருக்கிறது. சுழற்சி முறையில் அடிக்கடி இராணுவத்தினர் மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பு போரினால் அதிருப்தியும் பயபீதியும் இந்திய இராணுவத்தினருக்கு ஏற்பட்டுள்ளது அல்லது அதைத் தவிர்ப்பதற்காக இப்படிச் செய்தனர்.

"காலணிகூட இல்லாத, லுங்கி அணிந்த 5000 பொடியன்களை எதிர்த்து" ஏழே கால் லட்சம் "வீரர்கள்' மாறி மாறிப் போரிட்டார்கள். அப்படியும் தோற்றுப் போனார்கள்.

"2220 புலிப் படையினரைக் கொன்று, 1220 பேரைக் காயப்படுத்தி, 472 பேரைப் பிடித்தோம்; சிவிலியன் சாவுகள் பற்றித் தெரியாது. ஆனால் 1155 பேரை இழந்து, 2984 பேரே நமது தரப்பில் காயமடைந்தனர்" என்கிறார் கொலைகாரர்களின் தளபதி கல்கத்.

"1300 பேரைத் தியாகம் செய்து2,500 இராணுவத்தினரைக் கொன்றோம்" என்று புலிகள் கூறுகின்றனர். இது உண்மையாக இருக்குமென இந்திய ஏடுகள் ஒப்புக் கொள்கின்றன. இந்திய இராணுவத்தினர் தினந்தோறும் வெளியிட்ட அதிகாரபூர்வ செய்திகளை யாரேனும் தொகுத்தாலே இவர்களின் புளுகு அம்பலமாகிவிடும்.

மொத்தம் 300 கோடி ரூபாய் வரைதான் செலவானது என்று இந்திய அரசு கூறுகிறது. ஆனால் நாள் ஒன்றுக்கு ரூ.3 கோடி வீதம் 32 மாதங்களுக்கு இந்த ஆக்கிரமிப்புக்காக செலவிட்டிருக்கிறது என்று இந்தியப் பத்திரிக்கைகள் எழுதுகின்றன.

இராணுவத்தினர் தவிர, மத்திய துணை ராணுவம், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் முதல் பள்ளி - கல்லூரி ஆசிரியர்கள் வரையும், மின்துறை, செய்தித் தொடர்பு ஊழியர்களையும் இரட்டை ஊதியம் கொடுத்துக் கொண்டு போனார்கள். கடைசியாக ஈழ துரோக இராணுவத்துக்கு பயிற்சிகள் கொடுப்பதற்காக தனியார் நிறுவனங்கள் மூலம் முன்னாள் இராணுவத்தினரின் படையும் அனுப்பப்பட்டது.

### மூடிமறைக்க என்ன இருக்கிறது? இராணுவ ரீதியிலேயே தோல்விதான்!

இந்தியாவின் சீனப் போருக்குப் பிறகு இந்திய இராணுவம் மீண்டும் பெரும் தோல்

படிப்பகம்

www.padippakam.com

வியையும், பேரிழப்பையும் சந்தித்திருக்கிறது. அதன்மீது உருவாக்கிவரும் பிரமைகள் தகர்ந்து போயின. உலகிலேயே நான்காவது பெரிய ராணுவம், ஏழே கால் லட்சம் பேர் போரிட்டும் ''5000 பொடியன்''களை வெல்ல முடியவில்லை. இந்த உண்மையை மறைப்பதற்காக அதிகாரிகளும், தளபதிகளும் முரண்பாடான, பொய்யான பல காரணங்களைக் கூறுகின்றனர்.

புலிகளின் ஆயுதங்களைப் பறிப்பதில் இந்திய இராணுவம் வெற்றி பெற்றதா? என்ற நேரடியாக கொலைவெறியன் கல்கத்திடம் கேட்கப்பட்டது. ''இந்தக் கேள்விக்கு பதிலளிக்க நான் கூச்சப்படவில்லை. ஆயுதங்களை ஒப்படைப்பதாகக் கூறிவிட்டு புலிகள் பின் வாங்கி விட்டார்கள். எனவே ஆயுதங்களைக் களைவதற்குப் பதில் பறிக்க வேண்டியதாயிற்று. 2000 ஆயுதங்கள் புலிகளிடம் இருப்பதாக இந்திய, இலங்கை அரசுகள் கூறின. அதே அளவு பறித்துவிட்டோம் '' என்று புத்திசாலித்தனமாகப் பதில் கூறுவதாக எண்ணி புளுகினார், தளபதி.

இன்னும் இராணுவ ரீதியிலான தோல்வியை மூடிமறைப்பதற்காக உளவுத்துறையின் மீதும், அரசியல் தலைமையின் மீதும் பொறுப்பைச் சுமத்தி தட்டிக் கழிக்கின்றனர் தளபதிகள்.

''அரசியல் தலைமையினர் எங்களுக்குத் தெளிவான உத்திரவுகள், கண்ணோட்டங்கள் தரவில்லை. பல முரண்பாடான, தற்காலிகமான முடிவுகள் எடுத்து குழப்பம் விளைவித்தனர். முதலில் தமிழர்களைப் பாதுகாப்பதற்காக போவதாக எண்ணினோம். பிறகு அவர்களுக்கு எதிராகப் போரிடும்படி ஆகிவிட்டது'' என்று கூறுகின்றனர், தளபதிகள்.

''இந்திய உளவுத்துறை, குறிப்பாக 'ரா' சரியான தகவல்கள் தரத் தவறிவிட்டது. புலிகளுடைய படைபலம், ஆயுத பலத்தைக் குறைத்து மதிப்பீடு செய்துவிட்டது. தமிழ் மக்களின் ஆதரவு, உணர்வு பற்றித் தெரியாமல் போனது. தமிழ் மக்களின் நிலைமைகள் பற்றி தகவல்கள் இல்லை. புதிய இடத்தில், மக்கள் ஆதரவு இல்லாத நிலையில் போரிடுவது சிரமமாக இருந்தது'' என்று மழுப்புகின்றனர்.

''சிரமமான போருக்கு மட்டுமே பயிற்சி பெற்றிருக்கிறோம். நகர்ப்புற கொரில்லாக்களையும், காடுகளில் கலகப்படைகளையும் எதிர்த்துப் போரிட்ட அனுபவம் கிடையாது'' என்று 25 ஆண்டுகளாக வடகிழக்கே தேசிய இன விடுதலைப் போராளிகளை எதிர்த்து, சிறப்புப் பயிற்சி பெற்றுப் போரிடும் இராணுவத்தினர் புளுகுகின்றனர்.

''ஏ.கே.-47 என்ற நவீன இயந்திரத் துப்பாக்கி, பயங்கர நிலக் கண்ணி வெடிகள், அதிவேக கண்ணாடி இழைப் படகுகள், நவீன ஆயுதங்கள் புலிகளிடம் இருந்தன. 'எஸ்.எல்.ஆர்.' எனப்படும் நடுத்தர ரக துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு போரிட்டோம்'' என்று விமானங்களைக் கொண்டு சிதறி - ஊடுருவிப்பாயும் அதிநவீன குண்டுகளை வீசியும், பீரங்கி முதலிய கனரக ஆயுதங்கள், தாக்கி அழிக்கும் கப்பற்படையையும் பயன்படுத்தியவர்கள் புலம்புகின்றனர்.

''புலிகள் சிவிலியன்கள் மத்தியில் ஒளிந்து கொண்டு போரிட்டனர். சிவிலியன் சாவுகளைத் தவிர்ப்பதற்காக ஒரு கையைப் பின்புறம் கட்டிக்கொண்டு போரிட்டோம்'' என்று அண்டப்புளுகு புளுகுகின்றனர்.

ஆக்கிரமிப்பு ஆதரவு ஏடான இந்து எழுதுகிறது, ''ஆனால் இந்திய அமைதிப் படையும் சில அக்கிரமங்களைச் செய்துள்ளது. உரும்பிறையில் இந்திய ஆகாய அதிரடிப் படையினரை புலிகள் சூழ்ந்துகொண்டு அழித்தபோது ஆத்திரமுற்று டி-72 டாங்கிகளை ஏற்றி பல தமிழ் சிவிலியன்களைக் கொன்றது. யாழ் பொது மருத்துவமனையில் குண்டுமாரிப் பொழிந்ததில் டாக்டர்கள், நர்சுகள், நோயாளிகள், ஊழியர்கள் பலர் மாண்டு மக்களிடையே கோபமூண்டது. பீரங்கி பொருத்திய ஹெலிகாப்டர் விமானம் சாவகச்சேரி வீதியில் குண்டு வீசி 65 சிவிலியன்களைக் கொன்றது தமிழர்களை அதிர்ச்சி அடையச் செய்தது'' (இந்து 24.3.90).

இவைதவிர வவுனியா காடுகளில் கூர்க்காப் படைப் பிரிவினர் புலிகளிடம் சிக்கி கூண்டோடு அழிந்தபோதும், மட்டக்களப்பு - திரிகோணமலை தேடி அழித்தலின் போதும் வெறிகொண்டு பல ஈழத்தமிழ் சிவிலியன்களைத் தாக்கிக் கொன்றது இந்திய இராணுவம். கடைசியாக வல்வெட்டித்துறை மோதலில் பல இந்தியத் துருப்புகள் பலியானதும் ஊருக்குள் புகுந்து பலரைச் சுட்டுக் கொன்று, கடைகள் வீடுகளுக்குத் தீயிட்டு சூறையாடியது. ''பல வல்வெட்டித்துறைகள் நடந்திருந்தால் மக்கள் திருந்தி இருப்பார்கள். புலிகளை அழித்திருக்க முடியும்'' என்று இன்னமும் கொக்கரிக்கிறான் ஒரு தளபதி. இதுதான் ஒரு கையைக் கட்டிக் கொண்டு யுத்தம் நடத்துவதா?

உதைப்பட்டுத் திரும்பும் இந்தியராணுவம்



இவ்வளவு வெறியாட்டம் போட்ட கொலைவெறிப் படையின் தளபதி கல்கத் கூறுகிறார், ''புலிகளின் போர்த்திறனைக் கணிப்பது சிரமமானது. பயங்கரவாதத்தில் ஈடுபடும் நபர்களைப் பற்றிப் பேசுகிறோம். எவ்வளவு கொடூரமாக செயல்படுகிறார்களோ அவ்வளவு வெற்றி பெறுகிறார்கள்'' (இந்து 14.3.90).

யாழ், உரும்பிராயில் சிக்கிய ஆகாய அதிரடிப்படையை அழித்தது, யாழ் மருத்துவமனைப் போர்முனை, வவுனியில் கூர்க்காப்படை அழிப்பு, மன்னார் மருத்துவமனைத் தாக்குதல் ஆகிய மோதல்களில் இந்திய இராணுவத்தை, குறிப்பாகப் படுதோல்வி அடையச் செய்தனர் புலிகள். படைத் தளபதிகளே பிரமித்துப் போய் ''அவர்களும் நன்றாகப் போரிட்டார்கள்; நாங்களும் நன்றாகப் போரிட்டோம். ஆனால் உலகிலேயே சிறந்த கட்டுப்பாடும், எழுச்சி உணர்வும், கட்டுப்பாடு மிக்கவர்களாகவும் புலிகள் இருக்கிறார்கள்'' என்கின்றனர்.

''கவிஞன் தான் இழந்துவிட்ட காதலைப் பாடுவான்; கஞ்சன் தான் இழந்துவிட்ட 5 காசுக்காகப் பாடமுடியுமா?'' என்றார் கார்க்கி. அதுபோல இன - விடுதலை உணர்வுள்ள படை எவ்வளவு பெரிய இராணுவத்தையும் வெல்ல முடியும். மக்கள் ஆதரவைப் பெறமுடியும். ஆக்கிரமிப்பு - அட்டூழியங்கள் புரியும் இராணுவம் எங்கிருந்து எழுச்சி, இலட்சிய உணர்வு பெற முடியும்?

''இந்தியா திரும்பும் இராணுவத்தினரிடம் மகிழ்ச்சி இல்லையே'' என்று கேட்டதற்கு, ''மரபுவழி போர்முனையில் அமைதிப்படை போரிடவில்லை. 30 மாதங்கள் இந்தச் சூழ்நிலையில் இருந்த சிரமம் காரணமாக இருக்கலாம். ஆனால் படையில் இருந்து யாரும் ஓடவில்லை; உத்திரவுகளை மறுக்கவோ , போதை மருந்து கடத்தல்களில் ஈடுபடவோ இல்லை. இவை தான் இராணுவத்தின் எழுச்சி உணர்வு அளவுகோல்'' இப்படி எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்கிறார் கல்கத் (இந்து 19.3.90).

கலர் டி.வி வி.சி.ஆர். போன்ற மின்னணு ஆடம்பரப் பொருட்களைக் கடத்தி படையினர் பலரும் சிக்கியதாக இந்து, எக்ஸ்பிரஸ் முதலிய ஏடுகளே எழுதின. இவற்றைக் கடத்தியவர்கள் போதை மருந்தைக் கடத்தவில்லை என்று எப்படிக் கூற முடியும்? பல ஈழத் தமிழ் பெண்களை கற்பழித்ததோடு, சிறுவர்களுடன் ஓரின உறவு கொண்டு துன்புறுத்தியது. திடீர் திடீரென்று தாறுமாறாக தமது படையினர் மீதே கிறுக்குப் பிடித்து சுட்டது — இவையெல்லாம் இந்திய இராணுவத்தின் எழுச்சி உணர்வைக் காட்டுகிறதா

என்னதான் மழுப்பினாலும் இந்திய ஆக்கிரமிப்புப் படை வியட்நாமில் அமெரிக்காவும், ஆப்கானில் ருஷ்யாவும், கம்பூச்சியாவில் வியட்நாமும் வெளியேறியதைப் போல தோற்றுத் துரத்தப்பட்டது தான். நேரடியாக, கடைசி நிமிடத்திலும் உதை வாங்கி ஓடி வருவதற்கு பதில் ஒப்பந்தம் மூலம் வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது. இதைத்தான் கௌரவமான விலகல் என்று சாதிக்கிறார்கள்.

தொடரும்

www.padippakam.com

# பட்ஜெட்:

* ஏழைகளை பட்டினிச்சாவுக்குத் தள்ளுவது
* நடுத்தர மக்களை ஏழைகளாக்குவது
* விவசாயிகளை ஓட்டாண்டிகளாக்குவது
* தரகு முதலாளிகள் நிலப்பிரபுக்களை கொழுக்க வைப்பது

# மீண்டும் அதே பாதையில்...

சோசலிசவாதியும், பொருளாதாரப் புலியுமான புதிய அரசின் நிதியமைச்சர், நாட்டை முன்னேற்ற ஆழ்ந்து சிந்தித்து முற்போக்கான பட்ஜெட்டை சமர்பித்துள்ளதாக முதலாளித்துவப் பொருளாதார வாதிகள் பெருமைப்படுகின்றனர். ஆனால் இந்த பட்ஜெட்டும் ஏழைகளை ஏறிமிதிக்கும் பொருளாதாரத் தாக்குதலாகவே உள்ளது. பரந்துப்பட்ட மக்களுக்காகப் போராடும் பலம் வாய்ந்த ஒரு அமைப்பு இல்லாத தைரியத்தில், இந்த ஆண்டும் விலையேற்றம், கட்டண உயர்வு, வரி விதிப்புகளை தாராளமாக்கியுள்ளது தேசிய முன்னணி அரசு.

பெட்ரோல் - டீசல் விலையை கிடுகிடுவென உயர்த்தியும், ரயில்வே - தபால் கட்டணங்களை அநியாயமாகக் கூட்டியும் பாமர மக்களின் தலையில் மேலும் பொருளாதார சுமைகளை ஏற்றியுள்ளது. சென்ற ஆண்டைவிட புதிதாக 1959 கோடி ரூபாய்க்கு வரிகளைப் போட்டு கசக்கிப் பிழிந்தும் கூட, பற்றாக்குறை ரூ.7206 கோடியாக உள்ளது. அதே சமயம் கடந்த ஆண்டைவிட ரூ2250 கோடி அதிகமாக அதாவது 15,750 கோடி ரூபாயை ராணுவத்துக்காக ஒதுக்கியுள்ளது.

### பற்றாக்குறை பட்ஜெட்டுக்கு பத்திரிக்கைகள் புகழ்மாலை

உலகெங்கும் பெட்ரோல் விலை நிலைப்படுத்தப் பட்டுள்ள நிலையில் இந்தியாவில் மட்டும் விலை உயர்வு; கடந்த ஆண்டைவிட வருமானம் அதிகரித்தும் கூட, புதிதாக கட்டண உயர்வு. ஈராண்டுகளுக்கு முன்பு தபால்கட்டணங்களை உயர்த்தியது போதாது என்று மேலும் 33% கட்டண உயர்வு. இத்தனையும் போதாதென்று கூடுதலாக ரூ1959 கோடிக்கு வரிவிதிப்பு. ஆகா! இது ஏழைகளின் பட்ஜெட் என்று புகழ்கின்றன ஆதரவு பத்திரிக்கைகள். ஆகா! இது முற்போக்கான எதார்த்தமான பட்ஜெட் என்று வரவேற்கின்றனர் முதலாளிகள்.

இருப்பினும் 7.206 கோடி ரூபாய் பட்ஜெட்டிலே பற்றாக்குறை. பற்றாக்குறை பட்ஜெட் பண வீக்கத்துக்கும் விலையேற்றத்துக்கும் வழி வகுக்கும் என்பது பொருளாதார அரிச்சுவடி. ஆனாலும் அவை கட்டுப்படுத்தப்படும் என்று நம்பச் சொல்கிறார் நிதிமந்திரி.

இதில் வேடிக்கை என்னவென்றால் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதே எங்கள் முதற்கடமை என்று தேசிய முன்னணி பிரகடனம் செய்து கொண்டிருக்கும் போதே, பட்ஜெட் அறிவிக்கப் பட்டதும் உலகிலேயே மிக அதிக விலைக்கு - அதாவது 1 லிட்டர் பெட்ரோல் ரூ.11.40-க்கு நாக்பூரில் விற்கப்பட்டது. டீசல் விலையேற்றம் காரணமாக அடுத்து பேருந்து கட்டணங்கள் உயரவுள்ளன.

ஆனாலும் இது பொருளாதாரத்தை சரியான பாதைக்குத் திருப்பிவிடும் சரியான முயற்சி; அதை விமர்சிப்பது சரியல்ல; இது புதிய அரசின் கன்னி பட்ஜெட்; முந்தைய அரசினால் ஏற்பட்ட பற்றாக்குறை இழப்பை புதிய அரசு உடனே ஈடுசெய்ய முடியாது; எனவே நாட்டு நலன் கருதி மக்கள் இந்த சுமைகளை தற்காலிகமாக ஏற்று தியாகம் செய்ய வேண்டும் என்கின்றனர், ஆளும் வர்க்க பொருளாதாரவாதிகளும், பத்திரிக்கைகளும்.

நான்காண்டுகளுக்கு முன்னர் பாசிச ராஜீவ் கும்பல் அயோக்கியத்தனமாக கூடுதல் வரிவிதிப்பு, விலையேற்றத்தைச் செய்த போது, நாட்டு மக்களைப் பார்த்து தியாகம் செய்யச் சொன்னது. இன்று ''முற்போக்கு'' பட்ஜெட் தயாரித்துள்ள தேசிய முன்னணி அரசும் அதே குரலில்தான் பேசுகிறது.

### விவசாயிகளுக்கு பட்டைநாமம் நிலப்பிரபுகளுக்கு சலுகை

ரூ10,000 வரையிலான விவசாயக் கடன்களை ரத்து செய்வோம் என்று தேர்தல் வாக்குறுதி அளித்த தே.மு. அரசு, இப்போது அதைக் காற்றில் பறக்க விட்டுவிட்டது

ரூ.10,000 வரையிலான கடன்களை ரத்து செய்தால், அரசுக்கு ரூ.14,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று கணக்கு காட்டுகிறார், நிதிமந்திரி. எனவே தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலம் வட்டியைக் குறைப்பது, பகுதியளவு கடனை ரத்து செய்வது என்றும் முடிவு செய்துள்ளதாக கூறுகிறார். இந்தச் சலுகை கூட போண்டியாகிப் போன விவசாயிகளுக்குத்தான். இதிலே, கூட்டுறவு வங்கிகளிடம் விவசாயிகள் பெற்ற கடனை ரத்து செய்ய மாநில அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று தலையில் கட்டிவிட்டது மத்திய அரசு. ஆக, விவசாயிகளுக்கு பட்ஜெட்டில் பட்டைநாமம் போடப் பட்டுள்ளதைத் தவிர வேறொன்றுமில்லை.

ஆனாலும் விவசாய மேம்பாட்டுக்கென 45% நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாய்மாலம் செய்கிறது தே.மு.அரசு. ஆனால் மத்திய திட்டச் செலவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 15% நிதியில்தான் விவசாயத்துக்கென 45% ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது மொத்த பட்ஜெட்டில் 6.75% தான் விவசாயத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற மேம்பாட்டுக்கான அற்பத் தொகையை ஒதுக்கி கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகளை வறுமைப் படுகுழியில் தள்ளும் அதே சமயம், பணக்கார விவசாயிகள், நிலப்பிரபுகளுக்கு சாதகமாக - உரத்துக்கு மானியமாக 4,000 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளார். பணக்கார விவசாயிகளைப் பக்க பலமாகக் கொண்டு தே.மு.அரசில் ஆதிக்கம் செலுத்தும் தேவிலால் கும்பலுக்கு கிடைத்த வெற்றி இது. நவீன வகை விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பணக்கார விவசாயிகளுக்குத் தரப்படும் இந்தச் சலுகையோடு, சூரியகாந்தி எண்ணெய், காட்டுக் கடுகு எண்ணெய் உற்பத்திக்கும் எக்சைஸ் வரிச் சலுகை தரப்பட்டுள்ளது.

நாடு முழுவதுமான சீரான விவசாய வளர்ச்சிக்குப்பதில் பாசன வசதி கொண்ட திட்டுத்திட்டான பகுதிகளில் பணப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டு சலுகைகளை வாரியிறைக்கிறார்,

1986 இல் விலைவாசி உயர்வை எதிர்த்து பெர்னாண்டஸ் மறியல்; எதிர்க்கட்சியாய் இருந்தால் போராடுவார், மந்திரியாய் இருந்தால் விலையேற்றுவார்.



படிப்பகம்

நிதி மந்திரி. இதன் மூலம் விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியை ஈட்டி சுயசார்பான பொருளாதாரத்தைக் கட்டியமைத்துவிட முடியும் என்று நம்பச் சொல்கிறார். நவீன வகை பணக்கார விவசாயிகளைக் கொழுக்க வைத்ததைத் தவிர வேறொன்றையும் சாதிக்காத பசுமைப் புரட்சித் திட்ட பாதையில்தான் தே.மு. அரசும் புறப்பட்டிருக்கிறது. ஆனால் இதனை வேறு வார்த்தைகளில் ''விவசாயத்துக்கு முன்னுரிமை தரப்படும் பட்ஜெட்'' என்று எடுபிடிகள் சித்தரிக்கின்றனர்.




### தரகு முதலாளிகளுக்கு தாராள சலுகை

முந்தைய ஆட்சியாளர்களைப் போலவே கருப்பு பணத்தை ஒழிப்பதுதான் எங்கள் லட்சியம் என்ற சூளுரைக்கிறார் நிதி மந்திரி. பாசிச இந்திரா கொண்டுவந்த கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்கும் திட்டத்தின் கீழ் பத்தாண்டுகளுக்கு முன்பு முதலீடு செய்தவர்களுக்கு இப்போது அந்தப் பணத்தை திருப்பித் தர வேண்டியுள்ளது. ''இது கருப்புப் பணமாயிற்றே. திருப்பித் தர மாட்டோம் என கருப்புப் பண முதலாளிகளிடம் அறிவிப்பீர்களா?'' என்று நிருபர்கள் கேட்ட போது ''பரிசீலிக்கிறேன்'' என்றார் 'சோசலிச' நிதிமந்திரி. ஆனால் பட்ஜெட்டில் அதைப் பற்றி அவர் வாயே திறக்கவில்லை.

இதே போலத்தான் தேசத்தை திவாலாக்கிய பாசிச ராஜீவ் கும்பலின் தொழிற் கொள்கையை தே.மு.அரசும் பின்பற்றுகிறது. ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்திக்கு கூடுதல் சலுகை, வரிக் குறைப்புகளை அறிவித்து தரகு முதலாளிகளுக்கு தாராள விருந்து படைத்துள்ளார், காந்திய சோசலிச நிதிமந்திரி மதுதண்டவதே. செயற்கை இழை நூலுக்கான இறக்குமதி தீர்வை குறைப்பு, தொழில் நிறுவனங்களில் பங்குதாரர்களின் லாபத்துக்கு வரிவிலக்கு, கூட்டுப் பங்கு தொழில் நிறுவனங்களுக்கு வரிக் குறைப்பு, சுங்கவரி - ஆயத்தீர்வை சலுகைகள்; தங்கக் கட்டுப்பாட்டு சட்டத்தை நீக்குவது என்று அடுக்கடுக்காக சலுகைகளை அள்ளிக் கொட்டியுள்ளார். இதுதவிர ஏற்றுமதிக்கான உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு சலுகை, மானியம், வரிக்குறைப்புகளை வாரி வழங்கியுள்ளார்.

சுருக்கமாகச் சொன்னால் பாசிச ராஜீவ் மேற்கொண்ட அதே கொள்கை, அதே பாதைதான். ஆனால் ஏகபோகங்களை அனுமதிக்க மாட்டோம்; முறைகேடான சலுகைகளை வெட்டுவோம் என்று ஆரவாரங்களால் மூடி மறைத்துவிட்டு ஏதோ புதிய பாதையில் அடியெடுத்து வைத்துள்ளதாக பசப்புகிறார்.

### நாட்டை போண்டியாக்கும் நாசகார பாதை

இத்தகைய ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்தியானது இறக்குமதியை மேலும் அதிகரிக்கும். அதாவது சர்வதேச சந்தையில் போட்டியிடும் அளவுக்குத் தரமான பொருட்களைத் தயாரிக்க வேண்டுமானால் நவீன எந்திரங்களை ஏகாதிபத்தியங்களிடமிருந்து இறக்குமதி செய்ய வேண்டும். இதனால் அன்னியச் செலாவணி பற்றாக்குறை மேலும் பெருகி, மீண்டும் ஏகாதிபத்தியங்களிடம் கடன் வாங்க நேரிடும். அது மேலும் விரைவாக நாட்டை திவாலாக்கி விடும்

இதிலே கொடுமை என்னவென்றால், வாங்கிய கடனுக்கு வட்டி கட்டவே பட்ஜெட்டில் 18% தொகை போய்விடுகிறது. அதாவது ஏகாதிபத்தியங்களிடம் கடன் வாங்கித் திவாலாகிப் போன லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு இணையாக இந்த ஆண்டு 17,000 கோடி ரூபாய்களை வட்டியாகச் செலுத்தப் போகிறது தே.மு.அரசு. இந்த லட்சணத்தில் ஏற்றுமதியைப் பெருக்கி, கடனைக் குறைத்து சுயசார்பான பொருளாதாரத்தைக் கட்டியமைக்கப் போவதாக ஆட்சியாளர்கள் காதில் பூ சுற்றுகின்றனர். இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த ஆண்டின் பட்ஜெட் வருவாயில் 27% தொகை உள்நாட்டு - வெளி நாட்டுக் கடன்களின் மூலம்தான் பெறப்படுகிறது. இப்படி ஆண்டுக்காண்டு பெருகும் கடனும் வட்டியும் சேர்ந்து நாட்டைப் போண்டியாக்கிவிடும் என்பதுமட்டும் நிச்சயம்.

### விரிவாக்கப் பேராசை! விரிவடைகிறது ராணுவச் செலவு!

கடந்த ஆண்டைவிட பற்றாக்குறையைக் குறைத்துவிட்டதாக பாசாங்கு செய்து கொண்டே, மிக அதிகமாக ராணுவச் செலவுகளுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது புதிய அரசு. இலங்கை ஆக்கிரமிப்புப் போரினால் ஏற்பட்ட பொருளாதாரச் சுமை இப்போது இல்லை. படைகள் அனைத்தும் திரும்பி விட்டன. இந்திய - சீன எல்லைத் தகராறை ஒட்டி போருக்கான நிலைமை கூட உடனடி நிகழ்ச்சி நிரலில் இல்லை. ஆனால் காஷ்மீர் பிரச்சனையை ஒட்டி பாகிஸ்தான் எல்லையில் பதற்ற நிலை உள்ளதாகக் கூறி கடந்த ஆண்டை விட ரூ.2250 கோடி அதிகமாக, அதாவது, மொத்தத்தில் ரூ.15,750 கோடியை ராணுவத்துக்காக ஒதுக்கியுள்ளது தே.மு.அரசு. பெரும் வல்லரசுகளே ஆயுதக் குறைப்பில் ஈடுபடும் போது, ஏழை நாடான இந்தியா தனது வருவாயில் 18% தொகையை ராணுவத்துக்காக செலவிடுவது அக்கிரமமானது; அயோக்கியதனமானது. ஆனால் போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட அனைத்து ஓட்டுக் கட்சிகளும் பூதாகரமான ராணுவச் செலவை நியாயப்படுத்தவே செய்கின்றன.

நீண்ட காலமாக நிலவிவரும் பாகிஸ்தான் எதிர்ப்பு தேசிய வெறி - இந்து வெறியைத் தக்க வைத்துக் கொள்ள புதிய ஆட்சியாளர்கள் செய்யும் முன்னேற்பாடுதான் இது. தேசிய முன்னணி அரசின் உயிர் நாடியைக் கையில் பிடித்துள்ள இந்து வெறி பாசிச சக்தியான பாரதீய ஜனதா கட்சிக்கு அரசியல் ரீதியில் சாதகமான முடிவுதான் இது. அதைவிட, தெற்காசிய பிராந்தியத்தில் ஆதிக்க - விரிவாக்க, துணை வல்லரசாக இந்தியாவை மாற்றத் துடிக்கும் ஆளும் வர்க்கங்களின் பேராசைக் கொள்கையின் பிரதிபலிப்புதான் இது.

### பாசிச ராஜீவின் பாதையில்...

சுருக்கமாகச் சொன்னால் பாசிச ராஜீவ் கும்பல் மேற்கொண்ட அதே பொருளாதாரக் கொள்கையைத் தான் சாராம்சமாக புதிய அரசின் பட்ஜெட் பிரதிபலிக்கிறது. இன்னும் சொல்லப் போனால் நேற்றுவரை ராஜீவின் ஆலோசகர்களாக செயல்பட்ட அதே அதிகாரிகள் தான் இந்தப் பட்ஜெட்டை தயாரித்துள்ளனர். நேற்று வரை ராஜீவின் பொருளாதார ஆலோசகராக இருந்து இன்றைய ஆட்சியில் பதவி உயர்வு பெற்றுள்ள கோபி அரோரா கடைசி நேரத்தில் விமானத்தில் பறந்து வந்து தே.மு.அரசின் பட்ஜெட்டைப் பரிசீலித்து திருத்தங்களைச் செய்துவிட்டுப் போனார்.


வறியவர்களைப் பட்டினிச் சாவுக்கு தள்ளுவது, நடுத்தர வர்க்கத்தினரை ஏழைகளாக்குவது, நிலப்பிரபுக்கள்-தரகுமுதலாளிகளை கொழுக்க வைப்பது என்பதைத் தவிர புதிய அரசும் இந்த பட்ஜெட்டில் புதிதாக எதையும் சாதிக்கவில்லை. 40 ஆண்டு காலமாக இதே திசையில்தான் எல்லா பட்ஜெட்டுகளும் போடப்படுகின்றன. ஆட்சிகள் மாறினாலும் அரசின் விவசாயம், தொழில், பொருளாதாரக் கொள்கைகள் அடிப்படையில் மாறுவதே இல்லை. ஒவ்வொரு பட்ஜெட்டிலும் ஒரு சிலருக்கு சலுகை, வரிகளில் சில மாற்றங்கள் என்பதைத் தவிர அனைத்து பட்ஜெட்டுகளும் ஒரே மாதிரியாகத் தான் இருந்து வருகின்றன. எனவே ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவு பிரதிநிதிகளுக்குப் பதில் மற்றொரு பிரிவினர் ஆட்சிக்கு வருவதால் உழைக்கும் மக்களுக்கு ஒரு பலனும் ஏற்படப் போவதில்லை. ஓட்டுக் கட்சிகளுக்கு வெளியே சக்தி வாய்ந்த மக்கள் திரள் இயக்கத்தினரின் புரட்சிகரமான எதிர்த் தாக்குதலைத் தொடுக்காமல் இத்தகைய பொருளாதாரத் தாக்குதலை முறியடிக்க வேறு வழியுமில்லை.

● பாலன்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



சி.பி.எம். அர்கிஷன் சிங் சுர்ஜித், தேவி லால், வி.பி.சிங், ராஜீவ்காந்தி, சி.பி.ஐ. இந்திரஜித் குப்தா, காங்கிரசு சிவசங்கர்

# காஷ்மீர் சர்வகட்சிக் கூத்து

காஷ்மீர் பிரச்சினையில் ஓட்டுக் கட்சிகளுக்கிடையே கருத்துவேறுபாடு கிடையாது. அதே போல அரசு பயங்கரவாதத்தை ஏவி காஷ்மீரி இனவிடுதலை இயக்கத்தை ஒடுக்குவது என்பதைத் தவிர அவைகளிடம் வேறு தீர்வும் கிடையாது.

இருந்தபோதும் இந்த ஓட்டுக் கட்சிகள் எல்லாம் ஒன்றுகூடி சர்வகட்சித் தீர்வுகாணும் முயற்சியில் இறங்கின. அது கோமாளிகள் சேர்ந்து கூத்தாடிய கதையாய் முடிந்துள்ளது. இந்தக் கூத்திலே கோமாளிகளின் கோமாளியாக 'மாஜி' பிரதமர் ராஜீவ்காந்தி பிரபலமடைந்து விட்டார்.

'மாஜி' பிரதமர் ராஜீவ் தாய்வழியில் காஷ்மீரி. அதாவது அவரது தாத்தா நேருவும், ஆத்தா இந்திராவும் காஷ்மீரிப் பார்ப்பனர்கள். காஷ்மீரி இனவிடுதலைக்கு துரோகம் செய்து, இந்திய விசுவாசிகளாகும் காஷ்மீரிப் பார்ப்பனர்கள் ஜம்முவுக்கும் டில்லிக்கும் அகதிகளாக ஓடிவருகிறார்கள். ராஜீவின் பரம்பரை ரத்தம் கொதிக்கத் துவங்கியது.

அதோடு சட்டமன்றத் தேர்தல் தோல்விகள், அடுத்தடுத்து ஊழல் முற்றியதற்கான பொறுப்பை நேரு - இந்திரா - ராஜீவ் பரம்பரை ஆட்சிதான் ஏற்கவேண்டும். அதை மறைத்துவிட்டு ஜனதா தள அரசு வந்தபிறகு அதன் கையாலாகாத்தனம் காரணமாகத்தான் காஷ்மீரில் நிலைமை மோசமாகிவிட்டது என்று குதிக்க ஆரம்பித்தார், ராஜீவ்.

அவரது சுகபோகக் கூட்டாளி பரூக் அப்துல்லாவோடு போய் அரசுத் தலைவர் வெங்கடராமனிடம் முறையிட்டார். காஷ்மீர் கவர்னர் ஜக்மோகனையும், மத்திய உள்துறை மந்திரி முஃப்தி முகம்மது சையதுவையும் சாடிக் கேலி செய்து பிரதமர் வி.பி.சிங்குக்கு நேரடிக் கடிதம் எழுதினார். நிலைமையை நேரில் காண தனது கூட்டணிக் கட்சிகளுடன் காஷ்மீர் போவதாகவும், ஊரடங்கு உத்தரவின் போதும் பயணம் போய்வர அனுமதிச் சீட்டுத் தரும்படியும் கோரினார்.

ஆத்திரத்தை அடக்கிக்கொண்ட விடாக்கண்டன் வி.பி.சிங் ஒரு தந்திரம் செய்தார். ராஜீவை நேரில் அழைத்துப்பேசி சர்வகட்சிக் கூட்டம் நடத்த முடிவு செய்தார். ''தேசியப் பிரச்சினை'', ''ஒன்றுபட்ட தீர்வு'', ''சர்வகட்சி நடவடிக்கை'' - இதெல்லாம் விவகாரத்தில் இருந்து நழுவிக் கொள்வதற்கு தோதானவை அல்லவா!

பிரதமரின் வீட்டிலே சர்வகட்சித் தலைவர்கள் கூடி விருந்துண்டு குலாவினர். குண்டு துளைக்காத கோட்டுத்தான் பழைய, புதிய பரிசுத்தங்களுக்கிடையே இருந்தது. அவ்வளவு நெருங்கிக் கட்டிப்பிடித்து, 'ஜோக்' அடித்து சிரித்து மகிழ்ந்தனர். பிறகு, அடுத்த நாளே அதிஉயர்மட்ட சர்வகட்சிக் குழு காஷ்மீருக்குப் போய் மக்களை நேரில் சந்தித்து, நிலைமையை ஆய்வு செய்து வருவது என்று தீர்மானித்தனர்.

காஷ்மீரிகளும் துரோகிகளுமான முஃப்தியும் ஃபருக்கும், ஒப்புக்கொண்டபடி காஷ்மீருக்குப் போகப் பயந்து டில்லியிலேயே ஒளிந்துகொண்டனர். தேவிலால், ராஜீவ் தலைமையில் பத்திரிக்கையாளர்கள் - பரிவாரங்களுடன் சிறப்பு விமானத்தில் சர்வகட்சிக் குழு பறந்தது.

ஐந்து நட்சத்திர செண்டூர் ஓட்டலில் தங்கி, விருந்து முடிந்தும், ஸ்ரீநகருக்குள் நுழைய ஒருவருக்கும் துணிவு வரவில்லை. அங்கேயே கவர்னருடன் மாநாடு கூடியது. கூட்டம் தொடங்கும் முன்பே குரைக்கத் துவங்கிவிட்டார் ராஜீவ்.

''ஜக்மோகன்ஜி, உள்ளூர் பத்திரிக்கையாளர்கள் யாரும் இல்லையே. இங்கே பத்திரிக்கைகளே அச்சிடுவதற்கில்லையா?'' என்றார் ஏளனமாக. ''கவர்னர் வந்து எல்லாவற்றையும் செயலிழக்கச் செய்துவிட்டார்'' என்று ஒத்தூதினார் அவரது காஷ்மீர் கூட்டணிக் கட்சி எம்.பி.

சிறப்பு விமானத்தில் காஷ்மீரில் இறங்கும் சர்வகட்சி குழு.



அவ்வளவுதான், பாரதீய ஜனதாக் கட்சி எம்.பி. ஜஸ்வந்த் சிங்குக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. பருக்கும், ராஜீவும் பத்திரிக்கை அடக்குமுறைச் சட்டங்கள் போட்டதை குத்திக் காட்டும்வகையில், ''பத்திரிக்கைகள் பற்றி நீங்கள் கத்துக் கொடுக்க வேண்டியதில்லை. வேண்டுமானால் நீங்களே போய் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

கூட்டம் தொடங்கியதும், ராஜீவ் ஆர்ப்பரித்தார். ''மர்பு மரியாதையை மதிக்காமல் துணைப் பிரதமர் தேவிலாலை கவர்னருக்கு இடதுபுறம் உட்கார வைக்கலாமா?'' என்று அதிமுக்கியமான பிரச்சினையைக் கிளப்பினார். ''துணைப் பிரதமருக்காவது மரியாதை காட்டுங்கள். இது தேசத்தையே அவமதிக்கும் பிரச்சினை'' என்றார். ''தேசத்தின் கௌரவம் உங்கள் பிரச்சினை மட்டுமல்ல. பல நிறுவனங்களையும் சிதைத்த நீங்கள்தான் தேசத்தின் கௌரவம் பற்றி கடைசியாகப் பேச முடியும்'' என்று மீண்டும் ஜஸ்வந்த் சிங் மோதினார்.

''துணைப் பிரதமரை தவறான பக்கம் உட்கார வைத்ததற்கு ஆட்சேபனை தெரிவிக்கிறேன். அவரை வரவேற்க கவர்னர் விமான நிலையம் வரவில்லை. அவர் எனது துணைப்பிரதமர்; தேசத்தின் துணைப் பிரதமர்'' என்று குதித்தார் போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர். பருக் அதற்கு 'ஜால்ரா' போட்டார். ''யார் யார் வருகிறார்கள் என்று எனக்குத் தெரியாது'' என்று சாட்சியுடன் கூறிய ராஜீவின் மூக்குடைத்தார், கவர்னர்.

பன்றித் தொழுவத்தின் புனிதத்தைக் காக்கும் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் நம்பூதிரிபாடு கட்சி எம்.பி. குறுக்கிட்டார்; ''பத்திரிக்கையாளர்களை வைத்துக் கொண்டு இப்படிப் பேசுவது துரதிருஷ்டவசமானது; முறையற்றது'' என்று பதறிப்போனார். அப்படி என்றால் முறைப்படியும் ஒழுக்கம் - பொறுப்போடும் பேசும்படி வலியுறுத்தினாரா? அதுதான் இல்லை! ''இதெல்லாம் இரகசியமாக விவாதிக்க வேண்டும்'' என்று கூறி பத்திரிக்கையாளர்களை வெளியேற்றச் செய்தனர்.

அப்புறம் கதவை மூடிக்கொண்டு சர்வகட்சி கூட்டத்தினர் குதறிக்கொண்டனர்.

''என்னுடைய ஆட்சியில் கவர்னராக இருந்தபோது காஷ்மீருக்குரிய சிறப்புத் தகுதிச் சட்டம் ஏ-370 பற்றி என்ன சொன்னாய்'' என்று அம்பலப்படுத்தட்டுமா என்று மிரட்டினார், ராஜீவ். ''அப்போது நீ என்ன சொன்



படிப்பகம்

www.padippakam.com

னாய் என்பதை நானும் சொல்வேன்'' என்று பதிலுக்கு மிரட்டினார் ஜக்மோகன்.

இரகசியக் கூட்டத்தை முடித்துக் கொண்டு வெளியே வந்து அவரவருக்கு வேண்டியவாறு பத்திரிகையாளருக்கு செய்தி கொடுத்தனர். ''நீங்கள் இரகசியங்களைச் சொன்னால் நானும் சொல்லுவேன்'' என்று கவர்னர் உறுமினார்.

பத்திரிக்கையாளர்கள் கூட்டத்தில் கவர்னரை ஏசிய ராஜீவ் ''காஷ்மீர் தெருக்களில் நடந்துபோய் துப்பாக்கிக் குண்டுகளைச் சந்திக்கத் தயார்'' என்ற வீரதீரச் சவடால் அடித்தாராம். அத்தனை பேரும் விழுந்துவிழுந்து சிரித்தார்களாம்.

''காஷ்மீரில் உடனடியாக அரசியல் நடவடிக்கையைத் தொடங்க வேண்டும். சிரமமான, விலை அதிகமான வழிதான் இருக்கிறது. அதை நான் இப்போது விளக்கமாட்டேன்'' என்று பிகுப் பண்ணிக் கொண்டார், ராஜீவ். ''காஷ்மீர் விவகாரத்துக்கு உங்கள் தீர்வு என்ன?'' என்று கேட்டபோது, ''அரசு தான் முதலில் சொல்ல வேண்டும்'' என்று முதலில் மழுப்பினார்.

பிறகு, மீண்டும் கேட்டபோது, ''நேரடியான பதில் வேண்டுமா? என்னிடம் ஒரு திட்டமும் கிடையாது'' என்று கையைவிரித்து வெத்து வேட்டுத்தனம் வழிய நின்றார்.

டெல்லி திரும்பியதும், ''கவர்னர் ஜக்மோகனை 'இட்லர்' என்றும், 'ஜெனரல் டயர்' என்றும் 'துர்க்மான் கேட் குடிசை இடிப்பு கொலைகாரன்' என்றும் காஷ்மீரிகள் ஏசுகின்றனர். அவரால்தான் எல்லாம் கெட்டுக் குட்டிச்சுவரானது. காஷ்மீர் நிர்வாகமே நிலைகுலைந்து போனது. முஸ்லீம் எதிர்ப்பு மதவாத ஆட்சி நடக்கிறது. மக்கள் நேரு பரம்பரைக்குத் தான் விசுவாசமாக இருக்கின்றனர். பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த 40 பேரை சந்தித்து நிலைமை அறிந்தேன்'' என்று அடுக்கடுக்காகப் புளுகினார்.

சர்வ கட்சிகளுமே போட்டிபோட்டுக் கொண்டு இப்படிப் புளுகின. ஐந்து நட்சத்திர ஓட்டலைவிட்டு வெளியே போகத் துணியாது, விருந்துண்டு, ''சுற்றுலா'' போய்வந்த சர்வகட்சியினர், ''பயணம்மிகவும் பயனுள்ளதாக இருந்தது; கள நிலைமையை, அடிமட்ட உணர்வைப் புரிந்துகொண்டோம்'' என்று கூசாது பொய் சொன்னார்கள்.

மீண்டும் சர்வகட்சியினர் கூடி இரண்டு முடிவுகள் எடுத்தனர். காஷ்மீருக்கென்று தனி அமைச்சகம் உருவாக்குவது; கவர்னருக்கு ஒரு ஆலோசனைக் குழு அமைப்பது இவைதான் சர்வ கட்சியினர் கூடி வெங்காயத் தோலுரித்துக் கண்டுபிடித்த விடை. பரூக் அப்துல்லாவின் நெருங்கிய நண்பர் ஜார்ஜ் பெர்ணாண்டசுக்கு ரயில்வே இலாகவுடன் காஷ்மீர் பொறுப்பும் ஒப்படைத்ததோடு மிகப்பெரும் சாதனையும் படைத்தனர்!

காஷ்மீரின் சுயநிர்ணய உரிமையை ஏற்காத இந்த ஓட்டுக் கட்சிகள் இப்படித் தான் பிரமைகளை உருவாக்க முடியுமே தவிர பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

''காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்தது இணைந்ததுதான். அதுபற்றி பாகிஸ்தானுடனோ, தீவிரவாதிகளுடனோ பேசவே முடியாது'' என்று இந்திய அரசும் ஓட்டுக்கட்சிகளும் என்னதான் கூப்பாடு போட்டாலும் அங்கு இவர்களுடைய அதிகாரம் செல்லுபடியாவதில்லை.

இவ்வளவு தூரம் குதிக்கும் சூரப்புலி ராஜீவ் காஷ்மீருக்குப் போயே 20 மாதங்கள் ஆகின்றன. ஸ்ரீநகரில் உள்ள மாநில காங்கிரசு அலுவலகம் இராணுவ முகாமாக மாறிவிட்டது. மாநில முன்னாள் காங்கிரசு தலைவர் குலாம் ரசூல் கார், இன்னாள் தலைவர் முகம்மது ஷபிகுரேஷி ஆகியோர் வீடுகளிலேயே குண்டுகள் வெடித்து மிரண்டுபோய் உள்ளனர்.

'காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி' என்று பகிரங்கமாகச் சொல்லவே மாநில ஜனதா தளத் தலைவர் பயப்படுகிறார். 'மார்க்சிஸ்ட்' கட்சித் தலைவரோ அலுவலகத்தை மூடிவிட்டு ஜம்முவுக்கு ஓடிவிட்டார். அதன் பல்வேறு பகுதி உள்ளூர் பிரமுகர்கள் விடுதலைப் போராளிகளிடம் மன்னித்துவிடும்படி கோருகின்றனர். வலது ''கம்யூனிஸ்டு' கட்சி அலுவலகம குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு விட்டது.

பரூக்கின் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் மீண்டும் கருத்துக் கணிப்பு கோரிக்கையை ஆதரிக்கின்றனர். அதன் உள்ளூர் பிரமுகர்கள் கட்சியிலிருந்து விலகிவிட்டதாக பத்திரிக்கைகளில் தினமும் விளம்பரங்கள் தருகிறார்கள்.

சமீபத்தில் தேர்தல்களைப் புறக்கணித்த விடுதலைப் போராளிகள், வாக்குச்சாவடி முன்பு ''கலர் வானொலி'' பெட்டியை வைத்து ''ஓட்டுப் போட தைரியமுள்ளவர்கள் எடுத்துப் போகலாம்'' என்று அறிவித்தனர். யாரும் தொடவில்லை. இப்படித் தான் தேர்தல்கள் நடத்தப்பட்டன. நிர்வாகமே நிலைகுலைந்து போய்விட்டது.

காஷ்மீரைக் கூறுபோட்டு ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்திய, பாகிஸ்தான் இராணுவங்கள் வெளியேற வேண்டும்! ஒன்றுபட்ட காஷ்மீரி இன மக்கள் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமை பெற வேண்டும். காஷ்மீரை வைத்து இந்திய பாகிஸ்தான் ஓட்டுக்கட்சிகளும் அரசுகளும் அரசியல் சூதாடுவதை நிறுத்த வேண்டும்.

■ மாணிக்கவாசகம்

## கறுப்பு பூனைகள் அட்டகாசம் கிராமவாசிகள் மீது தாக்குதல்



வரைமுறையற்ற அதிகாரம் - உரிமைகள், தாராளமான சம்பளம் - சலுகைகள், அதிநவீன பயிற்சி - ஆயுதங்கள் கொடுத்து பாசிச ராஜீவ் கும்பல் உருவாக்கியது கருப்புப் பூனைகள் என்று பிரபலமாகியுள்ள அதிரடிப்படை. தேசியக் காவற்படை (என்.எஸ்.ஜி) என்று அதன் பெயர். டெல்லி அருகில் உள்ள கிராம மக்களிடம் அது தனது பலத்தையும், சுய ரூபத்தையும் காட்டியிருக்கிறது.

டெல்லிக்குத் தெற்கே மெஹரம் கிராமத்தில் அந்த அதிரடிப் படையின் முகாம் உள்ளது. அந்தக் கிராமத்திலே நடந்த 'திங்கள் சந்தை'க்கு வந்த சில விவசாயிகள், முகாமின் அருகே ஒதுங்கப் போய், உள்ளே எட்டிப் பார்த்தார்கள். ரோந்து வந்த கருப்புப் பூனைகள் அவர்களைத் தாக்கி விரட்டின. ஆத்திரமுற்ற விவசாயிகள் ஏதோ திட்டிவிட்டனராம். உடனே விசில் கொடுத்து 200க்கும் மேற்பட்ட கருப்புப் பூனைகள் மெஹரம் கிராமத்துக்குள் புகுந்தன. சுற்றி வளைத்துக்கொண்டு கிராமத்தினரை அடித்து நொறுக்கினர். கடை வீதிக்குள் புகுந்து சூறையாடிக் கொள்ளையிட்டனர்.

ஊருக்கு வெளியே கூடியிருந்த 'திங்கள் சந்தை'யின் மீது பாய்ந்து கடைகளை நொறுக்கி, விவசாயிகளையும், சிறுவியாபாரிகளையும் ரத்தம் பீறிடத் தாக்கின, கறுப்புப் பூனைகள். இத்தனையும் செய்துவிட்டு, ''பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்து, கலவரம் செய்து, காவற்படையினரைக் கொல்ல முயன்றதாக'' உள்ளூர் போலீசு நிலையத்தில் கிராமவாசிகளுக்கு எதிராக வழக்கும் பதிவு செய்தனர். படை முகாமின் சுவரை சிதைத்து சில கிராமவாசிகள் அசிங்க மாக்கியதாகவும், தடுக்கப் போன படைவீரரை பாட்டிலை உடைதது குத்தியதாகவும், பிறகு திட்டமிட்டு 50,60 கிராமவாசிகள் தங்களைத் தாக்கியதாகவும் இப்போது புளுகுகின்றனர்.

தங்களுடைய வாகனங்களைத் தாங்களே உடைத்துக் கொண்டு அதைக் காரணங் காட்டி போலீசுக்காரர்கள் மக்களைத் தாககுவது நமக்குத் தெரியாதா என்ன! அப்பாவித்தனமாக முகாமுக்குள் எட்டிப் பார்த்தற்கே இவ்வளவும் நடந்திருக்கிறது! கிரிமினல்கள் அதிகாரமும் ஆயுதமும் வைத்துக் கொண்டிருக்கும் வரை மக்கள் நிராயுதபாணிகளாக இருக்கும்வரை இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடரும்!

படிப்பகம்

www.padippakam.com



## தமிழக சட்டமன்றம்:

# ஆடம்பர அரட்டை மடம்!

தமிழக மக்கள் என்ன பாக்கியம் செய்தார்களோ! தமிழக சட்டமன்றக் கூத்துக்களே ஒரு தரமான பொழுதுபோக்கு சினிமாவைப் பார்த்த திருப்தியைக் கொடுத்து விடுகிறது.

காதல், சோகம், சவால், சண்டை, கேலி, கிண்டல், சிரிப்பு என்று அனைத்தும் கலந்த தமிழ் சினிமா பாணியில் ஓட்டுப் பொறுக்கிகள் நடத்தும் சட்டமன்றக் கூத்துக்களை விறுவிறுப்புடன் அப்படியே படம் பிடித்து பத்தி பத்தியாக நிரப்பி காசாக்கிக் கொள்கின்றன தமிழ் நாளேடுகள். மக்களுக்கு கடமையாற்றுவதாகக் கூறிவிட்டு பொதுப் பணத்தை விரயமாக்கும் இப்பிழைப்புவாதிகளின் கூத்துக்கள் சமீபத்திய பட்ஜெட் கூட்டத் தொடரில் மேலும் ஒருபடி முன்னேறி சந்தி சிரித்தது.

மார்ச் 17 அன்று முதல்வர் கருணாநிதி பட்ஜெட் உரையை வாசிக்கத் தொடங்கியதும் அ.தி.மு.க.வின் எஸ்.ஆர்.ராதாவும், ஐக்கிய 'கம்யூனிஸ்ட்' கட்சியின் நஞ்சப்பனும் எழுந்து ஆளுக்கொரு அறிக்கை வாசிக்கத் தொடங்கினர். அதைக் கண்டித்து, முன்னாள் சபாநாயகர் பாண்டியன் ஏதோ கூறினார். அதன்பிறகு காங்கிரசாரும் அ.தி.மு.க.வினரும் கோஷம் போட்டுக் கொண்டே வெளிநடப்பு செய்தனர்.

இப்படி ஆரம்பக் கூட்டமே வெளிநடப்பு - உள்ளிருப்பு - குறுக்கீடு என்ற 'உதார்'களுடன் விறுவிறுப்பாகத் தொடங்கியது.

அதன்பிறகு பாசமும் பக்தியும் நிறைந்த உள்ளத்தை உருக்கும் காட்சிகள் தொடங்கியது. கடந்த ஆண்டைப் போல இந்த நிதியாண்டிலும் அரசாங்க காண்டிராக்டுகளை தமக்கே தரவேண்டுமென்பதற்காக உடன்பிறப்புகள் தலைவன் மீது பக்தியைப் பொழிந்தார்கள். அதன் வெளிப்பாடாக, ''தமிழக பட்ஜெட் பக்கத்துக்குப் பக்கம் கருத்துப் பெட்டகமாக உள்ளது,'' ''கரும்பாக இனிக்கிறது,'' ''ஏழைகளின் பட்ஜெட்'' என்று புகழ் பாடினர். அரசாங்க ஒப்பந்தங்கள் அனைத்தும் ஆளுங்கட்சிக்கே போய்விடக் கூடாதே என்ற ஆதங்கத்தில் கூட்டணி கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு தமது பங்குக்கு பாசத்தைப் பொழிந்தன. பார்வர்டு பிளாக் கட்சியின் எம்.எல்.ஏ. வல்லரசு, ''தமிழக பட்ஜெட் சர்க்கரைப் பொங்கலாக இனிக்கிறது. தமிழ்ச் சங்கம் எழுந்து நடைபயில வந்தது போல் கலைஞரின் உரை கரும்பாக இனிக்கிறது'' என்றார். ஜனதா தளத்தின் பூவராகன் ''இலக்கியச் சுவையுடன் தயாரிக்கப்பட்ட இனிய பட்ஜெட்'' என்று துதி பாடினார்.

பின்னர், எதிர்க் கட்சி தரப்பில் பட்ஜெட்டை விமர்சித்துப் பேசிய குமரி அனந்தன், சாராயத்தை எதிர்த்து சண்ட மாருதம் பொழிந்தார்.

உடனே போலிக் கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ. ரமணி எழுந்து, ''உங்கள் கட்சி ஆளும் மாநிலங்களில் சாராயம் ஓடவில்லையா? 40 ஆண்டுகளாக சாராயத்தை ஒழிக்க முடியாத நீங்கள் தமிழகத்தை மட்டும் ஏன் குறை கூறுகிறீர்கள்? நீங்களோ, நானோ யார் வந்தாலும் சாராயத்தை ஒழிக்க முடியாது'' என்று காங்கிரசாரை வாயடைத்தார். தி.மு.க.உறுப்பினர் புகழேந்தி, ''காந்தி பிறந்த போர் பந்தரிலேயே கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது'' என்று சீண்டினார்.

பின்னர் காட்சி மாறியது. காங்கிரசு உறுப்பினர் பொன்னம்மாள் சாராயத்தால் தாய்க்குலம் பாதிக்கப்படுவதை விளக்கி ஒப்பாரி வைத்தார். அவர் மெய்யாகவே கண்ணீர் வடித்தாராம். அவருக்கு உறுப்பினர்கள் ஆறுதல் கூறி அமர வைத்தார்களாம். இப்படி ஒரு சுற்று ஒருவரையொருவர் சீண்டி சுகம் கண்டு, சோக வெள்ளத்தில் நீந்திக் கரையேறிய பிறகு அடுத்த காட்சியாக அரட்டையும் நகைச்சுவையும் அரங்கேறியது.

''ஓட்டல்களில் டீ - காபி சாப்பிடுவது போல மலிவுவிலை மதுவை சுகாதாரமான முறையில் விநியோகம் செய்யவேண்டும்'' என்று போலிக் கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ. ரமணி அரசைக் கேட்டுக் கொண்டார். மேலும் அவர், ''ஈ, கொசு மொய்க்கும் அளவில் மலிவு விலை மதுவை விற்காமல், சுகாதாரத்துடன் சீருடை அணிந்த சர்வர்களைக் கொண்டு விநியோகிக்க வேண்டும். ஒருவருக்கு ஒரு தம்ளர், 2 தம்ளர் அளவுக்கு மட்டுமே கொடுக்க வேண்டும்'' (ரமணியின் 'லிமிட்' அவ்வளவுதான் போலிருக்கிறது) என்று ஆலோசனைகளை வாரி வழங்கினார்.

சுவையான இந்த அரட்டையில் சுகம் கண்டதும் உறுப்பினர்களுக்கு குஷி பிறந்து விட்டது. அப்புறம் நகைச்சுவை காட்சிகள் குடுபிடிக்கத் தொடங்கி விட்டது. காங்கிரசு உறுப்பினரான பீட்டர் அல்போன்சு, ''பட்ஜெட்டிலுள்ள குறைகளை மறைக்கும் வகையில் கலைஞர் கன்னித் தமிழில் உரையாற்றியிருக்கிறார். ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்; அதனுள்ளே இருக்குதாம் ஈறும் பேனும் என்ற பழமொழியைத் தான் இது நினைவுபடுத்துகிறது'' என்றார்.

உடனே போலிக் கம்யூனிஸ்டு பெண் உறுப்பினரான பாப்பா உமாநாத், ''ஆண்கள் தலையில் பேனே இருக்காதா? பெண்கள் தலையில்தான் இருக்குமா? இதை நான் ஆட்சேபிக்கிறேன்'' என்று 'பெண் உரிமைக்காக' குரல் கொடுத்தார். ''இங்கே பெண் உறுப்பினர்கள் இருப்பதை மறந்துவிடக்கூடாது'' என்று சபாநாயகர் தமிழ்க் குடிமகன் குறிப்பிட்டதும் அவை உறுப்பினர்கள் ''குபீர்'' என சிரித்தனர். ''பேன்கள் உள்ள தலையைத்தான் குறிப்பிட்டேன். பெண்கள் அனைவரது தலையை அல்ல'' என்று பீட்டர் அல்போன்சு மீண்டும் 'ஜோக்' கடித்தார்.

திரும்பவும் பீட்டர் அல்போன்சு, ''குமரிமுனையில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை அமைக்கவுள்ளதை பாராட்டுகிறேன். 133 அதிகாரங்களைக் கொண்ட திருக்குறளில் ''கள்ளுண்ணாமை'' என்ற அதிகாரம் உள்ளது. சாராயத்தை திறந்து விட்டுள்ள நீங்கள், வள்ளுவர் கோபித்துக் கொள்ளாமலிருக்க ஒரு அடியைக் குறைத்து 132 அடி உயரத்தில் சிலை அமைக்க வேண்டும்'' என்றார். உடனே தமிழ்க்குடிமகன், ''நீங்கள் புலால் உண்பீர்களா? சாப்பிடுவீர்கள் என்றால் வள்ளுவருக்கு 131 அடி கொண்ட சிலைதான் வைக்க வேண்டும்'' என்றதும் மீண்டும் அவையில் சிரிப்பலை பொங்கியது.

மாண்புமிகுகளுக்கு திடீரென மக்கள் மீது கரிசனம் பிறந்துவிடும். அப்புறம் மக்கள் பிரச்சினை என்ற பெயரில் அரட்டையும் ஆராய்ச்சியும் சுவையான விவாதமாக நடக்கத் தொடங்கிவிடும்.

மார்ச் 21 அன்று சட்டமன்றத்தில், காங்கிரசு உறுப்பினராக டேனியல்ராஜ், ''2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாண்டிய மன்னன் ஆண்ட காலத்தில் கொற்கை துறைமுகமாக இருந்துள்ளது. வரலாற்றைச் சிறப்பு மிக்க கொற்கையை சுற்றுலாத்தளம் ஆக்க வேண்டும்'' என்று கோரினார்.

அமைச்சர் கே.பி.கந்தசாமி எழுந்து, ''முன்னொரு காலத்தில் துறைமுகமாக இருந்த கொற்கை இன்று கடலுக்கு வெகு தொலைவில் உள்ளது. அங்கு ஒரு குளம் உள்ளது. அந்த இடத்தை சுற்றுலா தளமாக்க முயற்சி எடுக்கப்படும்'' என்றார்.

அதிமுக்கியமான மக்கள் பிரச்சினையை விவாதிப்பதாக கருதிக்கொண்டு

படிப்பகம்

www.padippakam.com

டேனியல்ராஜ் அடுத்த துணைக் கேள்வியைத் தொடுத்தார் ''அந்த குளத்தில் படகு விடுவீர்களா? அங்குள்ள வரலாற்று சிறப்புமிக்க விநாயகர் கோவிலில் ஆண்டுதோறும் விழா கொண்டாட ஏற்பாடு செய்யவேண்டும்'' என்றார்.

உடனே விவாதம் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்திற்கு திரும்பியது. சபாநாயகர் தமிழ்க்குடிமகன் ''பிள்ளையார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாக உறுப்பினர் கூறுகிறாரா?'' என்றார்.

உடனே முதல்வர் கருணாநிதி குறுக்கிட்டு, ''பிள்ளையார் வந்தது பாண்டிய மன்னன் காலத்தில் அல்ல; பல்லவர் காலத்தில்தான்'' என்று வரலாற்று ரீதியான விளக்கத்தில் இறங்கினார். மீண்டும் தமிழ்க் குடிமகன் ''கி.பி.7ம் நூற்றாண்டில் வாதாபியிலிருந்து தமிழகத்துக்கு பிள்ளையார் கொண்டுவரப்பட்டார்'' என்று ஆதாரங்களைக் குறிப்பிட்டார். பின்னர், மாவட்டந்தோறும் சுற்றுலா மையம், விடுதி, பூங்கா அமைப்பது பற்றிய விவாதத்தில் இறங்கி, அரட்டை அடித்து ஓய்ந்தபிறகு அன்றைய அவை நிகழ்ச்சிகள் முடிவுக்கு வந்தன.

பாசம், சோகம், நகைச்சுவை காட்சிகள் மட்டுமே சினிமாவாகிவிடாது சண்டைக் காட்சிகள் இருந்தால்தான் விறுவிறுப்பாக இருக்கும். சொல்லி வைத்தாற்போல, தமிழக சட்டமன்றத்திலும் மார்ச் 20 அன்று அ.தி.மு.க. சட்டமன்ற தலைவர் எஸ்.ஆர். ராதாவுக்கும், பி.எச்.பாண்டியனுக்குமிடையே ரோஷமான சண்டை மூண்டது. இது வெறும் வாய்ச்சண்டை, வசவுகளாகவே நின்றுவிட்டதால் ரசிகர்களுக்கு சற்று ஏமாற்றம்தான்!

ஜெயலலிதா கார் விபத்து பற்றி ஒரு ஒத்திவைப்பு தீர்மானத்தை முன்மொழிந்து அ.தி.மு.க. உறுப்பினர் உக்கம்சந்த் பேசத் தொடங்கியதும், பி.எச்.பாண்டியன் எழுந்து ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார். அதை எதிர்த்து எஸ்.ஆஸ்.ராதா பேசியதும், பி.எச்.பாண்டியன் ''டேய்!'' என்று துள்ளிக் கொண்டு பாய்ந்தார். எஸ்.ஆர்.ராதாவும் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு ஆபாசமாக திட்டினார். உறுப்பினர்கள் ஓடிப்போய் அவர்களைப் பிடித்துக் கொண்டனர். ஆனாலும் இருவரும் ஏகவசனத்தில் பேசியபடி பாய முற்பட்டனர். சபாநாயகர் பலமுறை எச்சரித்தும் யாரும் கேட்கவில்லை. பின்னர், சபாநாயகர், பி.எச்.பாண்டியனுக்கு கடைசி எச்சரிக்கை விடுத்தார். ''எல்லோரும் பழைய சபாநாயகராக மாறும் காலம் வரும்'' என்று புலம்பியபடியே அவர் வெளியேறினார்.

இந்த வாய்ச் சண்டையின் போது இரு தரப்பினரும் பரிமாறிக் கொண்ட ஆபாச வசவுகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதென வழக்கம் போலவே சபாநாயகர் அறிவித்தார். குடிகாரன் வயிறுமுட்ட குடித்துவிட்டு வாய்க்கு வந்ததை உளறுவதைப் போல, ஓட்டுப் பொறுக்கிகளுக்கு மக்கள் மன்றத்தில் நுழைந்துவிட்டால் சுயநினைவே இழந்துவிடும். ஒருவருக்கொருவர் சவால்விட்டு ஆபாசமாக சாடிக் கொண்டு முடித்தபிறகு அவற்றை சபைக் குறிப்பிலிருந்து நீக்குவது இவர்களது வாடிக்கையாகிவிட்டது.

இன்னும் சொல்லப் போனால் ஜனநாயகம் - கண்ணியத்துக்கும் இந்த ஓட்டுப் பொறுக்கிகளுக்கும் துளியும் சம்பந்தம் கிடையாது. நாடாளுமன்ற சட்டமன்றங்களில் ஆபாச வச்வுகளைக் கேட்பதையும் அடி - உதையில் இறங்குவதையும், அரட்டை அடிப்பதையும் அவர்கள் அசிங்கமானதாக கருதவில்லை. அதையே ஓட்டுப் பொறுக்குவதற்கான பிரச்சாரமாகக் கருதுகிறார்கள். கொள்கை, லட்சியங்களை மூட்டை கட்டிவைத்துவிட்டு, கவர்ச்சித் திட்டங்கள், பிழைப்புவாதிகளைக் கொண்டு பொறுக்கி அரசியல் நடத்த அவர்கள் கிளம்பிவிட்ட பிறகு இத்தகைய கூத்துக்கள் அவர்களுக்கு அவசியமாகிவிட்டன. தமிழகத்தை அச்சுறுத்தும் வறட்சி, தீராத காவிரி நீர் பிரச்சினை, ரேஷன் கடை அரிசி விலையேற்றம், ஆலை மூடல், வேலையின்மை முதலான மக்களது அடிப்படைப் பிரச்சினைகளை இத்தகைய கூத்துக்களால் சாமர்த்தியமாக மூடி மறைத்துவிட்டனர். இனியும் இப்பித்தலாட்ட மோசடிகளை சகித்துக் கொண்டிருக்க முடியாது. பொறுக்கி அரசியலாக சீரழிந்துவிட்ட ஓட்டுக்கட்சி ஆட்சிமுறையின் யோக்கியதையை அம்பலப்படுத்தி, பரந்துபட்ட மக்களைப் புரட்சிக்கு அணிதிரட்டும் பணியை நாம் முனைப்புடன் முன்னெடுத்து செல்ல வேண்டும்.

● குமார்

பாண்டிச்சேரி:

## அராஜகத்துக்கு ஆளுநரே உடந்தை

நடந்து முடிந்த பாண்டிச்சேரி சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. - காங்கிரசு கூட்டணி 14 இடங்களையும் தி.மு.க. கூட்டணி 15 இடங்களையும் சுயேட்சை வேட்பாளர் ஒரு இடத்தையும் கைப்பற்றியிருந்தனர். சுயேட்சை உறுப்பினருடன் பேரம் நடத்தி தி.மு.க. கூட்டணி தமக்கு பெரும்பான்மை இருப்பதாக காட்டியது. இருப்பினும் உரிய பெரும்பான்மை இல்லாத காரணத்தால் 3 நியமன உறுப்பினர்களை மத்திய அரசு கொல்லைப்புறமாக நியமித்தது. இவர்கள் மூவருமே தி.மு.க.வினர் என்பதால் இதை எதிர்த்து காங்கிரசு கூட்டணி வழக்கு தொடுத்தது.

இதற்கிடையில் கவர்னர் சந்திரவதியின் உத்திரவுப்படி மூத்த உறுப்பினரான தவசு (இ.காங்) தற்காலிக சபாநாயகராக நியமிக்கப்பட்டார். மார்ச் 22 அன்று சபை கூடுவது என்றும் அன்று சபாநாயகர் தேர்தல் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. தவசு தலைமையில் சபை கூடியதும் சபாநாயகர் தேர்தலுக்கு இ.காங்கிரசின் வைத்தியலிங்கமும், தி.மு.க.வின் பழனிராஜாவும் போட்டியிட்டனர். அதற்கேற்ப வாக்குப் பெட்டி தயாராகி, வாக்குச் சீட்டுக்களும் உறுப்பினர்களிடம் விநியோகிக்கப்பட்டது. இதே நேரத்தில் புதிய நியமன உறுப்பினர்கள் மூவரும் ஓட்டுப்போட வந்தனர். காங்கிரசு - அ.தி.மு.க.வினர் இதை எதிர்த்து கோஷம் போட்டனர்.

நியமன உறுப்பினர்களை ஓட்டுப்போட அனுமதிக்க முடியாது என்று வாதிட்டார் தவசு. சபை கூடும் நேரத்தில் அவசரமாக 3 நியமன உறுப்பினர்களுக்கு கவர்னர் ரகசிய காப்பு பிரமானம் செய்துவைத்து ஓட்டுப்போட அனுப்பியது, சட்டத்துக்கே முரணானது என்று எகிறிக் குதித்தார், முன்னாள் காங்கிரசு முதல்வர் பரூக். உடனே கூச்சலும் குழப்பமும் பெருகி ஆபாச வசவுகளை உறுப்பினர்கள் பரிமாறிக் கொண்டனர். இதைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மார்ச் 30ந்தேதி வரை சபையை ஒத்திவைப்பதாக தவசு அறிவித்ததும் காங்கிரசு கூட்டணியினர் வெளியேறினர்.

அதே நேரத்தில் அவைக்குள் வேகமாக ஓடிவந்த சட்டமன்ற செயலாளர், கவர்னர் ஒரு அவசர உத்திரவு போட்டிருப்பதாக கூறினார். தவசு தனது கடமைகளை சரிவர நிறைவேற்றாததால் தி.மு.க. உறுப்பினர் ராமநாதனை தற்காலிக சபாநாயகராக நியமித்திருப்பதாக அறிவித்தார்.

உடனே ராமநாதன், சபாநாயகர் நாற்காலியில் போய் அமர்ந்து கொண்டு சபாநாயகர் தேர்தலை நடத்துவதாக அறிவித்தார். காங்கிரசு - அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறிய நிலையில் எஞ்சியிருந்த 15 தி.மு.க. கூட்டணியினர், 3 நியமன உறுப்பினர்கள் மற்றும் ஒரு சுயேச்சை உறுப்பினர் அனைவரும் சேர்ந்து வாக்களித்து பழனிராஜாவை சபாநாயகராகத் தேர்ந்தெடுத்தனர். எதிர்கட்சியினரை வெளியேற்றிவிட்டு இந்த கேலிக்கூத்தை நடத்தி முடித்ததும், அதன் பிறகு சபையைக் கூட்டி தி.மு.க. முதல்வர் ராமச்சந்திரன், கவர்னர் ஆசியோடு பட்ஜெட்டையும் தாக்கல் செய்துள்ளார்.

ஏற்கனவே ஒருவர் தற்காலிக சபாநாயகராக உள்ளபோது புதிதாக ஒருவரை கவர்னர் நியமித்தது செல்லாது; நியமன உறுப்பினர்கள் ஓட்டுப் போட்டது சட்டத்துக்கே முரணானது; எதிர்கட்சி உறுப்பினர்களை வெளியேற்றிவிட்டு ரகசியமாக தேர்தல் நடத்தியதற்காக தி.மு.க. கூட்டணி ஆட்சியை கலைக்க வேண்டுமென காங்கிரசு கட்சியினர் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு கொடுத்து வழக்கு தொடுத்துள்ளனர். தவசு அறிவித்தவாறு 30ந் தேதி வரை அவைக்குச் செல்லமாட்டோம் என காங்கிரசு கூட்டணி சபையைப் புறக்கணித்துள்ளது.

ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள அரசு எந்திரத்தைக் கேடாகப் பயன்படுத்துவது, கவர்னர்களை ஏஜெண்டுகளாக்கி அவர்கள் ஏற்றிப் போற்றும் ஜனநாயகத்தையே கேலிக் கூத்தாக்குவது என்பது பாசிச காங்கிரசின் பாரம்பரியம் மட்டுமல்ல. ஜனநாயக மரபுகளை மதிப்பதாக பீற்றிக் கொள்ளும் தேசிய முன்னணியின் யோக்யதையும் அதுதான்!

படிப்பகம்

www.padippakam.com

# நிறவெறி ஆதிக்கத்திலிருந்து விடுதலை

## நிர்மூலமாக்கப்படவில்லை காலனியாதிக்கம்

நூற்றைம்பது ஆண்டுகாலம் காலனியாதிக்கத் தளையில் சிக்குண்டு கிடந்த சின்னஞ்சிறு நாடான நமீபியா, மார்ச் 20ந் தேதியன்று நள்ளிரவில் பெயரளவிலான சுதந்திரமடைந்துள்ளது. நிறவெறி ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்துள்ள நமீபியாவை உலகெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் வரவேற்கும் அதேசமயம், ஏகாதிபத்தியங்களும் அதன் எடுபிடிகளும் நமீபியா முற்றாக விடுதலையடைந்து சுதந்திரக் காற்றை சுவாசிப்பதாக ஆரவாரம் செய்கின்றனர்.

நேற்று வரை நமீபிய மக்களை அடக்கி ஒடுக்கி, தன் கோர நகங்களால் நமீபியாவின் கனிவளங்களைச் சுரண்டிக் கொழுத்த தென் ஆப்பிரிக்காவும், அதற்குத் துணையாக நின்ற ஏகாதிபத்தியங்களும் இன்று நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்குவது ஏன்? எங்கிருந்து வந்தது இந்த திடீர் கரிசனம்?

### நிறவெறிக் காட்டுமிராண்டித்தனமும் காலனிய அடக்குமுறையும்

சிறுபான்மை வெள்ளை நிறவெறிக் காட்டுமிராண்டிகள் கருப்பின மக்களை அடக்கி ஆளும் தென் ஆப்பிரிக்காவின் வடக்கேயுள்ள சிறிய நாடுதான் நமீபியா. வற்றாத கனிவளமும் உழைப்பிற்கு அஞ்சாத மனித ஆற்றலையும் கொண்ட இச்சிறிய நாட்டை 1833 முதல் 1915 வரை ஜெர்மனிய ஏகாதிபத்தியவாதிகள் அடக்கி ஆண்டனர். பின்னர் முதல் உலகப் போரின்போது ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகள் நமீபியாவைக் கைப்பற்றி அதை தென் ஆப்பிரிக்காவின் பொறுப்பில் விட்டுச் சென்றனர். அதைத் தொடர்ந்து தென் ஆப்பிரிக்கா, பன்னாட்டு சங்கத்தின் அனுமதியுடன் நமீபியாவைத் தனது இரும்புப்பிடியின் கீழ் வைத்துக் கொண்டு அடிமைப்படுத்தியது.

நிறவெறி பிடித்த தென்னாப்பிரிக்க அரசு, வெள்ளையர்களே எஜமானர்கள்; கருப்பர்கள் அடிமைகள் என்று 1920ல் அறிவித்தது. 1922ல் அனுமதிச் சீட்டு சட்டம் இயற்றி நமீபிய மக்கள் தமது சொந்த நாட்டில் சுதந்திரமாக நடமாடக் கூட தடைவிதித்தது. 1925ல் ஒப்பந்தக் கூலிகள் என்ற பெயரில் கொத்தடிமை முறையைக் கொண்டு வந்து ஒடுக்கியது. அதேசமயம், நிலக்கரி, இரும்பு, தங்கம், வைரம் முதலான கனிவளமிக்க நமீபியா ஏகாதிபத்தியங்களால் சூறையாடப்பட்டது. அற்பக் கூலிக்கு நாள் முழுவதும் உழைத்து நாயினும் கேடான நிலைக்கு நமீபிய மக்கள் தள்ளப்பட்டனர்.

ஆனால் நிறவெறிக் காட்டுமிராண்டித்தனம், காலனியாதிக்கம் எனும் இரட்டை நுகத்தடியின் கீழ் அடிமைப்பட்டு கிடக்க நமீபிய மக்கள் ஒருக்காலும் சம்மதிக்கவில்லை. தென்மேற்கு ஆப்பிரிக்க மக்கள் அமைப்பின் (SWAPO ஸ்வாபோ) தலைமையில் திரண்டு ஆயுதப் போராட்டத்தில் இறங்கினர். தென்னாப்பிரிக்க நிறவெறியர்கள் ஸ்வாபோ தலைவர்களைச் சிறையிலடைத்து வதைத்தும், போராளிகளைக் கொன்றொழித்தும் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்ட போதிலும் நமீபிய மக்களின் நியாயமான போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை. தென்னாப்பிரிக்காவின் நிறவெறிக் காட்டுமிராண்டித்தனத்திற்கும் நமீபிய ஆக்கிரமிப்புக்கும் எதிராக உலகெங்கும் எதிர்ப்புகள் கிளம்பியது. அதைத் தொடர்ந்து சர்வதேச நீதிமன்றமும், ஐ.நா. சபையும் நமீபியாவை தனி நாடாக அறிவித்து தென்னாப்பிரிக்காவை வெளியேறும்படி அடுத்தடுத்து தீர்மானங்களை நிறைவேற்றி கண்டித்தன. ஆனால் தென்னாப்பிரிக்காவும் அதன் கூட்டாளிகளான அமெரிக்கா, பிரிட்டன், மே.ஜெர்மனி, பிரான்சு, ஜப்பானிய ஏகாதிபத்தியங்களும் இதை ஏற்க மறுத்து தமது அடக்குமுறை, சுரண்டலைத் தீவிரப்படுத்தின.

### ஏகாதிபத்திய எடுபிடி நாடுகளிடையே போர்

இதற்கிடையே நமீபியாவுக்கு அடுத்து அதன் வட எல்லையில் உள்ள அங்கோலா போர்ச்சுகீசிய காலனியாதிக்கத்திலிருந்து 'விடுதலை' அடைந்து அங்கு ரஷ்ய அடிவருடி கும்பலின் ஆட்சி உருவானது. தென் ஆப்பிரிக்க நிறவெறி அரசுக்கு எதிராகப் போராடிவரும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ், (ANC), நமீபிய விடுதலைக்காகப் போராடிவரும் ஸ்வாபோ ஆகிய அமைப்புகளுக்கு ஆதரவளித்து ஆயுத உதவியும் செய்தது, அங்கோலா.

இதனால் ஆத்திரமடைந்த தென்னாப்பிரிக்கா, அங்கோலாவின் ரஷிய எடுபிடி அரசை வீழ்த்தி, கனிவளமிக்க அந்நாட்டைக் கைப்பற்ற அங்கோலா மீது படையெடுத்தது. மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் இந்த ஆக்கிரமிப்பு போரை ஆதரித்து நேரடியாக ஆயுத உதவியும் செய்தன. இந்த ஆக்கிரமிப்புக்கு தளமாகவும் பின்பலமாகவும் நமீபியாவை தென்னாப்பிரிக்கா பயன்படுத்தியது. இதனால் நமீபியாவைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக முன்னிலும் தீவிரமாக நமீபிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கி, பயங்கரவாத காட்டாட்சியைக் கட்டவிழ்த்துவிட்டது.




இந்நிலையில் அங்கோலாவுக்கு ஆதரவாக, மத்திய அமெரிக்காவிலுள்ள ரஷிய அடிவருடி நாடான கியூபா, தனது கூலிப்படைகளை அங்கோலாவில் கொண்டுவந்து குவித்தது. தென்னாப்பிரிக்கப் படைகளுக்கும் ரஷிய எடுபிடி கியூபா, அங்கோலா படைகளுக்குமிடையே கடந்த 13 ஆண்டுகளாக கடுமையான போர் நடந்து வந்தது. போரில் பலத்த அடிவாங்கிய தென்னாப்பிரிக்கப் படைகள் நமீபியாவின் வட பகுதியைத் தளமாகக் கொண்டு தொடர்ந்து தாக்குதல் தொடுத்துவந்தன.

### உதைபட்ட தென்னாப்பிரிக்காவின் படைவிலக்க நாடகம்

அதே நேரத்தில் நமீபிய மக்களின் விடுதலைப் போர் காட்டுத் தீயாகப் பரவத் தொடங்கியது. மாணவர்களும், தொழிலாளர்களும் வேலைநிறுத்தப் போராட்டங்களில் குதித்தனர்.

இராணுவத்தை விட்டு ஓடிவரும் வெள்ளை இன சிப்பாய்களின் எண்ணிக்கை பெருகத் தொடங்கியது. இறந்த போர்வீரர்களின் உடல்கள் பாலிதீன் பைகளில் சுற்றப்பட்டு தினமும் வந்திறங்குவதைக் கண்ட தென்னாப்பிரிக்க மக்கள் ஆத்திரமடைந்து ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். எல்லாவற்றுக்கும் மேலாக நாளொன்றுக்கு 5 கோடி ரூபாய்களைக் கொட்டி ஆக்கிரமிப்புப் போரை நடத்தி உதைப்பட்ட தென்னாப்பிரிக்க நிறவெறி அரசு, பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திணறியது. இதோடு, உலகம் முழுதும் எதிர்ப்புகள் வலுத்து தென்னாப்பிரிக்க காட்டுமிராண்டி அரசைத் தனிமைப் படுத்தியது.

இனியும் தொடர்ந்து தாக்குப்பிடிக்க முடியாத நிலையில், அங்கோலாவில் இருந்து கியூபா படைகள் வெளியேறினால் நமீபாவை விட்டு தானும் வெளியேறுவதாக தென்னாப்பிரிக்கா அறிவித்தது. அதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஆகஸ்ட் 22ம் தேதியன்று லண்டனில் தென்னாப்பிரிக்கா கியூபா, அங்கோலா, அமெரிக்கா ஆகிய 4 நாடுகளுக்கிடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி அங்கோலாவிலிருந்து கியூபா படைகள் வெளியேறுவது, நமீபியாவிலிருந்து தென்னாப்பிரிக்க படைகள் வெளியேறி சுதந்திரத்தை வழங்குவது, ஐ.நா. மேற்பார்வையில் இதனை நிறைவேற்றுவது என முடிவானது.

### போலிச் சுதந்திரமும் ஏகாதிபத்திய சதிகளும்

உலகெங்கும் கண்டனக் குரல்கள் எழுந்து தென்னாப்பிரிக்கா மீது பொருளாதார வர்த்தகத் தடைகள் விதிக்கப் பட்டதால் தமது சுரண்டலைத் தொடர முடியாமற் போனதாலும், கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களைத் தொடர்ந்து தாமும் ஜனநாயக நாடகமாட வேண்டியிருப்பதாலும் ஏகாதிபத்தியங்கள் தாமே முன்வந்து நமீபியாவுக்கு சுதந்திரத்தை வழங்கியுள்ளன. இதன்படி நமீ

படிப்பகம்

www.padippakam.com

பியா, தென்னாப்பிரிக்காவின் கட்டுப்பாடு இல்லாத தனி நாடாக அமையும். அதேசயம் தென்னாப்பிரிக்காவுடனான அதன் பொருளாதார சார்பு தொடரும். நமீபியாவிலுள்ள பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் மற்றும் சிறுபான்மை வெள்ளையர்களின் சொத்துக்களும் நிறுவனங்களும் பறிமுதல் செய்யப்பட மாட்டாது. புதிதாக அன்னிய முதலீடும், சந்தைப் பொருளாதாரமும் மேற்கொள்ளப்படும். இன்னும் சொல்லபோனால் நமீபியாவின் பட்ஜெட் பற்றாக்குறையை ஈடுகட்ட தென்னாப்பிரிக்கா மானியம் வழங்கும்.

சுருக்கமாகச் சொன்னால், தென்னாப்பிரிக்கா மூலம் நமீபியாவை அடிமைப்படுத்தி சுரண்டுவதற்குப் பதில், நமீபியாவுக்கு 'சுதந்திரம்' கொடுத்து தனிநாடாக்கி, தடையின்றிக் கொள்ளையிட ஏகாதிபத்தியங்கள் செய்துள்ள நூதன மோசடிதான் இது. சுதந்திரம் என்ற மூடுதிரையின் பின்னே தமது நவீன காலனியாதிக்கத்தைத் தொடரும் ஏற்பாடுதான் இது. எனவேதான் நமீபியாவின் 'சுதந்திரம்' அறிவிக்கப்பட்டதும் ஏகாதிபத்தியங்களும் அதன் எடுபிடி நாடுகளும் ஓடோடி வந்து வாழ்த்து தெரிவித்து, ''பொருளாதார ஒத்துழைப்பு'', ''வர்த்தக உறவு'' என்ற பெயரில் தமது புதிய சுரண்டலைத் தொடர போட்டி போடுகின்றன. இப்பெயரளவிலான சுதந்திரம் நமீபியாவுக்கு அரசியல் - பொருளாதார விடுதலையை வழங்காத அதேசமயம், நிறவெறி ஆதிக்கத்திலிருந்து முற்றாக விடுதலை அளித்துள்ளது.

ஆனால் இந்தப் பெயரளவிலான சுதந்திரத்தை வழங்கக்கூட ஏகாதிபத்தியங்கள் சாதாரணமாக முன்வந்து விடவில்லை. சுதந்திரம் வழங்குவதென உடன்பாடு ஏற்பட்ட பிறகு, அங்கோலாவைத் தளமாகக் கொண்டு தேசிய விடுதலைப் போரை நடத்திவந்த ஸ்வாபோ படைகள் நமது தாய்நாட்டுக்குத் திரும்பியபோது, தென்னாப்பிரிக்காவும் ஏகாதிபத்தியங்களும் அதை எதிர்த்தன. அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் முடியும்வரை ஸ்வாபோ படைகள் நமீபியாவுக்குள் நுழையக் கூடாது; அரசியல் தலைவர்கள் மட்டுமே வரலாம் என புதிதாக முட்டுக்கட்டை போட்டன.

அங்கோலாவுடன் போர் நிறுத்தம் ஏற்பட்டாலும், நமீபியாவிலிருந்து தென்னாப்பிரிக்கப் படைகள் வெளியேற மறுத்து ஸ்வாபோ போராளிகளுக்கு எதிரான தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டன. இத்தாக்குதலில் ஆயிரக்கணக்கான ஸ்வாபோ போராளிகள் கொல்லப்பட்டு இவ்வமைப்பு மிகவும் பலவீனமடைந்தது. தென்னாப்பிரிக்காவின் இப்புதிய சதிகளும் தாக்குதலும் உலகெங்கும் அம்பலப்படத் தொடங்கியதும் ஐ.நா. பாதுகாப்புப் படையின் மேற்பார்வையில் சுதந்திரத்தை வழங்கும் பணிகளை படிப்படியாக நிறைவேற்றுவதென முடிவாகியது.

ஆனால் ஐ.நா. பாதுகாப்புப் படையையே தென்னாப்பிரிக்க காட்டுமிராண்டிகள் தாக்கினர். ஐ.நா. படை என்ற பெயரில் ஏகாதிபத்திய உளவாளிகள் ஊடுருவி ரகசியமாக ஸ்வாபோவின்ந செயல்வீரர்களையும் போராளிகளையும் கொன்றொழித்தனர். எப்படியாவது அரசியல் நிர்ணய



நமீபியாவின் புதிய அதிபர் நிஜோமா.

சபைக்கான தேர்தலில் ஸ்வாபோ வெற்றி பெற முடியாமல் தடுப்பது, எடுபிடிகளான தரகுமுதலாளிகளின் தலைமையிலான கூட்டணிக் கட்சியைப் பலப்படுத்துவது என்ற நோக்குடன் ஏகாதிபத்தியவாதிகள் நமீபிய பழங்குடி மக்களிடையே இனவெறியைத் தூண்டி மோதவிட்டனர். புதிதாக எழுந்த இந்த உள்நாட்டுக் குழப்பத்தாலும் ஏகாதிபத்தியங்களின் சதியாலும் நமீபியாவுக்குப் பெயரளவிலான சுதந்திரம்கூட கிடைக்குமா என்பது கேள்விக்குறியானது.

நமீபியா ஸ்வாபோவின் கையில் சென்றுவிடாமல் தடுப்பது. தமது எடுபிடிகள் தனியே ஆட்சி அமைக்க முடியாததால் ஸ்வாபோவின் ஆற்றலைக் குறைத்து அதனுடன் கூட்டணி ஆட்சியை நிறுவுவது; அதுவரை பெயரளவிலான சுதந்திரம் வழங்குவதை தள்ளிப்போடுவது என்ற திட்டத்துடன் ஏகாதிபத்தியங்கள் முனைப்பாகச் செயல்பட்டன. முதற்கட்டமாக ஸ்வாபோவின் ஆயுத பலத்தை அழித்தொழிப்பதில் அவை கணிசமான வெற்றியைப் பெற்றன. அடுத்தகட்டமாக தமது எடுபிடி கட்சிகளைப் பலப்படுத்துவதில் முன்னேறின. அதன்பிறகே கடந்த நவம்பரில் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடைபெற்றது.

**சந்தர்ப்பவாத சகதியில் ஸ்வாபோ**

தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட ஸ்வாபோ படை வீரர்கள் தமது சொந்த நாட்டுக்குள் நுழைய முடியாத நிலையில் நடைபெற்ற இத்தேர்தலில் ஸ்வாபோ தலைமை பங்கேற்று, சமரசவாதப் பாதையில் விழுந்தது. மார்க்சிய சிந்தனையை ஏற்று உறுதியுடன் தேச விடுதலைப் போராட்டத்தில் முன்னேறிவந்த ஸ்வாபோவின் குட்டி முதலாளித்துவ தலைமை கடைசியில் சீர்திருத்தவாதப் பாதையில் சறுக்கி விழுந்துவிட்டது. காலனியாதிக்கவாதிகளின் சொத்துக்களையும் நிறுவனங்களையும் நட்டஈடின்றி கைப்பற்றி, அவர்களை ஆயுதப் போராட்டத்தின் மூலம் தூக்கியெறிந்துவிட்டு, சுதந்திரமான அரசை நிறுவி தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியமைப்பதற்குப் பதில், ஏகாதிபத்தியங்கள் வழங்கிய பெயரளவிலான சுதந்திரத்தை ஏற்று சந்தர்ப்பவாத

## பதவிபோயும் பந்தாவுக்குக் குறைவில்லை

*''பல்லுப்போனாலும் சொல்லுப் போகவில்லை'' என்று சொல்வார்கள். அது போல பதவிபோனாலும் பந்தா குறையாமல் பார்த்துக் கொள்ளுகிறார், பாசிச ராஜீவ்.*

*வெளிநாடுகளில் இருந்து வரும் அரசுத் தலைவர்கள் இன்னமும் தன்னைப் பார்த்து மரியாதை செய்வதாகக் காட்டிக் கொள்வதற்காக திட்டமிட்டு தமது அரசியல் தரகர் மூலம் ஏற்பாடு செய்கிறார். உள்நாட்டில் உதைபட்டாலும் வெளிநாடுகளில் தனது மரியாதை குறையவில்லை எனக் காட்டுவதற்காக இன்னும் ஒரு குட்டிநாடகம் நடத்தி இருக்கிறார்.*

*நமீபியா சுதந்திர விழாவுக்குப் போகும் இந்தியாவின் 85 உறுப்பினர் சர்வ கட்சிக் குழுவில் வரும்படி வி.பி.சிங்கே நேரடியாக ராஜீவை அழைத்தார். அதை ராஜீவ் தட்டிக் கழித்துவிட்டார். அதற்குப் பதிலாக தனிக்குழுவாகப் போவதென்று முடிவுசெய்தார். முதல் நாளே ஜாம்பியாவுக்குப் போய் அங்கிருந்து அதிபர் கென்னத் கௌண்டாவின் தனிவிமானத்தில் ஏறலாம்; எப்படியும் வழியில் நெல்சன் மண்டேலா ஏறுவார்; வி.பி.சிங்கை முந்திக்கொண்டு முதலில் மாண்டேலாவைச் சந்தித்த பெருமையைத் தட்டிக்கொண்டு விடலாம்; அதோடு கௌண்டா, மண்டேலா ஆகியோரின் தோளோடு தோள் உரச பெருமிதத்தோடு நமீபியா போய் இறங்கினால் பன்னாட்டுத்தலைவர்களிடம் பந்தா காட்டலாம் - என்று திட்டமிட்டு ஏற்பாடு செய்தார். இதற்காக முன்கூட்டி மூவர் குழு ஒன்றை கௌண்டா, மண்டேலா ஆகியோரைச் சந்திக்க அனுப்பியும் வைத்தார்.*

*நமீபியா விழாவின் போது பன்னாட்டுத்தலைவர்களின் அதிகாரபூர்வ அறிமுகம் முடிந்தபிறகு தானே வலியப்போய் பல தலைவர்களுடன் கைகுலுக்கி ஆரவாரம் செய்தார், ராஜீவ். மதியம் நடந்த நமீபய மந்திரிகள் கூட்டத்திற்கு வி.பி.சிங் போகாததைப் பயன்படுத்திக் கொண்டு ராஜீவ் போனார். அறிமுகத்தின் போது ''இந்தியாவின் மூன்னாள் பிரதமர்'' என்று சொன்னதை. ''இந்தியாவின் நிர்வாகப் பிரதமர்'' என்றுபுரிந்துகொண்டு கூடியிருந்தவர்கள் கரகோஷம் செய்துவிட்டனர். பிறகு கேட்டுத் தெரிந்துகொண்டனர். ஆனால் கைதட்டலைக் கேட்டு ராஜீவ் பூரித்துப் போய்விட்டார். நமீபியா விடுதலை விழாவில் வி.பி. சிங் பின்னுக்குத் தள்ளப்பட்டார். ''நிகழ்ச்சியின் கவனத்தை ராஜீவ் வென்றுவிட்டார்'' என்று காங்கிரசு அடிவருடி ஏடுகள் எழுதி மகிழ்ந்தன*



படிப்பகம்

www.padippakam.com

சகதியில் மூழ்கிவிட்டது.

நமீபிய மக்கள் அனைவரது நம்பிக்கையைப் பெறுவதில்கூட ஸ்வாபோ வெற்றி பெறவில்லை. கடந்த நவம்பரில் நடந்த அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலில் ஸ்வாபோ 57% வாக்குகளைத்தான் பெற்றுள்ளது. ''ஒவம்போ'' என்ற பழங்குடி இனத்தின் கட்சியாக அது சுருங்கிப்போனதே இதற்குக் காரணம். இதர பழங்குடி இனங்களை ஐக்கியப்படுத்தத் தவறி, அவற்றுடன் முரண்பட்டு போரிட்டதால், அவர்கள் எதிரிகளின் பக்கம் சாய்ந்து காலனியவாதிகளது எடுபிடிக் கட்சிகளின் கூட்டணி 47% வாக்குகளைப் பெற்றுள்ளது. எனவே ஆட்சியதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும், எதிர்ப்புகளை சமாளிக்கவும் எதிர்க்கட்சிகளுக்கு சலுகைகள் கொடுத்து சாந்தப்படுத்தியுள்ளது. ஸ்வாபோ தலைமை. அட்டர்னி ஜெனரல், ஆடிட்டர் ஜெனரல், நிதிமந்திரி பதவி உள்ளிட்ட 5 காபினெட் பதவிகளை தரகுமுதலாளிகளின் கட்சியான ஜனநாய டர்ன்ஹெல்லே கூட்டணிக்கு விட்டுக் கொடுத்துள்ளது. இதுதவிர ஹெராரே, டமாரா, நாமா முதலான பழங்குடி இனத்தலைவருக்கு அரசுயர் பதவிகளைக் கொடுத்து எதிர்ப்புகளை மட்டுப்படுத்தியுள்ளது. இந்த பேரங்கள் — சலுகைகளுக்குப் பின்னரே ஸ்வாபோ தலைவர் நிஜோமா நாட்டின் அதிபராக பதவியேற்க முடிந்தது.

சுருக்கமாகச் சொன்னால் நமீபியாவில் ஏகாதிபத்திய எடுபிடிகளான தரகு முதலாளிகளுக்கும் தேசவிடுதலைப் போராளிகளுக்கும் இடையே சமரசம் ஏற்பட்டு ஒரு கூட்டாட்சியே நிறுவப்பட்டுள்ளது. 150 ஆண்டுகாலம் அளப்பரிய தியாகம் செய்த நமீபிய தேசி விடுதலைப் போராட்டம் கடைசியில் பெயரளவிலான சுதந்திரத்தையும் பதவியையும் பெறுவதாக சுருங்கிப் போய்விட்டது. மீண்டும் புதிய வடிவில் காலனியாதிக்கம் தொடர்கிறது. எனவே நிறவெறி ஆதிக்கத்திலிருந்து கிடைத்த இடைக்கால வெற்றியைச் சாதகமாக்கிக் கொண்டு, ஸ்வாபோவின் சந்தர்ப்பவாதத் தலைமையை மறுதளித்து, தேச விடுதலைப் போரை நமீபிய மக்கள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இல்லையேல் நமீபியாவில் சுதந்திரம், கானல் நீராகத்தான் நிலவும்.

● மனோகரன்

# போலி கம்யூனிஸ்டு முதல்வர் நாயனாரின் வாய்க்கொழுப்பு

அதிகார போதை தலைக்கேறி கேரள போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஈ.கே.நாயனார், வாய்க் கொழுப்பை வழிய விடுவதில் பாசிச ராஜீவையும் மிஞ்சி விடுவார் போலிருக்கிறது. 71 வயதாகியும் பொறுக்கித்தனமாக பேசுவதை விடவில்லை.

திருவனந்தபுரம் - கோவளம் கடற்கரையில் புத்தாண்டு தினத்தன்று ஒரு ஐரோப்பிய சுற்றுலாப் பயணி கற்பழிக்கப் பட்டார். இது பற்றி நாயனாரிடம் பத்திரிக்கையாளர்கள் கேட்டனர். அவர், ''கற்பழிப்பா, அதில் என்ன இருக்கிறது அமெரிக்காவில் கற்பழிப்பு என்பது டீ குடிப்பது போல் சர்வசாதாரணமாக உள்ளது.'' என்று அலட்சியமாகவும், கேலியாகவும், வக்கிரமாகவும், பிதற்றியிருக்கிறார். அங்கிருந்த நிருபர்கள், குறிப்பாக பெண்கள் அதற்குக் கண்டனம் தெரிவித்தனர்.

பிறகு பத்திரிக்கைகளில் இந்தச் செய்தி வந்தது. கேரள சமூக சேவகி சுகுதாகுமாரியின் தலைமையில் பல பெண்கள் அமைப்புகள் திரண்டு நாயனாருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். பத்திரிக்கையாளர்கள்தான் தனது பேட்டியை தவறாக எழுதி விட்டார்கள் எனறு பாய்ந்தார் நாயனார். ஆனால் தனது வாய்க் கொழுப்புக்கு லெனினையும், மார்க்ஸ் - எங்கெல்ஸையும் சாட்சிக்கு இழுத்து மேலும் அம்பலப்பட்டுப் போனார்.

''கற்பழிப்பு பற்றி நான் சொன்னதைப் பத்திரிக்கையாளர்கள்தான் தவறாக எழுதி பெரும் கூச்சல் போடுகிறார்கள். கற்பழிப்பது முதலாளித்துவ சமுதாயத்தில் தண்ணீர் போன்றது என்று லெனின்தான் சொன்னார். முதலாளியின் மனைவியை இன்னொரு முதலாளி கற்பழிப்பான் என்று கம்யூனிஸ்டு அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு உள்ளது. அதுதான் அவர்களது ஒழுக்கம். லெனின் சொல்ல முடியுமானால், நான் ஏன் திரும்பச் சொல்ல முடியாது? அமெரிக்காவில்தான் மிக மிக அதிக அளவு 13, 19 வயது சிறுமிகள் கர்ப்பமாகும் சம்பவங்கள் நடக்கின்றன. இப்படித்தான் திருவனந்தபுரம் பெண்கள் கூட்டத்தில் சொன்னேன். இதைப் பத்திரிக்கையாளர்கள் எழுதவில்லை'' என்று தனது வாய்க் கொழுப்பிற்கு விளக்கம் கூறினார், நாயனார்.

இதற்கு என்ன பொருள்? ''ஐரோப்பிய சுற்றுலாப் பயணிக்கு பாதுகாப்பில்லை; கற்பழிப்புகள் அதிகமாகின்றன'' என்று புகார் கூறினால் முதல்வருடைய பொறுப்பு என்ன? ''முதலாளித்துவ சமுதாயத்தில் கற்பழிப்பது தண்ணீர் குடிப்பது போன்று சர்வ சாதாரணமானது என்று லெனினே, மார்க்ஸ் - எங்கெல்சே கூறியுள்ளனர். அப்படி எடுத்துக் கொள்ளுங்கள்'' என்பது தானே நாயனாரின் பதில்.

கற்பழிப்பு பற்றி நாயனாரின் வக்கிரத்தை அம்பலப்படுத்தியதற்காக ''பத்திரிகையாளர்கள் எல்லாம் முட்டாள்கள்; எதையுமே படிக்கக் கூட மாட்டார்கள்'' என்று ஏசினார். இந்த விவகாரத்தை பிரபலப்படுத்தி நாயனாருக்கு எதிராக போராடும் பெண் நிருபர் பற்றி, ''அந்த லீலா மேனனைப்பற்றி எனக்குத் தெரியாதா, பத்திரிக்கைத் தொழிலுக்கு அவள் எப்படி வந்தாள்? அதற்கு முன் அவள் என்ன செய்தாள்?




என்று எனக்குத் தெரியும்'' என்று குதித்தார், நாயனார்.

பிரச்சனையில் முன்னிற்கும் சுகுதாகுமாரி பற்றி, ''எனக்கு எல்லாக் கதையும் தெரியும். ஒழித்துக் கட்ட விரும்பினால் எல்லா விஷயங்களையும் அம்பலப்படுத்தி விடுவேன். அவளுக்கு மத்திய அரசுடன் பேரங்கள் - உறவுகள் இல்லையா? அதை யேன் பத்திரிக்கையாளர்கள் ஆய்வு செய்வதில்லை. அவள் சுயநலமற்ற கவிதைகள் எழுதுகிறவளா? அவள் சுய நலனுக்காகத்தான் கவிதைகள் எழுதுகிறாள். அவள் பணம் சேர்ப்பதில்தான் அதிக கவனமாய் இருக்கிறாள்'' என்று சண்ட மாருதம் பொழிந்தார்.

சுகுதாகுமாரி, ஒரு முதலாளித்துவ சமூக சேவகி, கவிஞர் தான். ஆனால் தங்கமணி கிராமத்தில் நடந்த போலீசு கும்பல் கற்பழிப்புகளுக்கு எதிராகவும், ஆபாச சினிமாக்களுக்கு எதிராகவும் போராடினவர். போலிக் கம்யூனிஸ்டு அரசே தங்கமணி கிராம கற்பழிப்பு பற்றிய ஸ்ரீதேவி விசாரணைக் கமிஷன் அறிக்கையை கிடப்பில் போட்டது. போலிக் கம்யூனிஸ்டு ஆட்சியில் ஆபாச மலையாளப்படங்கள் புற்றீசல்களாகப் பெருகி, மற்ற மாநிலங்களுக்கும் பரவுகின்றன. நாயனார் போன்ற வக்கிரப் பேர்வழிகள் வேறு என்ன செய்வார்கள்? லலிதா மேனனோ, சுகுதாகுமாரியோ தவறுகள் செய்திருந்தால் அந்த விவகாரங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதில் ''என்னைக் குறை கூறும் நீங்கள் மட்டும் யோக்கியமா?'' என்று கருணாநிதி பாணியில் மிரட்டுகிறார்.

பல சமயம் தனது வாய்க் கொழுப்பு, வக்கிரத்தை நகைச் சுவையென்று மழுப்பி விடுவது நாயனாரின் வழக்கமாகிவிட்டது. முன்னாள் மந்திரி பூட்டாசிங்கைத் ''தாடிக்காரன்'' என்றும், முன்னாள் பெண் மந்திரி மார்க்கரெட் ஆல்வாஷ்வ ''அல்வாத் துண்டு'' என்றும் குறிப்பிடுவார். வயதான கிழவியான முன்னாள் கேரள கவர்னர் ராம்துலாரி சின்ஹா கையில்லாத ரவிக்கை போடுவதை தனது சகபாடிகளோடு சேர்ந்து கொச்சையாக கேலி செய்வார். இவர்களின் சர்வதேசத் தலைவர் கோர்பி, கிளாஸ்நாஸ்ட் என்ற பெயரில் ஆபாச - வக்கிரக் கலாச்சாரத்தை இறக்குமதி செய்கிறார். அவரது இந்திய சகபாடிகள் தாங்களும் பின்தங்கி விடவில்லை என்று இதிலும் செய்து காட்டுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# இந்துமத வெறியர்களின் வரிஏய்ப்பு தேசிய முன்னணி அரசு உடந்தை

ராம ஜென்ம பூமியின் பெயரால் கோடி ரூபாய் நன்கொடை வசூலித்து ஏப்பம் விட்டு விட்டது பார்ப்பணீய இந்த மத வெறி அமைப்பான 'விஸ்வ இந்து பரிக்ஷத்'. இந்த ரகசியத்தை எழுதிய வீரமணியின் உண்மை ஏடு இன்னும் ஒரு இரகசியத்தை எழுதுமா? விஸ்வ இந்து பரிக்ஷத்தின் வரவு - செலவு கணக்குகளைத் தோண்டித் துருவி. அதன் 'அறங்காவலர்கள்' - நிர்வாகிகளுக்கு சம்மன் அனுப்பி. வரி விலக்கு மறுத்தார் நிதி அமைச்சகத்தின் வருமானவரிப் பிரிவு துணை இயக்குநர். விசுவ பந்து குப்தா. அதற்காக அவர் மீது இலாகா பூர்வ விசாரணை, நடவடிக்கை எடுத்து தண்டனையாக தமிழ்நாட்டுக்கு விரட்டப்பட்டுள்ளார். ஜனதா தள - தேசிய முன்னணி அரசினால்: இந்த உண்மையை வீரமணியின் உண்மை ஏடு எழுதாது - ஏனெனில் வீரமணியின் கண்ணோட்டப்படி இது சூத்திர அரசாகிவிட்டது!

"1988 - 89 ஆம் ஆண்டுக்கான விஸ்வ இந்து பரிக்ஷத்தின் வருமானம் 22,64,495 ரூபாய்தான். செலவோ 34,67,111 ரூபாய். 12,02,616 ரூபாய் கடனாகிவிட்டது. மேலும் பரிக்ஷத் ஒரு தரும நிறுவனமாதலால் வரிகட்டத் தேவை இல்லை" என்று அதன் பொதுச் செயலாளர் அசோக் சிங்கால் அரசுக்குத் தனது தணிக்கை அறிக்கையை அனுப்பினார். பல கோடி ரூபாய் நன்கொடை வசூலித்து ஏப்பம் விட்டுவிட்டார்கள் என்பதுதான் உண்மை. ஆனால் சமர்ப்பித்த அறிக்கைப்படியே பரிக்ஷத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று விசுவபந்து குப்தா முடிவு செய்தார்.




முதலாவதாக, மதச்சார்பற்றதாக கூறும் நாட்டிலே குறிப்பிட்ட மதத்துக்காகப் பிரச்சாரம் செய்யும் அமைப்பைத் தரும நிறுவனமாகக் கருத முடியாது என்பது சட்டத் துறையின் கருத்து. இரண்டாவது வருமானத்துக்கு மேலே அதாவது 12 லட்சம் ரூபாய் கூடுதலாக செலவு செய்யும் அமைப்பை சட்டப்படி தரும நிறுவனமாகக் கருத முடியாது. எனவே விஸ்வ இந்து பரிக்ஷத்துக்கு வரி விலக்கு உரிமையை மறுப்பதோடு மேலும் பல விளக்கங்கள் கேட்டு சம்மன் அனுப்பினார் துணை இயக்குநர் வி.ப.குப்தா.

'விஸ்வ இந்து பரிக்ஷத்' வரி விலக்குக் கோருவதற்கான வகையில் செய்துவரும் தரும நடவடிக்கைகள், அதன் வங்கிக் கணக்குகள்; அதன் வரவு - செலவு சம்பந்தப்பட்ட ஆவணங்கள்; அது வாங்கியிருக்கும் சொத்து விவரங்கள்; அதன் நிர்வாகிகள் மேற்கொண்ட உள்நாட்டு - வெளிநாட்டுப் பயணங்கள் - இவை அனைத்தையும் சமர்பிக்கும்படி அதிகாரி குப்தா சம்மனில் கோரியிருந்தார். பதில் தருவதற்குப்பதில் தவறான நோட்டீசு கொடுத்ததாக புகார் கூறி அந்த அதிகாரி மீதே நடவடிக்கை எடுக்கும்படி செய்துவிட்டது பரிக்ஷத். தவறான நோட்டீசு கொடுத்தால் அதை விலக்கிக் கொள்வதுதான் முறையே தவிர அதிகாரி மீது நடவடிக்கை எடுத்ததில்லை. அதோடு வருமானவரி அலுவலகத்திலுள்ள கோப்புகளில் இருந்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எல்லாம் மாயமாக மறைந்துப் போய்விட்டன.

பார்ப்பணீய இந்து மத வெறியர்களின் நிதி மோசடியை மட்டுமல்ல; அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளைப் பழிவாங்குவதிலும் இந்த 'சூத்திர' அரசிலும் எவ்வளவு செல்வாக்குள்ளதாக அது இருக்கிறது என்பதை இந்தச் சம்பவம் நிரூபிக்கிறது.

# திண்டுக்கல் இந்து முஸ்லீம் கலவரம் ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணி கைவரிசை

இந்து மதவெறிக் கும்பல் புது வேகத்துடன் கிளம்பியுள்ளது. அதன் ஒரு பகுதியாக திண்டுக்கல்லில் திட்டமிட்டு இந்து - முஸ்லீம் மதக் கலவரத்தைக் கடந்த மாதம் தூண்டியிருக்கிறது.

மதமாற்றத்தைத் தடுக்கும் சட்டம் வேண்டும்; எல்லா மதத்தினருக்கம் குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டும்; பொதுக் குடும்ப - திருமணச் சட்டம் வேண்டும், கோயில் நிர்வாகங்களில் அரசு தலையிடக் கூடாது - இப்படிப்பட்ட தனது வழக்கமான கோரிக்கைகளுடன் திண்டுக்கல் காயிதே மில்லத் என்ற பெயரை மாற்ற வேண்டும் என்ற குறிப்பான கோரிக்கை வைத்து ஊர்வலம் நடத்தவும், இந்து - முஸ்லிம் மதக் கலவரமாக அதை மாற்றவும் திட்டமிட்டு செயல்பட்டது இந்து முன்னணி - ஆர்.எஸ்.எஸ்ஸின் துணை அமைப்பு

இதற்காக மாநிலம் முழுவதுமிருந்து 1500 இந்து முன்னணி - ஆர்.எஸ்.எஸ். குண்டர்களை வேன்களில் திண்டுக்கல் அழைத்து வந்தது. முஸ்லீம்கள் வாழும் பகுதிகளில் ஊர்வலமோ, வெளியூர்களில் இருந்து வரும் வேன்களோ போகக் கூடாது என்று போலீசு தடையும் காவலும் போட்டிருந்தது. காவலை மீறி குறுக்கு வழியில் பேகம்பூருக்குள் நுழைந்து மசூதிமுன்பு வேனை நிறுத்தி முஸ்லீம் எதிர்ப்புக் கோஷங்களை இந்து முன்னணி குண்டர்கள் போட்டனர். அதனால் அங்கு வாய்த் தகராறு முற்றியது. ஆனால் இந்துக்களின் வேன் மசூதியில் திரண்டு ஆயுதங்களுடன் வந்த முஸ்லீம்களளால் தாக்கப் பட்டது என்றும், மசூதிக்குள் புகுந்து இந்துக்கள் தாக்கி விட்டனர் என்றும் வதந்திகள் பரவின. உடனே கலவரம் துவங்கி ஒரு முஸ்லீம் இளைஞரும், ஒரு இந்து இளைஞரும் குத்திக் கொலை செய்யப்பட்டனர். மேலும் 40 பேர் படுகாயமடைந்தனர். கடைகள் நொறுக்கப்பட்டன.

இத்தனைக்கும் பிறகு ஊர்வலம் போவதாக அடம் பிடித்து 150 இந்து முன்னணியினர் கைதாகியுள்ளனர். முஸ்லீம்கள் ஆயுதங்களுடன் திட்டமிட்டுத் திரண்டுவந்து தாக்கியதாகவும், போலீசு இந்துக்களுக்குப் பாதுகாப்பு தரத் தவறியதாகவும், நீதி விசாரணை வேண்டும், போராட்டம் தொடரும் என்று ஆர்.எஸ்.எஸ். தலைமை கூப்பாடு போட்டிருக்கிறது. பொதுமக்கள் - சர்வகட்சி அமைதிக் கமிட்டி என்று வழக்கமான சடங்குகள் நடந்துள்ளன.

சாதி, மத வெறியைத் தூண்டி நெல்லை, குமரி மாவட்டங்களில் வேரூன்றிய ஆர்.எஸ்.எஸ் - இந்து முன்னணி கும்பல் மேலும் பரவுவற்கு காயிதே மில்லத் பெயர் மாற்றக் கோரிக்கையை எடுத்துக் கொண்டுள்ளது. ஆர்.எஸ்.எஸ். - இந்து மத வெறிக்கு வித்தூன்றுகிறது என்றால் அதற்காக உழுது வளமான பூமியைத் தயாரித்துக் கொடுக்கிறது - திராவிட இயக்கம். ஓட்டுப் பொறுக்குவதற்காக சாதி, மத அரசியல் தலைவர்களின் பெயர்களை மாவட்டங்களுக்கும், பொது இடங்களுக்கும் வைக்கும் வழக்கத்தைப் புகுத்தியது. இதனால் பல்வேறு சாதி, மத, அரசியல் பிரிவினர் தமக்கு வேண்டிய பெயரை வைக்கும்படியும் வேண்டாத பெயரை நீக்கும்படியும் கோருகின்றனர். இதையே இந்து மத வெறியை தூண்டும் ஆயுதமாக்கிக் கொண்டிருக்கிறது ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணிக் கும்பல். ஜனநாயக சக்திகள் அனைத்தும் ஒன்று திரண்டு அதன் சதியை முறியடிக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com




● என்ன சாதி என்றே தெரியாத பருவத்தில் பள்ளிக்குச் சென்றால் முதலில் சாதியைத்தான் கேட்கிறார்கள். சாதியைத் தூண்டுவது ஒரு வேடிக்கையாகிவிட்டது. மதம் பரப்புபவர்கள், புதுக்கட்சி ஆரம்பிப்பவர்கள், சாதிச் சங்கங்கள் அமைப்பவர் வரை இந்த ஆதிதிராவிடர்களை ஏன் முதன்மைப்படுத்துவது? இந்த நாட்டில் இவர்கள்தான் ஏழைகளா? ஏன் அனைத்து சாதியினருக்கும் சராசரியாக பொருளாதார அடிப்படையில் உதவலாமே? அதில் என்ன பிரச்சினை? ஏன் இந்த அரசாங்கம் முன் வருவதில்லை? இந்த சாதிப் பிரச்சினையில் என்ன அதிசயம் அடங்கியிருக்கிறது? ஒட்டுமொத்தமான உங்களின் கருத்தென்ன?

ஏ.எஸ்.இராஜாமணி, தருமபுரி

★ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் தாழ்த்தப்பட்ட - மலைவாழ். மக்களின் முன்னேற்றத்திற்கு முன்னுரிமை தரப்படுவதுதான் நியாயமானது, அவசியமானது. அவர்களுக்கு முன்னுரிமை தரப்படுவதால் தமக்குப் பாதிப்பு ஏற்படுவதாகவும், சமஉரிமை கோரியும் மற்ற சாதியினர் யாரானாலும் போராடுவது தவறானது, ஏற்கமுடியாது.

ஆனால் ஒழிக்கப்பட வேண்டிய இந்த சாதி அமைப்பை கட்டிக் காக்கும் தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்களைத் தூக்கி எறிந்து உழைக்கும் மக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றாமல் பொருளாதாரம், சமூகம், கல்வி - கலாச்சாரம் ஆகிய எந்தத் துறையிலும் உண்மையான முன்னேற்றம் காண முடியாது. அப்படிப்பட்ட புரட்சி எதுவும் நடந்துவிடக் கூடாது என்பதற்காகவும் அடக்கி ஒடுக்கப்படும் சாதியினரும் இந்த அரசியல் அமைப்பில் பங்கேற்பதாகவும், பொருளாதார - சமூக முன்னேற்றம் இதனால் அடைந்துவிட முடியும் என்று பிரமையை உருவாக்குவதற்காகவும் சில தனிநபர்களுக்குத் தரப்படும் சலுகை. சீர்திருத்தம்தான் இடஒதுக்கீடு. பிற்பட்டவர் இடஒதுக்கீட்டிற்காக வலிந்து நிற்கும் மண்டல் கமிஷனும் வீரமணியுமே இதை ஒப்புக் கொள்கின்றனர். உழைக்கும் மக்களுக்குத் தற்காலிக, குறைந்தபட்ச நனமை தருவதாக இருக்கும் சலுகைகள் - சீர்த்திருத்தங்களை நாம் எதிர்க்கவில்லை. அதே சமயம் அவையே ஒட்டுமொத்த சமூகத்தின் விடுதலை முன்னேற்றத்திற்கான தீர்வாக - வழியாக அமையும் என்கிற மோசடியை எதிர்த்து அம்பலப்படுத்துவோம்.

மற்ற பிற சாதியினர், குறிப்பாக பிற்பட்ட சாதியினரிடையே கூலி ஏழை விவசாயிகள் - தொழிலாளர்கள் முதல் நிலப்பிரபுக்கள் முதலாளிகள் வரை பல்வேறு பிரிவினரும் உள்ளனர். அவர்களில் நடுத்தரமேட்டுக்குடிப பிரிவினர் தம்முடைய சாதி உழைக்கும் மக்களை முன்னிறுத்தி, பலியிட்டு அரசு பதவிகளைப் பிடித்துக் கொள்வதற்காகப் போட்டி போடுகின்றனர். இடஒதுக்கீடு ஆதரவுக்கு தலைமை ஏற்கும் திராவிட இயக்கங்களும் சரி; இடஒதுக்கீட்டை எதிர்க்கும் பார்ப்பன - மேல்சாதி இயக்கங்களும் சரி - அவரவர் தரப்புக்குப் பலத்தைக் கூட்டிக் கொள்வதற்காகத்தான் தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர். ஒட்டுமொத்தமாக வேலையில்லா திண்டாட்டம் பெருகிவருவதற்கான காரணத்தையும், தீர்வையும் காணவிடாமல் இடஒதுக்கீடு இல்லாததனால் தான் வேலை கிடைப்பதில்லை என்றும் இளைஞர்களைத் திசைதிருப்பி மோதிவிட்டு ஆதாயம் தேடுகிறார்கள். ஒரு அழகிய பிணத்தைக் கூறு போட்டுக் கொள்வதற்காக மூர்க்கமான கழுதைப் புலிகளைப் போல சாதிச் சண்டைகளை வளர்க்கிறார்கள்.

● போபால் - மத்தியப் பிரதேச மாநில தலைநகரம். ஒரு தலைநகரத்தில் ஒரு விஷவாயு விபத்து நடக்கிறது என்றால் அதனால் பாதிக்கப்படுவது - பட்டது ஏழை எளிய மக்கள்தானா? போபால் ராணுவம், கோர்ட், போலீசு, சிறைச்சாலை முதலியவற்றில் பணிபுரியும் அதிகாரவர்க்கம் அரசியல்வாதிகள் - இந்த விஷவாயு விபத்திலிருந்து எப்படித் தங்களைத் தற்காத்துக் கொண்டனர்! - ஏன் அதனைக் குறிப்பிடவில்லை. விளக்கவும்.

★ உழைக்கும் மக்கள் குவிந்துகிடப்பதால் புறக்கணிக்கப்படும் வடசென்னை - பழைய டெல்லி; அதிகார வர்க்கத்தினர், முதலாளிகள் போன்ற வசதி படைத்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்வதால் அக்கறை செலுத்தப்படும் தென்சென்னை - புதுடெல்லி என்று இருபிரிவாக இருப்பதுபோல புதிய போபாலில் இருந்து 8 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது பழைய போபால். தொழிலாளர் குடியிருப்புகளும், குடிசைப்பகுதிகளும், சிறுவியாபாரிகள், பழைய நடுத்தரக் குடித்தனக்காரர்கள் வாழும் பகுதி பழைய போபால். அதிலும் குறிப்பாக விஷவாயு விபத்து நேர்ந்த யூனியன் கார்பைடு ஆலையைச் சுற்றியுள்ள ஜே.பி.நகர், சக்திநகர், காயிஞ்சி சோலா ஆகிய பகுதிகள் உதிரித் தொழிலாளர்களும், சிறுவியாபாரிகளும் அவர்களிலும் பெரும்பான்மையாக முஸ்லீம்களும் வாழுமிடங்கள்.

உழைக்கும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இம்மாதிரியான இடங்களில் அபாயகரமான, கேடு விளைவிக்கக்கூடிய ஆலைகள் நிறுவப்படுகின்றன; அதோடு அங்குதான் கேள்விமுறையின்றி சுற்றுச்சூழலை மாசுபடுத்தி உயிர் குடிக்கின்றனர். அதனால்தான் உடனடி சிகிச்சை தந்து உயிர்களைக் காப்பதற்கான வசதிகள், ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்படவில்லை; உடனடி விஷமுறிவுக்கான மருந்து மற்றும் பிற இரகசியத்தையும் கொலைகாரக் கம்பெனி தரவுமில்லை. பிறகும் தகுந்த சிகிச்சை அளிப்பதில் அரசு அக்கறை காட்டவில்லை; இதனால் தலைமுறை தலைமுறைக்குமான துயரம் - பிறவி நோய் தொடர்கிறது. விபத்துநேர்ந்த போது முன்பனிக்காலம், நள்ளிரவு ஆதலால் காற்றில் விஷவாயு பரவி போபால் நகரம் முழுவதையும் பாதிக்கவில்லை; அதனால் உயிர்ச்சேதம் பரவலாக, மற்ற பிரிவினரையும் பாதிப்பதாக இல்லை. பனியின் காரணமாக மேலே பரவாமல் அடர்த்தியாக, குறிப்பிட்ட பகுதியிலேயே சூழ்ந்து பலரின் உயிரைக் காவுகொண்டது; அவர்களில் 95%க்கு மேல் ஏழை எளிய மக்கள் என்பதால்தான் நட்டஈடு விவகாரத்திலும் அரசு துணிந்து தேச துரோக ஒப்பந்தம் போட்டுக் கொண்டது.

● கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் சீனா போன்ற நாடுகளில் பொதுவுடமைக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்து ஜனநாயகத்தை நிறுவக் காரணம் என்ன? இச்செயல்களினால் பொதுவுடமையின் வளர்ச்சி பாதிக்கப்படுமா?

ஏ.வீ.அண்ணாதுரை, ஆலத்தூர்.

● ருசியா, சீனா மற்றும் பிற கம்யூனிச நாடுகள் பற்றி தங்களின் பார்வை என்ன?

★ ருசியா மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கடந்த 35 ஆண்டுகளாகவும், சீனாவில் கடந்த 10 ஆண்டுகளாகவும் சோசலிசம் என்ற பெயரில் அதிகாரவர்க்க முதலாளிகளின் பாசிச அடக்குமுறையும், சுரண்டலும்தான் இருந்தது. அதிகார முறைகேடுகளும், லஞ்ச ஊழலும், கலாச்சார சீரழிவுகளும் அதிகரித்துவந்தன. ஜனநாயக, குடியுரிமைகள் மறுக்கப்பட்டு புரட்டல்வாத - போலி கம்யூனிஸ்டுகளின் ஒரு கட்சி பாசிச சர்வாதிகாரமே நிலவியது. இதை 'இராணுவ பாசறை பாணி சோசலிசம்' என்று கோர்பியே ஒப்புக் கொள்கிறார். இதன்கீழ் கட்சி மற்றும் அரசுத் தலைவர்கள் கோடிகோடியாக கொள்ளையிட்டு ஆடம்பர சுகபோகத்தில் மூழ்கித் திளைத்தார்கள். மக்களோ வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், பற்றாக்குறை, விலைவாசி ஏற்றத்தினால் தவித்தார்கள்.

உலகமேலாதிக்கப் பேராசை கொண்டு அமெரிக்காவுடன் போட்டி போட்டு பொருளாதாரத்தையே இராணுவ மயமாக்கியது ருசிய சமூக ஏகாதிபத்தியம். அதனுடன் இராணுவப் பொருளாதாரக் கூட்டமைத்துக் கொண்டிருந்தன பிற கி.ஐரோப்பிய நாடுகள். இதனால் கடுமையான பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டு பல ஆயிரம் கோடி டாலர்கள் அந்நியக் கடன் சுமை ஏறி நாடே திவாலாகும்

'அரிசனங்கள்' மீது கரிசனை ஏன்?

முன்னாள் சோசலிச நாடுகளில் மாற்றங்கள் ஏன்?

படிப்பகம்

www.padippakam.com

நிலை ஏற்பட்டது. "இதுதான் சோசலிசம் என்றால் எங்களுக்கு இது வேண்டாம்; நாங்கள் மேற்கத்திய பொருளாதார, ஜனநாயக அமைப்புக்கே போக விரும்புகிறோம்" என்ற அளவுக்கு மக்கள் தள்ளப்பட்டனர். அந்நாடுகளில் இருந்த போலிக் கம்யூனிஸ்டுகளே சோசலிச - கம்யூனிச எதிர்ப்பு, முதலாளித்துவ ஆதரவு பிரச்சாரம் செய்தனர். கிறித்துவச் சபைகள் மூலமாகவும், உளவாளிகள் மூலம் நேரடியாகவும் ஏகாதிபத்தியங்களின் ஆதரவு இயக்கங்கள் வளர்ந்தன.

இவற்றின் விளைவுதான் அங்கே நடக்கும் ஆட்சிக் கவிழ்ப்புகள். அந்நாடுகள் முதலாளித்துவப் பாதைக்குத் திரும்பியது கம்யூனிச இயக்கத்துக்குப் பின்னடைவுதான். ஆனால் இந்தப் பின்னடைவு 35 ஆண்டுகளுக்கு முன்பே நடந்ததுதான். இப்போது பகிரங்கமாகவும், அதிகாரபூர்வமாகவும் முதலாளித்துவம் பிரகடனம் செய்யப்படுகிறது. உலகம் முழுவதும் வீசும் பிற்போக்கு அலையின் காரணமாக முதலாளித்துவ, ஏகாதிபத்திய அமைப்பின் நெருக்கடிகள், முரண்பாடு - போட்டி - அழிவுத் தன்மைகள், ஜனநாயக - மக்கள் விரோத போக்குகள் மூடிமறைக்கப்படுகின்றன. ஆனால் அவை வெடித்துச் சிதறுவதும், கம்யூனிசம் இறுதி வெற்றி பெறுவதும் நிச்சயமானது.

● *மண்டேலாவின் குரல் விடுதலைக்குப்பிறகு மிதவாத திசை நோக்கி மாறுகிறது என்றும் மக்கள் ஜனநாயகத்துக்கான விடுதலையை நோக்கி அவரது முழக்கங்கள் இல்லையென்றும் (பு.ஜ. மார்ச் '90) கூறியுள்ளீர். இப்படி இருக்க ஒரு குறைந்தபட்ச திட்டம் என்கிறமுறையில் நிற - இனவெறிக்கு எதிராக நெல்சன் மண்டேலா தலைமையிலான விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டியது அனைத்து புரட்சிகர ஜனநாயக சக்திகளின் கடமையாகும் என முடித்திருக்கிறீர்.*

*அரசோடு சோரம் போகும் நிலையில் உள்ள மண்டேலாவுடன் எப்படி மற்ற அமைப்புகளை ஆதரவு தரவேண்டும் என்று கோருகிறீர்? மண்டேலாவின் சமரசப் போக்கினால் நாளை கறுப்பின மக்களுக்கு ஏற்படும் அழிவைத் தடுப்பது யார்?*

**க.கஜேந்திரன், சென்னை-51**

★ ஏகாதிபத்திய - நிலப்பிரபுத்துவ ஆதிக்க, நிற - இனவெறி அரசுக்கு எதிராக பாட்டாளிவர்க்கத் தலைமையிலான ஆயுதந்தாங்கிய மக்கள் ஜனநாயகப் புரட்சியே தென் ஆப்பிரிக்க மக்களின் விடுதலை - சுதந்திரத்துக்கான சரியான பாதையாகும். இதைத் திட்டமாக ஏற்றுக் கொண்ட அமைப்புகள் நிற - இனவெறி அரசின் கொடிய அடக்குமுறையின் காரணமாக பலவீனமாகவும் பிளவுபட்டும் உள்ளன. அவை ஐக்கியப்பட்டு தமக்கென விரிவான மக்கள் ஆதரவையும், அமைப்பையும், ஆயுத பலத்தையும் திரட்டுவதற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.

நெல்சன் மண்டேலா தலைமையிலான ஆப்பிரிக்கன் தேசிய காங்கிரசு நிற - இனவெறிக்கு எதிராகவும் ஜனநாயகத்துக்காகவும், போராடும் அதேசமயம் ஊசலாட்டம், சமரசம் ஆகிய இரட்டைத் தன்மை உடையதாக இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு அங்கே ஒரு தரகு அதிகார முதலாளித்துவ அடிவருடி அரசை நிறுவிக் கொள்ள ஏகாதிபத்தியங்கள் முயலுகின்றன. நெல்சன் மண்டேலாவின் ஊசலாட்ட, சமரசப் போக்கை அம்பலப்படுத்தத்தான் வேண்டுமே தவிர அவர் ஏற்கனவே சோரம் போய்விட்டார் என்பதாக முடிவு செய்து எதிர்ப்பது நிற - இனவெறிக்கு எதிரான போராட்டத்தைப் பிளவுபடுத்தி, பலவீனப்படுத்திவிடும். ஆகவே ஒரு குறைந்தபட்ச திட்ட அடிப்படையில் நிற இனவெறிக்கு எதிராகவும் ஜனநாயகத்துக்குமான போராட்டங்களில் ஊசலாட்டம், சமரசப் போக்குகளுக்கு எதிராகப் போராட்டம் என்கிற அணுகுமுறையைப் புரட்சிகர, ஜனநாயக சக்திகள் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் ஊசலாடும், இடைநிலை சக்திகளைப் புரட்சியின் பக்கம் வென்றெடுத்து கறுப்பின மக்களின் அழிவைத் தடுக்க முடியும்.

# மாற்றுக் குழுக்களின் மனப்போக்கு:ஒரு வகைமாதிரி!

"புதிய ஜனநாயகம்" - ஏட்டிற்கு பாராட்டுக் கடிதங்கள், நியாயமான - தகுதியான விமர்சனங்கள் மட்டுமே வரும் என்று நாங்கள் ஒருபோதும் கருதவில்லை. போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட ஓட்டுக் கட்சிக்காரர்களிடம் இருந்து வசவுகளும் மிரட்டல்களும் தாங்கிய கடிதங்கள் வருவதுண்டு. ஓடுகாலிகளால் ஏற்பாடுசெய்து எழுதப்படும் ஆள்மாறாட்டக் கடிதங்களையும் பெற்றோம். விளக்கங்கள், உதவிகள் கேட்டும், வெகுளித்தனமாகவும் கடிதங்கள் வந்தன. சிலசமயம் உண்மையாகவே சித்தபிரமை பிடித்தவர்களிடம் இருந்தும் கடிதங்கள் வந்தன. டி.வி.எஸ். முதலாளியின் ஆட்கள் முதல் ஜோதிப் பிரகாசம் வரை மானம் இழந்துவிட்டதாக நட்டஈடு கோரும் கடிதங்களும் வருவதுண்டு.

இப்போது, 'பு.ஜ.'-வின் கேள்வி - பதில் பகுதிக்கு ஒரு கடிதம் வந்துள்ளது. 'பு.ஜ.' வாசகர்கள் புரிந்துகொள்வதற்காக அதை வெளியிடுகிறோம். "அன்பார்ந்த ஆசிரியர் குழுவிற்கு, மேற்கூறிய கேள்விகளுக்கு விடை அளித்தால் மற்றபிற புரட்சிகரக் குழுக்களிடம் கையும் களவுமாக மாட்டிக் கொள்வோம் என்று எண்ணி இக்கேள்விகளுக்கு எல்லாம் தனியாகவும் கட்டுரை வாயிலாகவும் பதில் கொடுப்போம் என்று மழுப்பிவிடாமல் பு.ஜ.விலேயே நேரடியாக பதில் தருவீர்கள் என நம்புகிறேன். இக்கேள்விகளுக்கு தாங்கள் தரும்பதிலிலிருந்துதாங்கள் சந்தர்ப்பவாதிகளா? சுயநலவாதிகளா? என்பதை இதன் மூலம் வாசகர்கள் அறியமுடியும் எனவும் நம்புகிறேன். தோழமையுடன், ஏ.வீ. அண்ணாதுரை, ஆலத்தூர். (இதற்கு முன் பல கேள்விகளை பு.ஜ.விற்கு எழுதியும் பதில் இல்லை)"

இதற்கு முன்பு ஒரு கடிதம் மூலம் 2 கேள்விகளை அனுப்பியுள்ள இவர் 'பு.ஜா'விற்கு பல கேள்விகள் எழுதியதாகத் தவறாகக் குறிப்பிடுகிறார் என்பதுதான் உண்மை! இப்படி ஒரே கடிதத்தில் 2, 3மட்டுமல்ல சில சமயங்களில் 10, 15 கேள்விகளையும் வாசகர்கள் அனுப்புகின்றனர். கேள்வி - பதில் பகுதிக்கு என்று எழுதப்படும் கடிதங்களில் 2, 3 பக்க அளவுக்கு அவரவர் சார்ந்திருக்கும் குழுக்களின் நிலைப்பாடுகளைக் கட்டுரைகளாகவே எழுதுகின்றனர். புரட்சிகர இயக்கத்துக்குள் எழும் கேள்விகளையும், பல்வேறு போக்குகளையும் வெளிப்படுத்தவும், புரிந்துகொள்ளவும், விளக்கமளிக்கவும் உதவுமாகையால் இவற்றை எப்போதும் வரவேற்கிறோம். ஆனால் பு.ஜ.வில், இரண்டு பக்கங்கள் ஒதுக்கி 8, 9 கேள்விகளுக்குப் பதில்கள் அளிப்பதுதான் சாத்தியமாக உள்ளது. குழுக்களுக்கிடையே சித்தாந்தப் போராட்டம் நடத்துவதற்கான பொது அரங்கமாக பு.ஜ. நடத்தப்படவில்லை. எனவே எல்லாக் கேள்விகளுக்கு ஒரே இதழில், உடனடியாக பதில் எழுதுவதும், கட்டுரைகளை வெளியிடுவதும் எவ்வாறு சாத்தியமில்லை என்பதை பிப்ரவரி இதழிலே எழுதினோம். அதேசமயம், பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முறைகளையும் அப்போது எழுதினோம்.

'பு.ஜ. - வின் நிலைப்பாடுகளையும், மாற்று குழுக்களின் நிலைப்பாடுகள் மீதான விமர்சனங்களையும் சொல்லுவதற்கு நாம் ஒருபோதும் தயங்கியதில்லை; தவறியதில்லை. ஆளுக்கும், இடத்துக்கும், நேரத்துக்கும் தகுந்தாற்போல வாய்வழிப் பிரச்சாரம் செய்வது நமது வழக்கமாக இருந்ததில்லை. நம்மோடு மாறுபடும் கேள்விகள் எழுப்பப்படுவது விளக்கமளிப்பதற்கான வாய்ப்பாகவே அமையும்; இதிலே மாட்டிக் கொள்வதற்கு ஒன்றுமில்லை. பொதுவாக நமது வெளியீடுகள் - பிரசுரங்களையும், குறிப்பாக 'பு.ஜ.'வின் கேள்வி - பதில் பகுதியையும் படித்த மனச்சாட்சியுள்ள எவரும் இதை ஒப்புக் கொள்வர்.

ஆனால் ஏ.வீ. அண்ணாத்துரை என்ன எழுதுகிறார் பாருங்கள்! நமது பதில்களை வைத்து நாம் சந்தர்ப்பாவாதிகளா? சுயநலவாதிகளா? (வேறுஎப்படியும் இல்லை!) என்பதை வாசகர்கள் அறிந்து கொள்வார்கள் என நம்புகிறார். தனது கேள்விகளுக்கு விடை அளித்தால் மற்றபிற புரட்சிகர குழுக்களிடம் கையும் களவுமாக மாட்டிக் கொள்வோம் என்று எண்ணி தனியாகவும் கட்டுரை வாயிலாகவும் பதில் தருவதாக மழுப்பிவிடாமல் பு.ஜ.விலேயே நேரடியாக பதில் தரவேண்டும் என்கிறார்.

ஏ.வீ. அண்ணாதுரை கோருவது போலவே செய்வோம். அதேசமயம், நேரடியாகவும் வெளிப்படையாகவும் தனது சிந்தனைப் போக்கை எழுதியதற்காக நன்றியையும், பாராட்டையும் அவருக்குத் தெரிவிப்போம். ஏ.வீ. அண்ணாதுரை மாற்றுக்குழுக்களிடையே நிலவும் மனப்போக்குக்கு ஒரு வகை மாதிரியாக இருக்கிறார். நமது விமர்சனங்கள், கருத்துக்களுக்கு பதில் கூறும் துணிச்சல் இல்லாத அரசியல் கோழைகளான அவர்கள், நமது அணுகுமுறை, வடிவத்தைக் காரணம் காட்டி நாம் வறட்டுத்தனமானவர்கள் என்று அவதூறு பேசும் அவர்கள் வளரும் நிலையில் உள்ள தோழர்களிடம் எத்தகை சிந்தனைப் போக்கை உருவாக்குகிறார்கள் என்பதற்கு தக்க சான்றாக ஏ.வீ.அண்ணாதுரை விளங்குகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

# காங்கிரசு கலாச்சாரம்: காந்தியவாதிகளின் பொறுக்கிதனம்!

காங்கிரசு ஆட்சி மத்தியிலிருந்த வரை தமிழகத்தில் ஆண்ட திராவிடக் கட்சிகள் தலையாட்டி பொம்மைகளாக இருந்தன. ஆனால் இன்றோ மத்தியிலும், மாநிலத்திலும் ஓரணியில் எதிர்க்கட்சிகள் எதிர்த்து நிற்பதால், ஏதாவது அரசியல் 'ஸ்டண்ட்' அடித்தால்தான் அரசியல் உயிர்வாழ முடியும் என்றாகிவிட்டது, தமிழக காங்கிரசிற்கு. மேலும் அ.தி.மு.க. முதுகில் ஏறி தொடர்ந்து சவாரி செய்ய முடியாதவண்ணம் அரசியலைவிட்டு எந்நேரமும் ஜெயலலிதா ஓடிப் போகலாம் என்பதால் ஏற்பட்ட நம்பிக்கையின்மையும் - உருவாகியுள்ள அரசியல் வெற்றிடமும் தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்கும் பேராசையை காங்கிரசிற்குத் தூண்டியிருக்கின்றன. எனவேதான் உப்புக்கும் உதவாத ஒரு பிரச்சினையை - மறைமலைநகர் ரயில் நிலையத்திற்கு காமராஜர் பெயர் வைப்பது எடுத்துக் கொண்டு அரசியல் 'ஸ்டண்ட்' அடித்து தமிழகத்தில் காலூன்ற முயற்சிக்கிறது.

மறைமலை நகரில் காங்கிரசு, மாநாடு நடத்திய பொழுது ஏற்படுத்திய ரயில் நிலையத்திற்கு காமராஜர் பெயர் வைத்தது. அதை மறைமலையடிகள் ரயில் நிலையம் என தி.மு.க. அரசு அறிவித்துள்ளதைக் கண்டித்து இரண்டு மாதமாக ஊர்வலம், உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் என்றெல்லாம் போராடிய காங்கிரசு உச்சக்கட்டப் போராட்டமாக கடந்த மார்ச் 10ம் தேதி தமிழகம் முழுவதும் ரயில் மறியல் செய்யும் என அறிவித்தார் வாழப்பாடி ராமமூர்த்தி.

தி.மு.க. அரசு, 3200 காங்கிரசுக்காரர்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்தும், போராட்டம் நடத்தி பலர் கைதானார்கள். காங். எம்.பி. அன்பரசு மாறுவேடம் போட்டு துணைநடிகையுடன் ரயில் மறியல் போராட்டம் செய்து கைதானார். கைது செய்யப்பட்ட அனைத்து, கட்சித் தொண்டர்களுடன்தான் விடுதலையாவோமென மூப்பனார், ப.சிதம்பரம் மற்றும் காங். தலைவர்கள் சிறைக்குள் உண்ணாவிரதம் இருந்தனர். பிறகு உண்ணாவிரதத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு தாங்கள் மட்டும் வெளியே வந்துவிட்டார்கள். தி.மு.க. அரசு சிறையில் தொண்டர்களைப் பார்க்க தலைவர்களுக்கு அனுமதி மறுத்தது. சிறையதிகாரிகள் மூலம் காங். தொண்டர்களைத் தாக்கி தனது பழிவாங்கும் நடவடிக்கையை அரங்கேற்றிக் கொண்டது. இவற்றைக் கண்டித்து காங் . தலைவர்கள் அனைவரும் அறிக்கை விட்டும், ப.சிதம்பரம் வழக்கு தொடருவேன் என்று சட்டம் பேசியும் பரபரப்பை ஏற்படுத்தினார்கள். சிறையில் தாக்கப்பட்ட எம்.பி. அன்பரசு கிழிந்த சட்டையுடன் ரத்தம் சொட்ட பாராளுமன்றத்திலே போய் தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்யக்கோரி முறையிட்டு விளம்பரம் தேடினார். காங். தொண்டர்களை விடுதலை செய்யக்கோரி பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் ஒத்திவைப்பு தீர்மானம் நிறைவேற்றாததால் காங். கூட்டணி வெளிநடப்பு செய்து எதிர்ப்பைத் தெரிவித்தன. காங். தொண்டர்களை விடுதலை செய்ய மறுத்தால் அனைத்து கலெக்டர் ஆபீசு முன்பும் உண்ணாவிரதம் இருப்போம் என மிரட்டினார் வாழப்பாடி ராமமூர்த்தி.

ரயில் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் 5000 பேர் என கருணாநிதி அறிக்கைவிட்டார். உடனே வாழப்பாடி, 'ராஜ்ஜியத்தை ஆள்பவர் பூஜ்ஜியத்தை மறந்துவிட்டார்'. '50,000 பேர் கலந்துகொண்டனர்' என கருணாநிதி மொழியில் பேசி பதிலறிக்கை விட்டார். மூப்பனாரோ, 25,000 பேர் கலந்துகொண்டதாக கூறி போராட்டக் களத்தில் நேரடியாக கலந்துகொண்டவன் என தம்பட்டமடித்து வாழப்பாடி வாயை அடைத்தார்.

திருச்செந்தூரில் ரயில் பெட்டிக்கு தீவைத்ததாக வ.உ.சி. மாவட்ட இளைஞர் காங். தலைவர் ராஜசேகர் மற்றும் ஐவரையும் போலீசார் தேடிக் கொண்டிருக்கும் போதே, வன்முறையற்ற அமைதியான முறையில் எதிர்ப்பை சட்டப்படி அறிவித்து விட்டு தெரிவித்தோம். ஆனால், எங்கள் மீது தி.மு.க. அரசு வன்முறையை ஏவுகிறது என டமாரமடித்தனர்.

திராவிடக் கட்சிகள் பாணியிலேயே 'ஸ்டண்ட்' அடித்து அரசியல் பரபரப்பை ஏற்படுத்தி தமிழக மக்கள் மனதில் இடம்பிடிக்க முயல்கிறது காங்கிரசு. கருணாநிதி பயந்துவிடுவாரா என்ன? அரசியல் பழங்காட்டு நரியல்லவா?! எதிர்ப் பிரச்சாரத்தையும், பழிவாங்கும் நடவடிக்கையையும் கட்டவிழ்த்துவிட்டார்.

சிறையதிகாரி ஸ்ரீபால் மூலம் 'யாரையும் அதிகாரிகள் தாக்கவில்லை' என அறிவிக்கச் சொல்லி, 'காங்கிரசார் அரசியல் ஆதாயம் பெற இப்படியெல்லாம் போராட வேண்டுமா' என அங்கலாய்த்தார். எம்.ஜி. ஆர்., திண்டுக்கல்லுக்கு அண்ணா மாவட்டம் என பெயர் வைத்தபோது செங்கைதான் அண்ணா மாவட்டம் என போராடியதை - அரசியல் ஆதாயம் தேடியதை தமிழக மக்கள் மறந்துவிட்டதாக நினைத்துக் கொள்கிறார். காமராஜருக்கு நான் செய்யாதது என்ன என்று பட்டியல் போட்டு அறிவித்துவிட்டு தமிழையும், தமிழறிஞர்களையும் இழிவுபடுத்துகிறார்கள் என புலம்பினார். தமிழறிஞரை இழிவு படுத்தி நடத்திவரும் காங்கிரசின் போராட்டத்திற்கு எதிராக தமிழறிஞர்கள் யாரும் போராட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார் கருணாநதி. அரசுத்துறை விளம்பர நிறுவனங்கள் - போலீசு - ராணுவம் போன்றவைகள் இன்று நமக்கு இருக்கும்பொழுது வீணாக கஷ்டப்படவேண்டாம், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் எனக் கூறும் மறைமுகமான அறிவிப்புதான் இது. உடனே, பெருஞ்சித்திரனார் போன்றவர்கள் 'கலைஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க போராட்டம் நடத்தவில்லை' என தலையாட்டினார்கள்

கொலைகாரன் கத்திப்பாரா





முஸ்லீம் வேடத்தில் அன்பரசு

மேலும், சேலம் - கணவாய் புத்தூர் என்னுமிடத்தில் உள்ள பல்லவா எஞ்சினியரிங் கல்லூரி, பல்லவா அறக்கட்டளையைச் சேர்ந்தது. இந்த அறக்கட்டளையின் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி. இக்கல்லூரி தொடங்குவதற்காக அறக்கட்டளை மற்றும் நிர்வாக இயக்குனர் கூட்டுக் கணக்கில் போடப்பட்ட தொகையில் ரூ.9 லட்சம் எடுக்கப்பட்டு மோசடி நடந்திருக்கிறது. இது மூப்பனார் - வாழப்பாடி கோஷ்டிப் பூசலினால் கட்சிக்குள்ளேயே புகைந்த விசயம்தான். இதை தக்க தருணத்தில் ஊதிவிட்டு ரயில் மறியல் போராட்டத்திற்கு முன்தினம் வாழப்பாடியை கைது செய்து போராட்டத்தை பிசுபிசுக்கச் செய்தார் கருணாநிதி.

காங்கிரசு கட்சியில் இப்படி வாழப்பாடி ராமமூர்த்தி கும்பல் மறைமலைநகர் ரயில் நிலையப் பிரச்சினையை எடுத்திருப்பது தனது தலைமையை தக்கவைத்துக் கொள்வதற்கே என்பது வெளிப்படை. இதனால், வாழப்பாடி கோஷ்டிக்கு எதிர்கோஷ்டிகள் இதை வெறுத்து ஒதுங்கி வருவதால் ஒற்றுமையான போராட்டத்தை வாழப்பாடி ராமமூர்த்தியால் நடத்த முடியவில்லை. இது ரயில் மறியல் போராட்டத்திற்கு முன்பே வெளிப்பட்டு நாறியது.

தென்சென்னை மாங்கொல்லையில் 2.3.90 அன்று மாலை 'காமராஜர் ரயில் நிலையத்தின் பெயர் மாற்றத்தைக் கண்டித்து' வாழப்பாடி ராமமூர்த்தி பேசுகிறார். இந்த பொதுக்கூட்டத்திற்கு தயாரிக்கப்பட்டு ஒட்டப்பட்ட சுவரொட்டியில் மூப்பனார் கோஷ்டியைச் சேர்ந்த இளைஞர் காங். தலைவர் திலிப்குமார் பெயர் அச்சிடப்படாமல், வாழப்பாடி கோஷ்டியைச் சேர்ந்த தெ.செ.மாவட்ட காங். தலைவர் கத்திப்பாரா ஜனார்த்தனம் பெயர் மட்டும் அச்சிடப்பட்டிருக்கிறது. கூட்டத்திற்கு தலைமை

படிப்பகம்

www.padippakam.com

தாங்கிய ஜனார்த்தனன் செய்த சதிவேலை எனத் தெரிந்து ஆத்திரமடைந்த திலீப்குமார் இதை கேட்கப்போய் பொதுக்கூட்ட மேடைக்கு அருகிலேயே இருவருக்கும் வாக்குவாதம் முற்றி கைகலப்பாகி இருக்கிறது. இதில் ஜனார்த்தனன் சட்டை கிழிந்திருக்கிறது. அவமானம்(?) தாங்காமல் பழி வாங்கித் துடித்து திலிப்குமாரை கொலை செய்ய தனது வலது கரமான மகளிர் அணி தலைவி ராஜலட்சுமியை உசுப்பியிருக்கிறார் ஜனார்த்தனன். ராஜலட்சுமி, உடன் ரௌடிகளை - கொலைகார பட்டாளத்தை ஏற்பாடு செய்து அனுப்பவே, திலிப்குமார் காரை மறித்து காரிலேயே வெட்டிப் போட்டிருக்கிறார்கள்.

ஜனார்த்தனன், ராஜலட்சுமி மற்றும் இவர்களது கூலிப்பட்டாளங்கள் கைது செய்யப்பட்டனர். ஜாமீனில் வெளியே வந்த ஜனார்த்தனம் தன்னை கட்சியில் வளர்த்து விட்ட வைஜெயந்திமாலாவிடம் அடைக்கலம் தேடி போயிருக்கிறார். வைஜெயந்தி மாலா பார்க்க மறுத்துவிட்டார். வாழப்பாடியும் கண்டு கொள்ளவில்லை. இதில் தலையிட்டு யாரும் பெயரைக் கெடுத்துக் கொள்ள விரும்பாமல் ஒதுங்கியிருக்கின்றனர் அவ்வளவுதான்.

இப்படி கோஷ்டி பூசலும் அரசியலாக தலை விரித்தாடுவதை இதுவரை வடக்கிலிருந்து செய்திகளாக கேட்டுவந்த நமக்கு இன்று கண்ணெதிரே காணும் நிலை வந்து விட்டது.

கோஷ்டிப் பூசலுக்கு எந்தக் கட்சியும் விதிவிலக்கு அல்ல. காங்கிரசு கட்சியோ காந்தி காலத்திலிருந்தே (காந்தி - வல்லபாய் படேல் கோஷ்டி பூசல்கள்) கோஷ்டி பூசலை தனது பாரம்பரியமாகக் கொண்டிருக்கிறது. இன்று வாழப்பாடி - மூப்பனார் கோஷ்டி பூசல் தமிழக அரசியலிலே பரவலாகப் பேசப்படுவது. அடியிலிருந்து நுனி வரை காங்கிரஸ் கட்சியில் இழையோடியிருப்பது.

காமராஜ் பெயர் மாற்றம் கண்டித்து வாழப்பாடி நடத்திவரும் போராட்டத்தில் இறுதிவரை மவுனமாக இருந்துவிட்டு கடைசி நேரத்தில் வாழப்பாடி கைது செய்யப்பட்டதால் ரயில் மறியல் போராட்டத்தில் குதித்து தனது தலைமையில் நடந்ததாக புகழடைய விரும்பினார் மூப்பனார். வைஜெயந்திமாலா, அடைக்கலராஜ் கோஷ்டிகள் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. ''இவர்கள் மீது விளக்கம் கேட்டு நடவடிக்கை எடுக்கப்படும்'' என வாழப்பாடி அறிவித்துள்ளார். சிறையில் - ரயில் மறியல் போராட்டத்தில் கைதான தொண்டர்கள், கடைசி நேரத்தில் மூப்பனார் கோஷ்டி பங்கெடுத்துக் கொண்டு பெயர் வாங்க முயற்சித்ததை விரும்பாமல் வாய்த் தகராறு முற்றி அடிதடியில் இறங்கியிருக்கிறார்கள். இதையும், போலீசு தாக்கியதாக சித்தரித்து அனுதாபம் தேட முயன்றார்கள்.

காங்கிரசின் கீழ்மட்ட அளவிலும் சரி, மேல்மட்ட அளவிலும் சரி கோஷ்டி பூசல்கள் எந்நேரமும் கிரிமினல் அரசியலை கையிலெடுக்க காத்திருக்கின்றன. எனவே, பொறுக்கி அரசியலும் - கிரிமினல் அரசியலும் வளரவிடாமல் உழைக்கும் மக்கள் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும்.

● ராசு

# உளவாளி ராமாஸ்வரூப் விடுதலை

## ஏகாதிபத்தியத் தரகர்களுக்கு கொண்டாட்டம்



ஐந்தாண்டுகளுக்கு முன்பு ராஜீவ்கும்பல் ஆட்சிக்கு வந்தது. அதைத் தன் செல்வாக்கின் கீழ் கொண்டுவருவதற்காக அமெரிக்க, ருஷ்யா போன்ற பல ஏகாதிபத்தியங்கள் போட்டி போட்டன. அதன்விளைவாக எதிரெதிர் நாடுகளுக்கு உளவுபார்த்த சில கும்பல்கள் பிடிபட்டன. ருஷ்யா, போலாந்து, கிழக்கு ஜெர்மனிக்கு உளவு பார்த்த கூமர் நாராயண் கும்பல்; பிரிட்டன், பிரான்சுக்கு உளவு பார்த்த விமானப்படை தளபதி லார்க்கின்ஸ் சகோதரர்கள்; அமெரிக்கா, மே.ஜெர்மனி, இஸ்ரேல், தைவானுக்கு உளவுபார்த்த ராமாஸ்வரூப் கும்பல் ஆகியன முக்கியமானவை. இந்த உளவு கும்பல்களுடன் உறவு வைத்திருந்ததாக பிரதமர், அரசுத்தலைவர், இராணுவ மந்திரி அலுவலகங்களில் கூட பலர் பிடிபட்டனர். 'தார்மீக'ப் பொறுப்பு ஏற்பதாகக் கூறி அன்றைய பிரதமர் அலுவலகச் செயலாளரும் இன்றைய தமிழ்நாடு கவர்னருமான அலெக்சாண்டர் பதவி விலகினார். மத்திய அமைச்சர்கள் கே.பி.சிங் தேவ், சந்துலால் சந்திராகர் பதவியிழந்தனர்.

நான்காண்டுகளுக்குப் பிறகு குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று கூறி ராமாஸ்வரூப் கும்பலை உச்ச'நீதி'மன்றம் விடுதலை செய்துள்ளது. ''நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. கம்யூனிச எதிர்ப்பாளன். அதற்காக தைவான், மே.ஜெர்மனி, அமெரிக்கா, இஸ்ரேலுடன் சேர்ந்துகொண்டேன். இந்தியாவில் ருஷ்யாவின் நோக்கங்களை எதிர்த்தே அதற்காக கே.ஜி.பி. நிர்பந்தம் செய்து என்னைப் பிடித்து சித்திரவதை செய்தார்கள். ஒன்றரை ஆண்டு தனிமைச் சிறையிலும் இரண்டரை ஆண்டு வீட்டுச் சிறையிலும் கிடந்தேன். இதற்காக நட்டஈடு வழக்குத் தொடுப்பேன்'' என்று குதிக்கிறார் ராமாஸ்வரூப்.

அமெரிக்கா, தைவான் போன்ற நாடுகளில் இருந்து அந்நிய செலாவணி விதியை மீறிப் பணம் பெற்றுக்கொண்டு ருஷ்ய, கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்தை நடத்தினார்; அதற்காக அரசியல் தலைவர்கள் (எம்.பி.க்கள், மந்திரிகள்), பத்திரிக்கையாளர்களை வளைத்துப்போட்டு வெளிநாடுகளுக்கு 'உல்லாச' பயணங்கள் கூட்டிப் போனார்; ருஷ்ய எதிர்ப்பு அரசியல், பொருளாதாரத் தரகு வேலைகள் செய்ததோடு, இந்திய இராணுவ ரகசியங்களைக் கடத்தினார் - இவை முக்கியமான குற்றச்சாட்டுக்கள்.

இவற்றிலே, வெளிநாடுகளுக்கு, தான் கொடுத்த செய்திகள் அதிகார ரகசியச் சட்டத்தின் கீழ் வராது; மற்ற குற்றச்சாட்டுகள் தண்டனைக் குரியவை அல்ல என்பதுதான் ராமாஸ்வருபின் வாதம். மாதம் 150 ரூபாய் சம்பளத்தில் காப்பீட்டுக் கழக தள அதிகாரியாகத் தொடங்கிய ராமாஸ்வரூப், இன்று பங்களா, மூன்று வியாபார அடுக்குமாடித் தளங்கள், டில்லியின் மத்தியில் ஆடம்பர அலுவலகம், 4 கார்களுக்கு உரிமையாளர். இத்தனையும், இந்தியாவில், தைவானுக்கு ஏகபோக வியாபார பிரதிநிதியாகவும் செய்திகள் சேகரித்து விற்கும் செய்திநிறுவன உரிமையாளராகவும் ஆற்றிய தொழில்கள் மூலம் சம்பாதித்தவை என்கிறார்.


உண்மையில் அவர் என்ன செய்தார்? 370 எதிர்க்கட்சி ஆளும்கட்சி எம்.பி.க்களைக் கொண்ட இந்தோ- ஜெர்மன் நாடாளுமன்ற குழு, மாஜி ராணுவ வீரர் வேலை உதவிக் கமிஷன், கம்யூனிச எதிர்ப்பு ஆகிய அனைத்துலக இணைக்குழு, ஜனநாயக வழக்கறிஞர்கள் சங்கம், ஆஃப்கானின் நண்பர்கள் சங்கம் போன்ற கம்யூனிச எதிர்ப்பு, ருஷ்ய எதிர்ப்பு அமைப்புகளை வைத்து நடத்தினர். மத்திய மந்திரிகள், எம்.பி.கள், சபாநாயகர் பலராம் ஜாக்கர், ராஜீவ் குடும்பத்தினர், மந்திரிகள் குருபாதசாமி, உபேந்திரா, நாஞ்சில் மனோகரன், முன்னாள் மந்திரி ராஜாராம் எனப் பலரையும் பிடித்து வைத்துக் கொண்டார். இதனால் அமெரிக்கா, மே.ஜெர்மன், இஸ்ரேல், தைவான் நாடுகளுக்கு அரசியல், பொருளாதார, இராணுவத்தரகு வேலை பார்த்தார். தேவையான போது கம்யூனிச, சீன எதிர்ப்புக்காகவும், இஸ்ரேலுடன் கள்ள உறவு கொள்ளவும் இந்திய உளவுத் துறைக்கும் வேலை செய்தார்.

அதிகார ரகசியச் சட்டத்தின்கீழ் குற்றமற்றவர் என்று விடுதலையானாலும் இந்தியநாட்டுக்கு எதிராக அரசியல், பொருளாதார, இராணுவத் தரகு வேலைகள் பார்த்தான் என்பது அவரே தரும் வாக்குமூலங்கள் நமக்கு நிரூபிக்கின்றன. இதேபோல சட்டபூர்வமாகவும், பகிரங்கமமாகவும் ருசிய சமூக ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள் இந்தோ - சோவியத் கலாச்சாரக் கழகம், ஆஃபிரிக்க - ஆசிய சமாதான அமைப்பு போன்று பல பெயர்களில் உலாவுகின்றனர். இவ்ர்கள் அனைவரும் நமது நாட்டு நலன்களை ஏதாவது ஒரு வல்லரசுக்கு அடகு வைப்பதற்காக அரசியல் தரகு வேலைகளைச் செய்பவர்கள்தாம். அதற்காக இந்த அமைப்புகள் அனைத்தையும் தடை செய்து, தண்டிக்கவும் வேண்டும்.

21. [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

www.padippakam.com





இதோ இவர்கள், ஆயிரம் ஆயிர மாண்டுகளாக மக்கள் மீது பூட்டப்பட்ட பிற்போக்கு மூடத்தளைகளை உடைத்தெறியப் போராடும் பகுத்தறிவாளர்கள். அந்தாஷ் ரத்தா நிர்மூலன் சமிதி (மூடநம்பிக்கை ஒழிப்பு கமிட்டி) அமைப்பைச் சேர்ந்தவர்கள். பூனா நகரத்தில் மூடநம்பிக்கை ஒழிப்பு போராட்டத்தின் ஒரு வடிவமாக சாதாரணமாக இப்படி தீ மிதி நடத்தி காட்டி விளக்குகிறார்கள்.

சுகவீனம் முதல் பண கஷ்டம் வரை தங்கள் பிரச்சனைகளுக்கு உண்மையான காரணத்தை அறியவிடாமல், வீதி சாமியார் முதல் சாயிபாபா வரை வயிறு வளர்க்க மக்களை ஏமாற்றுகிறார்கள். இதற்கு எதிராக மக்களின் மீது அளவுகடந்த விசுவாசத்தோடு, அவர்களைப் பகுத்தறிவு வெளிச்சத்திற்கு கொண்டுவர, மக்களுக்கு புரிந்த வடிவங்களில் சளையாது போராடுகிறார்கள் பகுத்தறிவாளர்கள்.

இதோ, பதவியிழந்த பாசிச சந்நியாசி என்.டி.ஆரும், பார்ப்பன குடியரசு தலைவர் தம்பதிகளும் பக்தியோடு திருப்பதி பெருமானை வேண்டுகிறார்கள்.

ஏறக்குறைய 252 கோடி ரூபாய் நிரந்தர சொத்தும் ஆண்டொன்றுக்கு சுமார் 80 கோடி ரூபாய் காணிக்கையும், 600 கிராமங்களில் நிலங்கள் வீடுகளும் கொண்ட குட்டி அரசாங்கம் திருப்பதி 'தேவஸ்தானம்'. இக்கோயிலுக்கு நாளொன்றுக்கு பூமட்டும் 1000 கிலோ செலவாகிறதாம்! பிரசாதம் விற்பனையில் மட்டும் ஆண்டுக்கு வரும் தொகை ரூ.1.87 கோடி! இதன் உயர் அதிகார அமைப்பான, 'திருமலா - திருப்பதி தேவஸ்தானத்தை' தெலுங்கு தேசமும் காங்கிரசுக் கட்சியும்தான் கட்டுப்படுத்துகின்றன அளவே இல்லாமல் பலகோடி ரூபாய்களை பல வழிகளில் சுருட்டுகின்றனர். சமீபத்தில் கூட உண்டியல் சில்லறையோடு தங்க ஆபரணங்களையும் கடத்திய திருட்டு வெளியில் வந்தது. ஆனால் பக்தர்களுக்கு வழங்கப்படும் 'லட்'டோ கடந்த 10 ஆண்டுகளில் 500 'கிராமி'லிருந்து 175 'கிராமா'க சுருங்கிவிட்டது!

அரசு பிரச்சார சாதனங்களிலிருந்து ஆபாச சினிமாக்கள் வரை பக்திரசம் சொட்டச் சொட்ட பிற்போக்கு, மூடநம்பிக்கை மதவெறி கருத்துக்கள் மக்களிடம் திணிப்பு ஒருபுறம்! மக்களை பகுத்தறிவு வெளிச்சத்திற்கு கொண்டுவர உடல்வருத்தி பல தியாகங்கள் புரிந்து போராட்டம் நடத்தும் உண்மையான மக்கள் சேவகர்கள் மறுபுறம் நம்மை போண்டியாக்கும் - நம் அறிவுக் கண்ணை கட்டிப் போடும் - குருடாக்கும் பிற்போக்கு, மூட நிலப்பிரபுத்துவ கலாச்சார சகதியிலிருந்து நாம் வெளிவருவது எப்போது?

# இதுதான் இன்றைய இந்தியா



படிப்பகம்